# ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

JULY—1955






விஞ்ஞானி ஐன்ஸ்டின்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94–95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

# ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94-95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

# "ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "**புதுமுறை சங்க வாசகங்களை**" அல்லது "**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50—க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆடர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "**ஆரம்பக்கல்வி**" மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M .O. மூலம் அனுப்பவும்.

## புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 4 0 | 8 | 4–5–'55 |
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 8 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 23 | 19–5–'54 |

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 1–0–0 அனுப்பவும்.

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 16 | ஜூலை 1955 | இதழ் 7


# எழுத்திலே இன்பம்! செயலிலே என்று?

"ஆகா! இது அல்லவா சிறந்த திட்டம்!"

"ஒரு திட்டமென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்!"

"எண்ண எண்ண இனிக்கும் வண்ணத் தாமரையாக அல்லவா இருக்கிறது இத் திட்டம்!"

"ஐந்தாண்டுத் திட்டம் என்கிற பெயர் இதற்கல்லவா பொருந்தும்?"

"இப்படிப்பட்டதோர் அரிய திட்டத்தை இந்தியாவிலன்றி வேறு எந்த நாட்டிற் காணமுடியும்?"

இந்திய அரசாங்கத்தின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை இப்படியெல்லாம் பாராட்டுகின்றனர் இந்தியாவிற் பல தோழர்கள்.

இனிமையும் எழிலும் ததும்பிடும் திட்டம் என்கின்றனர். மக்கள் வாழ்க்கையை மாண்புறச் செய்வது என்கின்றனர். வேலையில்லாக் கொடுமையை விரைந்தோடவைப்பது என்கின்றனர். பாலைவனத்தையும் சோலைவனமாக்கிடும் பாங்கு மிகுந்த ஏற்பாடு என்கின்றனர்.

பாராட்டுரையும் புகழ்மாலையும் ஏராளமாகத்தான் சூட்டப்படுகின்றன திட்டத்திற்கு. என்றாலும் அந்தத் திட்டத்தில் கல்வியின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு தெரியுமோ?

திட்டத்தின் மொத்தச் செலவு 2200 கோடி ரூபாய்.

இதில் 150 கோடி மட்டும்தான் கல்வியின் வளர்ச்சிக்கென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது நியாயமா?—கேட்டோம் நாம்.

ஆகுமா இந்த அலட்சியம்?—வினவிற்று நாடு.

முறைதானா இந்தப் போக்கு?—கடாவிற்று அறிஞர்தம் உள்ளம்.

"கல்வியின் வளர்ச்சியே இந்தியாவின் வளர்ச்சி என்று எல்லோரும் சொல்கின்றீர்கள். கல்வியின் நிலைமை உயர்ந்தாலன்றி இந்தியாவின் நிலைமை பொலிவுறாது என்று அத்தனைப் பேரும் ஒப்புக்கொள்கிறீர்கள். கல்வியின் அருமை—கல்வியின் பெருமை—கல்வியின் சிறப்பு—கல்வியின் செழுமை என்று ஒருவர் தவறாமல் போற்றித் திரு அகவல் பாடுகிறீர்கள். என்றாலும் கல்விக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள தொகை இவ்வளவு குறைவாக இருக்கிறதே, என்ன காரணம் இதற்கு? ஏன் இந்த அநீதி?" என்று, ஆசிரியர் உலகம், அமைதியான குரலில், ஆனால் ஐயம் திரிபு அற்ற முறையில் விளக்கிக் கேட்டது.

விடை கிடைக்கவில்லை ஆட்சியாளர்களிடமிருந்து.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை 150 கோடி என்கிற அந்தச் சிறு அளவிலேயே முடங்கிவிட்டது.

1956–ம் ஆண்டோடு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் முடிவடையப் போகிறது. என்றாலும் இந்தியாவின் கல்வித்துறை,

இதுவரையில், குறிப்பிடத்தக்க பெரிய வளர்ச்சி எதனையும் பெறவில்லை.

ஒன்று முதல் ஐந்து வரையுள்ள வகுப்புகளிற் படிக்கவேண்டிய வயதுள்ள பிள்ளைகளில் நூற்றுக்கு ஐம்பது பேர்தான் ஆரம்பப் பள்ளிகளிற் படித்து வந்தனர்—திட்டம் தீட்டப்படுவதற்கு முன்பு.

திட்டத்தின் வயது கிட்டத்தட்ட முடிந்துவிட்ட இந்த நேரத்திலும் அந்த நூற்றுக்கு ஐம்பது பேர்தான் ஆரம்பப் பள்ளிகளிற் படித்து வருகின்றனர்.

6, 7, 8 ஆகிய வகுப்புகளிற் பயில வேண்டிய பிள்ளைகளில் நூற்றுக்குப் பதினைந்து பேர்தான் பள்ளிகளில் இருந்தனர் முன்பு.

இப்போதும் நிலைமை அதுவேதான்.

வறுமையும் குடும்பச் செலவும் வாட்டி வதைத்திடும் வேதனைக் களஞ்சியமாக இருந்தது ஆரம்ப ஆசிரியரின் உள்ளம்—திட்டம் வருவதற்கு முன்னால்.

இப்போதும் அந்த உள்ளம் வேதனை வெள்ளத்திலேதான் மிதந்தபடி இருக்கிறது.

ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் ஆட்சியாளர்களால் உயர்த்தப்படாத காரணத்தால் அவர்கள் தங்களுடைய முழு கவனத்தையும் கல்வித்துறையிலே ஈடுபடுத்த முடியவில்லை முன்னாளில்.

இந்நாளிலும் நிலைமை அன்று கண்டதற்கு அழிவில்லாமல் தான் இருந்துவருகிறது.

“மனிதர்கள் வரலாம், மனிதர்கள் போகலாம். ஆனால் என்றென்றும் நான் முன் இருந்தபடியேதான் இருந்து கொண்டிருக்கிறேன்” (Men may come and men may go. But I go on for ever) என்று ஆங்கிலத்திலே ஒரு பாடல் உண்டு.

ஏறத்தாழ இந்த நாட்டின் ஆரம்பக்கல்வி நிலையும் ஆரம்ப ஆசிரியர் நிலையும் அப்படித்தான் இருந்து வருகின்றன.

புதிய மந்திரி சபைகள் வருகின்றன. பழைய மந்திரி சபைகள் போகின்றன. ஆனால் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியோ முன் இருந்தபடியேதான் இருந்து வருகிறது.

புதிய திட்டங்கள் பிறக்கின்றன. பழைய திட்டங்கள் இறக்கின்றன. ஆனால் ஆரம்ப ஆசிரியரின் வறுமையோ அவரை விட்டுப் போகேன், போகேன் என்று பிடிவாதம் பிடிக்கிறது.

இந்த விசித்திர நிலையை முதல் ஐந்தாண்டுத் திட்டம் சிறிதள வும் மாற்றவில்லை.

ஆனால் மாற்றப் போகிறது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்கள்.

1956-ம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரையில் இரண்டா வது திட்டம் நடைமுறையில் இருக்குமாம்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்துக்கொள்ள இந்திய அரசாங்கத்தின் கல்வி இலாகா, தன்னுடைய ஆலோசனை களையெல்லாம் ஒன்று திரட்டி அவற்றிற்கு ஓர் உருவம் கொடுத்து அந்தத் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டக் குழுவினிடம் சமர்ப்பித் திருக்கிறதாம்.

கல்வி இலாகாவின் அந்த ஆலோசனைகள் அத்தனையும் திட்டக் குழுவினரால் ஒப்புக் கொள்ளப்பட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டால், அந்தத் திட்டத்தில், கல்வியின் வளர்ச்சிக்காக 1080 கோடி ரூபாய் செலவிட வேண்டி வருமாம்.

1080 கோடி ரூபாய் செலவிடப்பட்டால் கீழ்க்கண்ட ஐந்து நன்மைகள் நம் நாட்டிற்கு விளையுமாம்.

ஒன்று:-6 முதல் 11 வயது வரையிலுள்ள பிள்ளைகளில், பள்ளிக் குச் செல்வோரின் எண்ணிக்கை, நூற்றுக்கு ஐம்பது என்று இப் போது இருப்பது, நூற்றுக்கு எழுபத்தைந்தாக உயரும்.

இரண்டு :—11 முதல் 14 வயது வரையுள்ள பிள்ளைகளில், பள்ளிக்குச் செல்வோரின் எண்ணிக்கை, நூற்றுக்குப் பதினைந்தாக இப்போது இருப்பது, நூற்றுக்கு முப்பதாக உயரும்.

மூன்று :—உயர்நிலைப் பள்ளிகளிற் படிக்கவேண்டிய வயது டைய பிள்ளைகளில், பள்ளி செல்வோர் எண்ணிக்கை, நூற்றுக்குப் பத்தாக இப்போது இருப்பது நூற்றுக்கு இருபதாக உயரும்.

நான்கு :—பயிற்சி பெறாத செகண்டரி கிரேட் ஆரம்ப ஆசிரி ரியன் அடிப்படை ஊதியம் ரூபா 50 ஆகவும், பயிற்சி பெற்ற செகண்டரி கிரேட் ஆரம்ப ஆசிரியரின் அடிப்படை ஊதியம் ரூபா 75 ஆகவும் உயர்த்தப்படும்.

ஐந்து :—உயர் நிலைப் பள்ளிகளிற் பணியாற்றும் ஆசிரியர்கள் பயிற்சி பெறாத பட்டதாரிகளாயின் அடிப்படை ஊதியம் ரூபா 100 ஆகவும், பயிற்சி பெற்ற பட்டதாரிகளாயின் ரூபா 150 ஆகவும் உயர்த்தப்படும்.

இந்த ஐந்து ஏற்பாடுகளும் உண்மையிலேயே நடைமுறைக்கு வருமானால் இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றுச் சுவடியிலே ஒரு புதிய பொன்னேடு சேர்க்கப்படுகிறது என்றுதான் பொருள். நம்முடைய நாட்டின் வளர்ச்சியிலே ஒரு சிறந்த அத்தியாயம் ஆரம்பமாகிறது என்றுதான் அர்த்தம்.

இந்த ஏற்பாடுகள் அத்தனையும், கனவுலகைத் தாண்டி. நினைவுலகிற் புகுந்து, வாழ்க்கைப் பாதையிலே வீரநடை போடுமானால், ஆரம்ப ஆசிரியர்களின் நீண்டகாலத் துயரம், கணிசமான அளவுக்குக் குறைந்துவிடும். கல்வியின் தரமும் நிச்சயமாக உயரும். சமுதாயத்தின் அறிவு நிலையும் ஒரு புதிய உயரத்தை அடையும்.

ஆனால் இந்த இன்பக் கனவுகள் பலிக்குமா? திட்டம் நடைமுறைக்கு வருமா? ஆசிரியர்தம் நெஞ்சத்தில் இன்பம் கொஞ்சும் நிலைமை உருவாகுமா? இன்பத்தென்றல் வீசாவிட்டாலும் போகட்டும். துன்பத் தேளின் கொடுக்குகளாவது வெட்டப்படுமா?

உறுதி கூறுவதற்கில்லை.

இந்தத் திட்டங்கள் யாவும் இந்திய அரசாங்கக் கல்வி இலாகாவின் ஆலோசனைகளே தவிர, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதிகளாக இன்னமும் மாறவில்லை.

திட்டம் தீட்டும் குழுவினர் இந்த ஏற்பாடுகள் அத்தனையையும் ஒப்புக் கொண்டால்தான் இவை அமுலுக்கு வரும்.

அப்படி அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமானால் கல்வியின் வளர்ச்சிக்காக 1080 கோடி ரூபாயை ஒதுக்க அவர்கள் தயாராக இருக்கவேண்டும்.

ஆனால் அவர்கள் கல்விக்காக ஒதுக்கப்போவதோ 500 கோடி ரூபாய்தான் என்று நாளிதழ்கள் தெரிவிக்கின்றன.

கல்விக்கான தொகை இப்படிச் சுருங்கி விடுமானால் கல்வி இலாகாவினர் தெரிவித்துள்ள ஏற்பாடுகளும் அவற்றின் அளவில் சுருங்கித்தான் தீரும். குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தர இருப்பதாகச் சொல்லப்படுகிற ஊதிய உயர்வு கிடைக்காமலே போய்விடலாம்.

இந்த ஆபத்து நேராமல் இருக்க வேண்டுமானால், கல்வி இலாகாவினர் தெரிவித்துள்ள யோசனைகளை அப்படியே ஒப்புக் கொள்ளும்படி திட்டம் தீட்டும் குழுவினரை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இதற்காகக் கூட்டங்கள் பல போட்டு தீர்மானங்கள் நிறை வேற்றி அனுப்பவேண்டும்.

ஆங்காங்குள்ள ஆரம்ப ஆசிரியர் கழகங்கள் இந்தத் துறையில் முழு மூச்சோடு ஈடுபட வேண்டும்.

இந்தத் துறையில், மாகாண அரசாங்கத்தார் தங்களுடைய முழுச் செல்வாக்கையும் ஆசிரியர்கள் பக்கம் பயன்படுத்த வேண்டும் என்று, அவர்களையும் நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஆசிரியத் தோழர்களே, செயலில் ஈடுபடுங்கள். தீர்மானங் கள் நிறைவேற்றுங்கள். டில்லியிலுள்ள திட்டக் குழுவிற்கு உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள். நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில், பல்லாயிரக்கணக்கில், கல்வி இலாகாவின் கருத்துகளை ஆதரித்து ஆசிரியர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் கையெழுத்துகளை வாங்கி அனுப்புங்கள். சட்டசபை உறுப்பினர்களையும் பாராளு மன்ற உறுப்பினர்களையும் நேரில் கண்டு இந்தத் துறையில் தங்க ளால் இயலும்பணியை உடனே புரியும்படி வற்புறுத்துங்கள். பத்திரி காசிரியர்கள் ஒவ்வொருவரையும் பேட்டி கண்டு கல்வி இலாகாவின் கருத்துகளை ஆதரித்துத் தலையங்கம் தீட்டும்படி செய்யுங்கள். அரசி யல் கட்சிகள், பொது நல சங்கங்கள், பஞ்சாயத்து மன்றங்கள், நகராட்சி—மாவட்ட ஆட்சி மன்றங்கள், ஒவ்வொன்றிலேயும் கல்வி இலாகாவின் திட்டங்களை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேறச் செய்யுங்கள்.

இது ஜனநாயக சகாப்தம்; மக்களாட்சிக் காலம். இந்தக் காலத்தில் பேசத் தெரிந்தவன்தான் வாழமுடியும். கிளர்ச்சிகள் புரிந்தால்தான் நன்மைகள் அடைய இயலும். கவனமிருக்கட்டும் கவனமிருக்கட்டும்.

---

## சிந்தனைக்கு விருந்து

ஆசிரியர்க் கெல்லாம் ஆசிரியாக இருக்கும் பேராசிரியர் ஒருவர் உண்டு' அவர் பெயர்தான் திருவாலர் அநுபவம்! ஆனால் ஒன்று! அவருடைய பள்ளிக்கூடத்தில் கட்டணம் மிக அதிகம்.

— கார்லைல்

ஒரு முறை தவறி விழு' குற்றமில்லை. வீனால் ஒரே கல்லால் தடுக்கப்பட்டு இரண்டு முறை தவறி விழாதே, அது முட்டாள்தனம்.

— சிசரோ

# காலமும் கருத்தும்

## பொற்கோயில் போராட்டம்

வெற்றி! வெற்றி! மகத்தான வெற்றி! நீதிக்கும் நேர்மைக்கும் வெற்றி! அறம் வெல்லும் என்பதைஎடுத்துக்காட்டும் அருமையானவெற்றி! அடக்கு முறைகள் அடுக்கடுக்காகத் தோன்றினாலும், சிறைச்சாலைகள் சீறிப் பாய்ந்தாலும், குண்டாந்தடிகள் சுழன்று வீசினாலும் இறுதி வெற்றி மக்கள் சக்திக்கே என்பதை விளக்கிக் காட்டும் எழில் மிகு வெற்றி! ஆமாம் நண்பர்களே! வடநாட்டில், பாஞ்சாலத்துப் பகுதியில், சீக்கிய இனத்தவர் மேற்கொண்டு தொடுத்த அறப்போர் முழுவெற்றி பெற்றுவிட்டது.

சீக்கிய இனத்தவர்கள், பாஞ்சாலத்தில் தாங்கள் வாழும் பகுதியைத் தனி மாகாணமாக அமைக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறார்கள். சீக்கியர்களுக்கென்று ஒரு தனி மொழி இருக்கிறது. அவர்களுக்கென்று ஒரு தனி மதம் இருக்கிறது. தங்களுடையன என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளத்தக்க ஒரு தனிப் பண்பாடும், வரலாற்றுப் புகழும், சீரும் சிறப்பும் அவர்களுக்கு உண்டு. இத்தனையையும காட்டி அவர்கள் தங்களுக்கென்று ஒரு தனி மாகாணம் வேண்டும் என்று உரிமை முழக்கம் எழுப்பி வருகிறார்கள். தங்களுடைய வட்டாரம் தனி மாகாணமாக அமைந்தால்தான் தங்களுடைய மொழியும் கலையும் இனமும் அதன் வளர்ச்சியும் முழுப் பொலிவு அடையமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அந்தக் கருத்து முற்றிலும் நியாயமானது. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு மாகாணங்களும் மொழியின் அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டாக வேண்டும். சென்னை மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பகுதியும், திருவாங்கூர் கொச்சியுடன் உள்ள தமிழ்ப் பகுதியும் ஒன்றாக இணைக்கப்பட்டு தமிழ் மாகாணம் உருவாக்கப் படவேண்டும். அது போலவே, ஐதராபாத் வட்டாரத்திலுள்ள தெலுங்குப் பகுதி ஆந்திரமாகாணத்துடன் இணைக்கப்பட்டு முழுமையான ஆந்திர மாகாணம் காணப்பட வேண்டும். அவ்வாறே ஐதராபாத், சென்னை, பம்பாய், மத்தியப் பிரதேஷ் ஆகிய பல்வேறு மாகாணங்களில் சிதறிக் கிடக்கும் கன்னடப் பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு கன்னட மாகாணம் நிறுவப்பட வேண்டும். இந்த விதமாக இந்தியாவில் உள்ள முக்கியமான

மொழிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி மாகாணம் அமைக்கப் படவேண்டும். மொழியின் வழியில் மாகாணங்கள் அமைந்தால் தான் அந்தந்த மாகாணத்தில் அந்தந்த மொழியும், அதனைப் பேசும் மக்களும், அவர்களின் ஒற்றுமை உணர்வும், வலிவும் வனப்பும் அடைய முடியும். அப்படியின்றிப் பல்வேறு மொழிகளைப் பேசும் பல்வேறு திறத்தினரையும் ஒரே மாகாணத்தில் வலுக்கட்டாயமாகப் பிணைத்து அடைத்துவைத்திருக்கும் இன்றைய முறை, பல்வேறு மொழியினருக்கிடையே பூசலையும் பகையையும்தான் வளர்த்துவரும் எனவேதான் காந்தியடிகள், இந்தியாவிடுதலைபெற்றவுடனேசெய்யப்படவேண்டிய முதற் காரியம் மொழிவழி மாகாண அமைப்புத் தான் என்று திட்டவட்டமாக இயம்பிவந்தார். இதே காரணத்தால்தான் அனைத்திந்திய காங்கிரஸ் 1922–ம் ஆண்டிலேயே மொழிவழி மாகாண அமைப்பைத் தன்னுடைய அடிப்படைக் கொள்கைகளில்ஒன்றாக அமைத்துக் கொண்டுவிட்டது. இந்த உண்மையை நன்றாக உணர்ந்ததால்தான் கம்யூனிஸ்ட் கட்சி, சோஷியலிஸ்ட் அமைப்பு, திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் முதலிய எல்லா அரசியல் கட்சிகளும் மொழிவழி மாகாணக் கொள்கையை மனப் பூர்வமாக ஒப்புக்கொண்டிருக்கின்றன. மக்களின் உள்ளமும் இந்தக் கொள்கையைத்தான் விரும்புகிறது என்பதை எவரும் மறுக்க இயலாது. நிலைமை இப்படியிருக்கும்போது, ஏனோ தெரியவில்லை, இந்திய அரசாங்கம், இந்தக் கொள்கையை இன்னமும் நடைமுறைக்குக் கொண்டு வாராமலிருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் இந்தப் போக்கு மக்கள் மன்றத்தில் அதிருப்தி உணர்ச்சியையே அலை மோதவைக்கிறது.

ஏனைய மொழியினரைப் போலவே சீக்கிய இனத்தவரும், இந்தத் துறையில், இந்திய அரசாங்கம், இன்னமும் நல்லதோர் முடிவுக்கு வாவில்லையே என்பதைக் குறித்து வேதனையும் வருத்தமும் அடைந்திருக்கின்றனர். தங்களுடைய உள்ளக்கிடக்கையை ஆட்சியாளர்களுக்கு அறிவிக்கவும், சீக்கிய மக்கள் அத்தனைப் பேரும் சீக்கிய மாகாணம் தனியாக அமைவதையே விரும்புகின்றனர் என்பதை உலகுக்குத் தெரிவிக்கவும் பொதுக்கூட்டங்கள் கூட்டுவது, ஊர்வலங்கள் நடத்துவது முதலிய ஜனநாயக முறைகளைக் கையாளலாயிற்று சீக்கியர்களின் தனிப்பெரும் கட்சியாகிய அகாலி தாள்.

“கூட்டமா கூட்டுகிறீர்கள்? கூடாது. ஊர்வலமா நடத்துகிறீர்கள்? தகாது.” என்று சீறி யெழுந்து தடையுத்தரவை வீசிற்று பாஞ்சால மாநிலத்துக் காங்கிரஸ் அரசாங்கம். மொழி வழி மாகாணக் கோரிக்கையை வற்புறுத்தி ஊர்வலமோ கூட்டமோ நடத்தக்கூடாது என்கிற தடையுத்தரவு அமிர்த சரஸ்

வட்டாரத்தில் ஏப்ரல் 10–ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டது. மே 10–ம் தேதி முதல் மேலும் இரண்டு மாதங்களுக்கு இந்தத் தடையுத்தரவு நீடிக்கப்பட்டது. தடையைக் கண்டு உள்ளங் கொதித்தனர் சீக்கிய இளைஞர் கள். இப்படியும் ஒரு தடையா-இதனையும் நாம் பொறுப்பதா என்று வீரமுழக்கமிட்டனர். கூட்டங்கள் கூட்டுவதும், ஊர் வலங்கள் நடத்துவதும் சட்ட விரோதமான செயல்கள் அல்லவே — பிறகு ஏன் அவற்றிற்கும் தடை என்று கேட்டனர். தனி மாகாணம்தான் தரவில்லை — அதனைத் தா என்று கேட்பது கூடவா குற்றம் என்று கடாவினர். கூட்டத்தைக் கூட்டி, ஊர்வலத்தை நடத்தி, தங்கள் உள்ளக் கருத்தைக் கூறுவதற்குக் கூட ஒரு தடை பிறக்குமானல் அந்தத் தடையைத் தகர்த்தெறிவதே மக்கள் கடமை என்று அகாலி தாள் கருதிற்று. மே 10–ம் தேதி முதல் தடையை மீறிக் கூட்டம் கூட்டுவது என்றும், அதற்காகச் சிறைவாழ்வை அளிக்க அரசாங்கம் முன்வருமானல் அந்தச் சிறையையும் ஏற்பது என்றும் அந்தக் கழகம் முடிவுசெய்தது. அந்தத் தேதிமுதல் அந்தமுடிவிற்கிணங்கி சீக்கியர்களின் தனிப் பெருந்தலைவராகி மாஸ்டர் தாராசிங் தடையை மீறிச் சொற்பொழி வாற்றினர். எனவே சிறை அவரை வரவேற்றது. சிறைதானே, அதற்கா அஞ்சுவோம் என்று கூறிய வண்ணம் மேலும் மேலும் இளைஞர்கள் தடையை மீறலாயினர். நாள்தோறும் புதுப் புது இளைஞர்கள் அறப்போரில் ஈடுபடலாயினர். அமிர்தசரஸ்நகரத்தில், சீக்கியர்களின் உள்ளத்தைக் கவர்ந்த பொற்கோயில் முன்பு, அறப்போர் தொடர்ந்து நடைபெற்றது.

64 நாட்கள் முடிந்தன அறப்போர் தொடுக்கப்பட்டு என்றும் வாலிபர்களின் பட்டாளம் போராட்டத்தை நிறுத்தவில்லை. கடைசியில் வேறு வழியில்லை. அரசாங்கம் பணிந்து கொடுத்தது. தடை வாபீசாயிற்று. ஜுலை 12–ம் தேதியன்று, பாஞ்சாலத்து மந்திரி சபை, தான் மே மாதத்தில் பிறப்பித்த தடை உத்தரவைத் திரும்பப் பெற்றது. பொற்கோயில் போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது.

மொழிவழி மாநிலம் தேவையா இல்லையா என்பதிலே அரசாங்கத்திற்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம். மொழியின் வழியில் மாகாணங்களை அமைப்பதால் நாட்டின் அமைதிக்குக் கேடு விளையும் என்பது அரசாங்கத்தின் எண்ணமாக இருக்கலாம். ஆனல் அரசாங்கத்திற்கு அந்த எண்ணம் இருக்கிறது என்கிற காரணத்திற்காக, அதற்கு மாறன கருத்தை யாருமே எழுப்பக் கூடாது என்று சொன்னல், அது முறையாகாது. ஜன நாயக ஆட்சி முறையில், யாருக்கும், தன் உள்ளக் கருத்தை ஊராருக்கு

எடுத்துச்சொல்ல நிச்சயமாக உரிமை உண்டு. அந்த உரிமையைப் பறிப்பது பெருங் குற்றம். அந்தக் குற்றத்தை ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் அரும் பெரும் தலைவர்களே செய்தால் கூட குற்றம் குற்றம் தான். எனவேதான் அமிர்தசரசில் உள்ள பொற்கோயில் முன்பு நடைபெற்ற போராட்டத்தை நாடெங்குமுள்ள நல்ல உள்ளங்கள் அன்போடு வரவேற்றன. அந்தப் போராட்டம் வெற்றி பெற்றதைக் கண்டும் முழு மகிழ்வு அடைகின்றன.

## நற்செயல் புரிந்த நகராட்சி மன்றம் !

ஆம்—இப்படித்தான் இயம்பிப் பாராட்டத் தோன்றுகிறது—சென்னை நகராட்சி மன்றத்தை அல்ல—பம்பாய் நகரத்து ஆட்சி மன்றத்தை. இந்தத் திங்கள் மூன்றாம் நாள் முதல், ஞாயிற்றுக்கிழமை, பம்பாய் நகரத்திலுள்ள ஏழைச் சிறுவாகட்கெல்லாம் மகிழ்ச்சிக்குரியதோர் திரு நாளாகிவிட்டது. காரணம்-பம்பாய் நகராட்சி மன்றத்தார் தொடங்கியுள்ள சீரியதோர் நற்செயல்தான்.

இனி, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையன்றும், காலை 8 மணி முதல் 10 மணிக்குள்ளாக, பம்பாய் நகரத்திலுள்ள ஏழைப் பிள்ளைகள், நகராட்சி மன்றத்தார் ஆங்காங்கே அமைத்துள்ள பால் விநியோக நிலையங்களில் ஏதேனும் ஒன்றிற்குச் செல்லலாம். சென்றால், ஆளுக்கு எட்டவுன்ஸ் பால் இலவசமாக அளிக்கப்படும். தற்போது இத்தகைய நிலையங்கள் பதினைந்து மட்டுமே அமைக்கப்பட்டிருக்கின்றன. திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்கிற நிலை ஏற்படுமானால், மேலும் 85 இடங்களில் இத்தகைய நிலையங்களை நிறுவுவது என்றும், மொத்தம் ஒன்றரை லட்சம் பிள்ளைகளுக்கு இலவசப் பால் அளிப்பது என்றும், பம்பாய் நகராட்சி மன்றம் முடிவு செய்திருக்கிறது.

இது, புதிய திட்டம். ஆனால் ஏற்கெனவே ஒரு திட்டம் இதே நகராட்சி மன்றத்தாரின் திட்டப்பட்டு இந்த மன்றத்தாரால் ஆரம்பப்பள்ளிகள் அத்தனையிலும் நடைமுறையில் இருந்துவருகிறது. அந்தத் திட்டத்தின்படி, எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும், அந்தப் பள்ளிகளில் பயிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு, பகல் உணவும் பாலும் இலவசமாக அளிக்கப்பட்டுவருகின்றன. ஏறத்தாழ 50,000 பிள்ளைகள் அந்தத் திட்டத்தால் நல்லுணவு பெற்று நன்முறையில் பயின்று வருகின்றனர். அந்தத் திட்டத்திற்காக ஆண்டுதோறும் 19 லட்சம் ரூபாய் நகராட்சி மன்றத்தால் ஒதுக்கப்பட்டு வருகிறது.

பள்ளிப் பிள்ளைகளுக்கெல்லாம், பள்ளிக்கூட நாட்களில், பகல் உணவும் பாலும் இலவசம். எல்லாப் பிள்ளைகளுக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் பால் இலவசம். இவ்வாறாக இரண்டு திட்டங்கள்,

பம்பாய் நகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இரு திட்டங்களையும் கண்டு உள்ளம் மகிழாதவர் யார் இருக்க முடியும்? அதிலும் குறிப்பாக, பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசப் பகல் உணவு அளிக்கும் திட்டம் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். இந்த நாட்டில், பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பத் தயங்குகிறார்கள் என்றால், அதற்குக்காரணம், கல்வியின் அருமை பெருமைகளை அவர்கள் அறியவில்லை என்பதல்ல. வறுமை அவர்களை வாட்டி வதைக்கிறது என்பது தான் உண்மையான காரணம். எனவே தான் இலவசப் பகல் உணவு பள்ளிகளில் அளிக்கப்படுமானால், இப்போது பள்ளிக்கு வராமலிருக்கிற மிகப் பல ஏழைப் பிள்ளைகள் பள்ளிக்கு வருவர் என்று நாம் கருதுகிறோம். பம்பாய் நகரம் காட்டியுள்ள வழி சிறந்ததோர் பாதையாகும். அந்தப் பாதையைச் சென்னை அரசாங்கமும் பின்பற்றினால் மிகவும் நல்லது. ஆனால் பின்பற்றுமா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாகாணத்திலும், ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் பகல் உணவு அளிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது உண்மையானால் பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய செய்தியாகும்.

## குற்றாலத்தில, குமுறல்!

இந்த மாதத் தொடக்கத்தில், குளிர்ச்சியான காற்று வீசும் குற்றாலத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அங்கே நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் மிகவும் முக்கியமானது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பற்றிய தீர்மானமாகும். கனரகத் தொழில்களின் வளர்ச்சியில் (Development of heavy industries) தமிழ் நாடு போதுமான அளவு முன்னேறவில்லை என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தமிழ் நாட்டில் சில முக்கியமான கனரகத் தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்றும், இந்திய அரசாங்கத்தை இந்தத் துறையில் வற்புறுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் சென்னை அரசாங்கத்திற்கு உண்டென்றும் அந்தத் தீர்மானம் தெரிவிக்கிறது. திருவாளர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், மத்திய அரசாங்கத்தில் தொழில் துறை அமைச்சராக இருப்பவர். அவருடைய முன்னிலையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பது சிறப்பாகக் குறிக்கத்தக்க செய்தியாகும்.

உலகிலேயே மிகப் பெரிய அணைக்கட்டுத் திட்டம் என்கிற புகழுக்குரியது தாமோதர அணைக்கட்டுத் திட்டம். அது தொடங்கப்பட்டிருப்பது தமிழ் நாட்டில் அல்ல, வடநாட்டில்.

ஏராளமான அளவில் உர உற்பத்தி செய்வதற்காகப் பிரம்மாண்டமான தொழிற்சாலை யொன்று சிந்திரி என்னும் இடத்தில் நடை பெற்று வருகிறது. சிந்திரி என்னும் இடம் அமைந்திருப்பது தமிழ் நாட்டில் அல்ல. வடநாட்டில்.

எத்தனையோ கோடி ரூபாய்களைக் கொட்டி, சித்தரஞ்சன் என்னும் இடத்தில், ரயில் என்ஜின்களைக் கட்டும் தொழிலகம் நிறுவப்பட்டிருக்கிறது. சித்தரஞ்சனைத் தன்னகத்தே கொண்டிருப்பது தமிழ் நாடு அல்ல. வடநாடுதான்.

இந்தியாவிலேயே, ஏன், ஆசியக் கண்டத்திலேயே மிகப் பெரிய இரும்பு எஃகுத் தொழிற்சாலை அமைந்திருப்பது ஜம்ஷெட் நகர் என்னும் இடத்திலாகும். அது எங்கே இருக்கிறது? தமிழ் நாட்டிலா? இல்லை இல்லை. வடநாட்டில் தான்.

இவ்வாறாகப் பீடும் பெருமையும் மிக்க கனரகத் தொழிற்சாலைகள் யாவும் வடநாட்டில் தான் தொடங்கப்பட்டிருக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தால் பெரும் பயன் அடைந்திருப்பது வடநாடே தவிர தமிழ் நாடு அல்ல.

இந்த உண்மையை இதுவரை எடுத்துக் காட்டிவந்தது தென்னாட்டிலுள்ள திராவிடர் இயக்கந்தான்.

இப்போது தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சியும் இந்த உண்மையை உரத்த குரலில் எடுத்துரைக்கத் தொடங்கிவிட்டது.

டில்லி அரசாங்கம் வடநாட்டின் ஆதிக்கப்பிடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே தான் இந்தக் கொடுமைக்குத் தமிழகம் ஆளாகியிருக்கிறது என்று திராவிடர் இயக்கம் தெரிவிக்கிறது.

"அது அல்ல உண்மை. ஆனால் எது உண்மை என்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. எப்படியோ ஒரு நிலைமை இப்படி உருவாகிவிட்டது" என்கிறது காங்கிரஸ் கட்சி.

காரணம் எதுவாக இருந்தாலும் சரி, வடநாடு வளர்கிறது. தென்னாடு தேய்கிறது. இதனை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். அனைவரும் என்றால் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரர்கள் உட்பட தமிழகத்தில் உள்ள எல்லோரும் தான்.

புகையிலை வரி

வருமான வரி

ஏற்றுமதி இறக்குமதி வரி

தபால் தந்தி கட்டணங்கள்

ரயில்வே கட்டணங்கள்

பத்திரப் பதிவு ஸ்டாம்பு கட்டணங்கள் முதலிய பல்வேறு வழிகளின் மூலமாக, ஆண்டு தோறும், சுமார் 60 கோடி ரூபாய், தமிழ் நாட்டிலிருந்து

டில்லிக்குச் சென்றுவிடுகிறது. என்றாலும் தமிழ் நாட்டிற்குக் கனரகத் தொழிற்சாலை ஒன்று கூடக் கிடைக்கவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் கிடைக்கவில்லை. இரண்டாவது திட்டத்திலாவது கிடைக்குமா என்றால் அதுவும் ஐயத்திற்குரிய பிரச்சினையாகவே இருக்கிறது. இரண்டாவது திட்டத்தில் தமிழ் நாட்டில் பல கனரகத் தொழில்கள் நிறுவப்படுவது நிச்சயமாக இருந்தால் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி ஏன் இப்படி ஒரு தீர்மானம் போடப் போகிறது?

நம்முடைய பணம் வட நாட்டிற்குப் போனபடி இருக்கிறது. என்றாலும் நம்முடைய வட்டாரத்தைச் செழிப்படையச் செய்வதற்கான பெரிய அளவுத் தொழிற்சாலைகள் இங்கே நிறுவப்படவில்லை என்றால் அது உண்மையிலேயே நமக்கு வேதனையைத் தருகின்ற ஒரு விசித்திர நிகழ்ச்சிதான்.

இப்படிப்பட்ட விபரீத நிலைமை நாட்டில் இருப்பதற்குக் காரணம், நம்முடைய பணத்தில் பெரும் பகுதியை டில்லி அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்படியும், பிறகு நம்முடைய தேவைகளுக்கெல்லாம் அந்த அரசாங்கத்திடம் கையேந்தும் படியுமாக இந்திய அரசியல் திட்டம் தீட்டப்பட்டிருப்பதுதான். நிலைமை இப்படியின்றி, தமிழ்நாட்டு வரிகள் முழுவதையும் தமிழ்நாட்டு அரசாங்கமே வசூலித்து, அதில் ஒரு சிறு பகுதியை மட்டும், மத்திய அரசாங்கத்திடம், அதன் செலவுகளுக்காக ஒப்படைப்பது என்று திட்டம் இருக்குமானால் தமிழ்நாடு தொழில் வளமின்றி தேம்பியழவேண்டிய நிலை ஒருக்காலும் ஏற்படாது. அரசியல் திட்டத்தை இந்த வகையில் திருத்தியமைக்காத வரையில் தமிழ்நாட்டின் அரசாங்கம் அதிகாரமற்ற ஒரு கொலுப்பொம்மையாகத்தான் இருக்கமுடியும். அது நிச்சயம். குற்றாலத்தில் கூடிக் குமுறுவதால் மட்டும் பயனில்லை. அரசியல் திட்டத்தை அடியோடு மாற்றியமைக்கும் உள்ள உறுதி ஏற்படவேண்டும். எடுத்ததற்கெல்லாம் டில்லியின் பக்கம் நோக்கித் தெண்டனிட வேண்டிய இன்றைய நிலை மாறியாகவேண்டும்.

## இல்லை என்பது இல்லை இங்கே!

“தமிழ் நாட்டிலா? கனரகத் தொழில்களா? தொடங்கி நடத்துவதா? எப்படி முடியும்?” இப்படிக் கேட்கின்றனர் சிலர். ஏது அதற்கான வசதிகள் இங்கே என்றும் அவர்கள் வினவுகின்றனர். அவர்களுடைய அறியாமையைக் கண்டு நாம் பெரிதும் வருந்துகிறோம். எந்த நாட்டிலேயும் கனரகத் தொழில்கள் தொடங்கப்பட வேண்டுமானால் அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் இரண்டு. ஒன்று — இரும்பு, மற்றொன்று — நிலக்கரி.

இந்த இரண்டுமே ஏராளமான அளவில் புதைந்து கிடக்கிறது தமிழகத்து மண்ணில். தென்னார்க்காடு மாவட்டத்தில், நெய்வேலி என்னும் பகுதியில், ஏராளமான நிலக்கரி கிடைக்கிறது என்பது, இப்போது, உலகமறிந்த செய்தியாகி விட்டது. ஆனால் இரும்பு? உண்டா தமிழகத்தில்? கேட்கக் கூடும் சிலர். அதுவும் உண்டு, ஏராளமான அளவில் சேலம் மாவட்டத்தில்.

மூன்று மாதங்களுக்கு முன்னர், இந்திய அரசாங்கத்தின் கனிப் பொருள் ஆராய்ச்சிக் குழுவினர், அறிக்கையொன்று விடுத்திருந்தனர். அந்த அறிக்கையின் படி, சேலம் மாவட்டத்து மண்ணில் — கவனித்துப் படியுங்கள்— சுமார் முப்பது கோடி டன் இரும்புக் கனிப் பொருள் புதைந்து கிடக்கிறது. மொத்தத்தில் இவ்வளவு இரும்பு கிடைக்கிறது என்பதைத் தெரிவித்ததோடு நிற்கவில்லை ஆராய்ச்சிக் குழுவின் அந்த அறிக்கை. எந்தெந்த இடத்தில் எந்தெந்த அளவு கிடைக்கும் என்பதைக் கூட தெரிவித்திருக்கிறது. காங்கமலையில் 550 லட்சம் டன்; கூடுமலை 125 லட்சம் டன்; பெருமாள் மலை 104 லட்சம் டன்; மேட்டூர் பகுதி 120 லட்சம், சித்தேரி மலைப் பகுதி 554 லட்சம் டன்; தீர்த்தமலை 480 லட்சம் டன்; ராசிபுரம் நாமக்கல் பகுதி 340 லட்சம் டன்; கொத்தலை மலைப் பகுதி 670 லட்சம் டன்; பச்சைமலை 110 லட்சம் டன்.

தமிழ்நாட்டு மண்ணிலிருந்து கிடைக்கக் கூடிய மொத்த இரும்பே இவ்வளவுதான் என்பதல்ல. நிச்சயமாகக் கிடைக்கும் என்று ஆராய்ந்து அறியப்பட்ட அளவு மட்டும் இது. சேலம், திருச்சி, வடார்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் ஒரு முறையான ஆராய்ச்சி நடத்தினால், மேலே தரப்பட்டிருப்பதைவிட மிக அதிகமான அளவு இரும்பைத் தரக்கூடிய பல்வேறு பிரதேசங்கள் ஆங்காங்கே இருப்பது புலனாகக் கூடும். இந்த உண்மையைத் தெரிவித்திருப்பதும் யாரோ ஊர் பேர் அறியாதவர் அல்ல. இந்திய அரசாங்கத்தின் ஆராய்ச்சிக் குழுவினர்தான்.

ஏற்கெனவே உலகப் புகழ் பெற்ற ஜெர்மன் நாட்டு க்ரூப் இரும்பு உருக்குத் தொழிற்சாலையில் பணி புரிந்தவரும், தற்போது இந்தியப் பேரரசின் கீழ்ப் பணி புரிந்து வருபவருமாகிய பிரபல ஜெர்மன் நிபுணர் ஒருவர் இதுபற்றி யாது கூறுகிறார் தெரியுமோ?

இதோ அந்த நிபுணரே பேசுகிறார் கேளுங்கள் :

"ஓர் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்குவதற்குப் போதுமான அளவில், சேலத்தில் இரும்புக் கனிப் பொருள் இருக்கிறது. கனிப் பொருளைத் தோண்டி யெடுப்பதில் சுமிப்

பிடத்தகுந்த சிக்கல் எதுவும் கிடையாது.

"நல்ல பாதைகளும், புகை வண்டிப் போக்குவரத்து வசதிகளும் தேவையான அளவில் இருந்து வருவதால் கனிப் பொருளைக் கடத்துவதும் மிக மிக எளிதில் இயல்வதாகும்.

"கனிப் பொருள் போதிய அளவில் உயர்ந்ததாகும். தொலைவிலிருந்து எறிந்து உருக்கப்படும் முறைக்கு மாறாக, அண்மைக் காலத்தில், அருகிலிருந்து எறிந்து உருக்கப்படும் உருக்கு முறை ஆக்கம் பெற்று வருகிறது. இந்த உருக்கு முறைக்கு உயர்ந்த நிலக்கரி தேவையில்லை. எனவே நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலிருந்து உருவாக்கப்படும் எரி பொருளிலிருந்தே சேலம் உருக்குத் தொழிலை உருவாக்க முடியும்."

ஆமாம்—நிலக்கரி இருக்கிறது தென்னார்க்காட்டில். இரும்பு கிடைக்கிறது சேலம் மாவட்டத்தில். இந்த இரண்டும்தான் தேவை கனரகத் தொழில்கள் தொடங்க. இரண்டும் இருந்தும் தமிழகத்தில் கனரகத் தொழில்கள் தொடங்கப்படவில்லை. தொடங்கும் அதிகாரம் குவிந்திருப்பது டில்லி ஆட்சியிடம். ஆனால் அந்த ஆட்சியோ இது பற்றி அக்கறை கொள்ளகாணோம். ஏன்?

## வேதனைமிகுந்த விபரீதம்!

பம்பாய்த் துறைமுகத்தில் ஆயிரம் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தனர் தொடர்புள்ள அதிகாரிகள். வேலை காலி:— ஆயிரம் பேர் தேவை என்று அறிவிக்கப்பட்டது. விளைவு என்ன தெரியுமோ? பம்பாய்த் துறைமுகத்தில் 50,000 பேர் கூடிவிட்டனர். இதனால் துறைமுகத்தில் சகிக்கமுடியாத நெருக்கடி ஏற்பட்டு துறைமுக வேலைகள் யாவும் தடைப்படலாயின. நிலைமை மோசமாயிற்று. போலீசார் நுழைந்தனர். பிரம்படி தொடங்கிற்று. பிறகே வேலை தேடி வந்தோர் கலைந்து செல்லலாயினர். போலீசாரின் தாக்குதலுக்கு உள்ளாகி ஆறு பேர் காயமடைந்தனர். மனுத்தாள்கள் கொடுக்கப்படுவதும் நிறுத்தப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு முன்னால் பம்பாயில் நடைபெற்ற நிகழ்ச்சி இது. 'வேலை தேடி வந்து கூடினர்—பிரம்படி பட்டுத் திரும்பினர்' என்கிற தலைப்புகளின் கீழ் இந்தச் செய்தி நாளிதழ்களில் வெளிவந்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே எந்த அளவு பரவியிருக்கிறது என்பதையே இந்த உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி தெள்ளத் தெளிய விளக்குகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனை, மிகப் பெரிய அளவில் நுகர்ந்து

வரும் வட நாட்டிலேலேயே இந்த நிலை என்றால், அந்தத் திட்டத்தின் வாசனைகூட எட்டிப் பார்க்காத தமிழகத்தில் நிலைமை எப்படி இருக்கும்—இயம்பவா வேண்டும்?

ஆயிரம் பேர் தேவையென்றால் ஐம்பதாயிரம் பேர் வருகின்றனர். வருகிறவர்களைப் பிரம்படித்துக் கலைக்க வேண்டியிருக்கிறது. இப்படி ஒரு நிலை. இந்த நிலையில் இந்தியத் துணைக் கண்டம். இப்படியிருந்தால் இந் நாட்டின் நிலை, எப்படி ஏற்படும் முன்னேற்றம் இங்கே? ஏதேதோ திட்டங்களை ஏடுகளிலே தீட்டி விளம்பரப் பொருள்களாக அவற்றை வைத்துக் கொண்டிருப்பதை விட விஸ்வரூபம் எடுத்திருக்கும் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க உருப்படியான ஒரு திட்டம் தீட்டி உடனடியாக அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் ஆட்சிப் பீடம். ★

## ஆசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

1955-56க்கு, நமது பாடபுத்தகங்களை, சுமார் 50 ரூபாய்க்குக் குறையாமல், ஆங்காங்குள்ள புத்தகக் கடைகளில் வாங்கின எய்டெட், பஞ்சாயத், தலைமை ஆசிரியர்கள், புத்தகம் வாங்கின ரசீதுகளை சென்னை அலுவலகத்துக்கு உடனே அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை அலுவலகத்திலிருந்து வரவழைத்துக் கொண்ட ஆசிரியர்கள், புத்தக பில்களை அனுப்பத் தேவையில்லை. அவர்கள் கொடுத்துள்ள ஆர்டர்படி சென்னை அலுவலகத்தில் புத்தகம் வாங்கின பாடசாலைகளின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை அலுவலகத்தில் புத்தகங்கள் வாங்கின பாடசாலைகளுக்கு 1955 ஜூலை பத்திரிகை சேரவில்லை என்றால், உடனே சென்னையில் புத்தகங்கள் வாங்கின பில் நெம்பரையும் தேதியையும் குறித்து, ஒரு கார்டு எழுதவும். உடனே பரிசீலனை செய்து, பெயரைப் பதிவு செய்து பத்திரிகை அனுப்பப்படும்.

ஆசிரியர் :
ஆரம்பக்கல்வி

# பகுத்தறிவுச் சுடர் ஐன்ஸ்டீன்

[உடுமலையான்]

"உங்களுடைய தத்துவம் எனக்குப் புரியவில்லையே" என்றாராம் பேட்டி காணவந்தவர்.

"அப்படியா? புரியவைக்கிறேன். அழகான யுவதியோடு இரண்டு மணிநேரம் உட்கார்ந்து பேசிக்கொண்டே இருந்தால் இரண்டு நிமிஷ நேரம் கடந்த மாதிரி இருக்கும். சூடான 'ஸ்டவ்'மீது இரண்டு நிமிஷ நேரம் உட்கார்ந்திருந்தால், அதுவே இரண்டு மணி நேரம் கடந்தமாதிரி இருக்கும். அது தான் என்னுடைய தத்துவம்" என்றாராம் அந்த மேதை.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சொல்லுகிற யோசனை என்ன என்று இன்னொரு சமயம் ஒருவர் கேட்ட போது, வெற்றி என்பது, 'உழைப்பு, விளையாட்டு, வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருப்பது ஆகிய மூன்றும் சேர்ந்தால் கிடைத்துவிடும்' என்று வெற்றி வழி சொன்னதும் அவரேதான்.

'இரண்டாவது மகாயுத்தத்தில் அணுக்குண்டு உபயோகிக்கப்பட்டது. மூன்றாவது யுத்தத்தில் நீர் வாயுக்குண்டு உபயோகிக்கப்படும். நான்காவது உலக யுத்தம் எப்படி இருக்கும்' என்று கேட்டபோது, "வெறும் வில்லும் அம்பும்தான் போர்க் கருவிகளாக இருக்கும்" என்றாராம் அதே மேதை.

அந்த மேதையை, பிறந்த நாட்டிலிருந்து ஓட ஓட விரட்டினார்கள் நாடாண்டவர்கள் சென்ற யுத்தத்தில்.

இவ்வளவுக்கும் அவர் செய்த தவறு, அவர் யூதராகப் பிறந்ததுதான்.

அப்படி விரட்டப்பட்ட **பேரறிஞர் ஐன்ஸ்டீன்**, இன்று உலக மகா விஞ்ஞானிகளில் தலை சிறந்தவராக விளங்கி மறைந்துவிட்டார். பிறந்த பொன்னாட்டை மறந்து, சொத்துச் சுகத்தையெல்லாம் அங்கேயே விட்டுவிட்டு, 'தலை தப்பினால் போதும்' என்று ஓடிவந்த அறிஞர் இந்தியாவில் வந்து குடியேறுவதற்கு வெகு ஆவலாக இருந்தார். ஆனால், சூழ்நிலைகள் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றன.

விஞ்ஞான ஆராய்ச்சியில் புகழ் கிடைப்பதென்பது, எப்பொழுதுமே ஏகோபித்த விதத்தில் இருக்காது. அபிப்பிராய பேதங்களும் அர்த்தமற்ற பொறாமைகளும் இல்லாமல் இல்லை. கணித சாஸ்திரத்திலும் பௌதீகத் துறையிலும் ஏகோபித்த புகழைப் பெற்றிருப்பவர் ஐன்ஸ்டீன் ஒருவர்தான். 26 வயது இளைஞராக 'கிளார்க்' வேலையில்

உட்கார்ந்துகொண்டு காகிதங்களையும் பென்சிலையும் வைத்து 'கிறுக்கி'க் கொண்டிருந்த பின்னர், 50 வருடங்கள் கழித்து உலகம் அவரை பெரும் விஞ்ஞானப் பேரறிஞன் என்று ஏற்றிப் போற்றிற்று.

இவருடைய 'ரிலேடிவிடி'க் கொள்கை, மற்ற விஞ்ஞானிகளைத் திகைக்கவைத்தது. ஆரம்பத்தில் தயங்கியவர்கள், நாளாக ஆக ஏற்றுக்கொண்டனர். உலகத்தை இயக்குகிற விதிகள், நீளம், அகலம், ஆழம் ஆகியவை தான் என்று நம்பி இருந்தனர். ஐன்ஸ்டீன் நான்காவது விதியும் உண்டு என்று நிரூபித்தார். அதுதான் **காலம்** என்பது என்று கூறத் தொடங்கினார். பெர்ன் சர்வ கலாசாலையில் பெளதீகப் பேராசிரியராக இருந்தபோது 1905ல் முதன் முதலில் இந்தத் தத்துவத்தை வெளியிட்டார். பூமியின் வேகத்தை நிர்ணயிப்பதில் இருந்த சில சிக்கல்களை நீக்குவதற்கு இது பயன்பட்டது. ஐன்ஸ்டீன் சொன்ன நாள்வரையில், பொருளும் சக்தியும் வெவ்வேறு விஷயங்கள், இரண்டில் எதையும் ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்று விஞ்ஞானிகள் நம்பியிருந்தனர். அது தவறு என்றார், ஐன்ஸ்டீன்.

எல்லாப் பொருளுமே சக்தியின் ரூபங்கள்தான். பொருளைச் சக்தியாக மாற்ற முடியும். பொருளை அணுவாகப் பிரித்தால் அதிக சக்தியைக் காண முடியும் என்று சொல்லி அப்படியே நிரூபித்தார். பொருள், இடம், காலம், பூமியின் ஈர்ப்புத்திறன் ஆகியவற்றிற்கு உள்ள தொடர்புகளையும் வெளியிட்டார். இயற்கையின் ரகசியங்களைக் கண்டறிய இந்த உண்மைகள் விஞ்ஞானிகளுக்குப் பெரிதும் பயன்பட்டது.

1933ல் ஆய்வுச் சாலையில் ஐன்ஸ்டீன் செய்த பரிசோதனைகள்தான், 13 ஆண்டுகளுக்குப் பிறகு நாகசாகியிலும், ஹிரோஷிமாவிலும், அணுகுண்டாக வெடித்தது.

ஆனால் நல்ல காரியத்திற்குக் கண்டு பிடிக்கப்பட்ட சோதனைகள் நாசகாரியத்திற்குப் பயன் பட்டதை நினைத்து ஐன்ஸ்டீன் மனம் புழுங்கிக் கொண்டே இருந்தார்.

ஜெர்மனியில் அல்ம் என்ற இடத்தில் 1879 மார்ச் 14ம் நாள் யூதப் பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்தார்.

பள்ளிக்கூடத்தில் கண்டிப்பான விதிமுறைகளுக்குக் கட்டுப்படாமல், 'துள்ளித்திரிந்தார். குறுக்குக் கேள்விகளைக் கேட்டு ஆசிரியர்களைத் திணற அடித்தார். பள்ளிப் படிப்பை விட்டு விட்டு, 'கிளார்க்'காகி, தன் 'ரிலேடிவிடி'க் கொள்கையை வெளியிட்டார். 1905 ஜூரிச் சர்வகலாசாலையில் டாக்டர் பட்டம் தரப் பட்டது. ஆஸ்டிரியாவில் ஸால்ஸ்பர்க் என்ற இடத்தில் கூடிய விஞ்ஞானப் பேரவையின் முன்னர்

1905ல் வாசித்துக் காட்டிய பிறகுதான் இவரது தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1911-12-ல் பிரேக் நகரில் பௌதிகப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1921-ல் நோபல் பரிசு கிடைத்தது. வைமூர் குடியரசாட்சிக் காலத்தில் இவரது புகழ் உச்சநிலைக்குச் சென்று ஒளி வீசிற்று. 1933-ல் நாஜிகளின் யூத எதிர்ப்புக் கொள்கைப்படி, இவர் ஜெர்மனியிலிருந்து ஓடவேண்டியதாயிற்று. இவரை உயிரோடு பிடித்துத் தருபவர்களுக்குப் பெருந்தொகை பரிசாக அளிக்கப்படும் என்றும் சர்க்கார் அறிவித்தது. ஜெர்மனியிலிருந்து பிரான்சு, பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய இடங்களுக்கு அலைந்து கொண்டிருந்தார். 1933-ல் பிரின்ஸ்டன் கழகத்திற்குச் சென்று பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 1940-ல் அமெரிக்கப் பிரஜையாக மாறினர்.

ஐன்ஸ்டீன் மனித இனத்தின் மீது மட்டற்ற ஆசையும் மதிப்பும் வைத்திருந்தார். மேதையாளுலும் சாதாரண மனிதராகவே தன்னைப் பாவித்துக் கொண்டு வாழ்ந்து காட்டினர். தன் சாதனைகளைப்பற்றி ஒரு சமயம், 'என் சாதனைகள் மிகைப் படுத்திச் சொல்லப்படுகின்றன. விஞ்ஞான ரகசியங்கள் வெகு அழகு நிரம்பியவை. வாழ்நாள் முழுவதும் விஞ்ஞானத்திலேயே மூழ்கித் திளைப்பதற்கு சந்தர்ப்பம் இருந்தாலே போதும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தனி மனித சுதந்தரத்தைப் பற்றி அசையாத நம்பிக்கை அவருக்கு உண்டு. 'அரசியல் சுதந்தரமும் சமுதாய சமத்துவமும் சகிப்புத் தன்மையும் எல்லோருக்கும் தங்குதடையின்றிக் கிடைக்க வேண்டும் என்ற விதி இருக்கும் நாட்டில்தான் நான் தங்கவிரும்புகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். மனித அறிவுக்கு எட்டாத விஞ்ஞான ரகசியங்களையும், இயற்கைச் சக்தியின் இருளடைந்த பாகங்களையும் கண்டு பிடிக்க வேண்டும், அவற்றை வாழ்வின் வளத்திற்கும் மனித நலனுக்கும் பயன்படுத்த வேண்டும் என்ற துடிப்பும் ஆர்வமும் ஐன்ஸ்டீனிடம் அளவில்லாமல் இருந்தது.

காந்தியடிகளைப்போல் சமரசவாதியும் சமாதானப் பிரியருமான ஐன்ஸ்டீன், அணுகுண்டின் மூலகர்த்தாவாக விளங்கியது விசித்திரம்தான். 1939 ஆகஸ்டில் ஜனதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு இவர் எழுதிய கடிதம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. அணுகுண்டு செய்யும் அளவுக்கு அணு ஆராய்ச்சி முன்னேறிவிட்டதெனவும், ஜெர்மனி சீக்கிரத்தில் இந்தத் துறையில் வெற்றிகண்டு விடும் எனவும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதைக் கண்ட பிறகே ரூஸ்வெல்ட் முழு மூச்சோடு அமெரிக்க விஞ்ஞானிகளின் உழைப்பைக்கொண்டு அணுகுண்டைத் தயாரித்தார்.

தன் இந்த நடவடிக்கைக்காக சாரும்வரை ஐன்ஸ்டீன் வருத்தப்பட்டார். ஆக்க வேலைக்கு உபயோகப்படுத்துவதை அழிவு வேலைக்கு உபயோகப்படுத்தி நாசமாகிறார்களே என்று நெஞ்சு கொதித்தது. இனி நீர்வாயு குண்டு வந்தால் நாகரீகம் என்ன ஆகுமோ என்றும் அஞ்சினர்.

சிந்தனை தேங்கிய கண்கள், கூர்த்த மதியை நினைவுபடுத்தும் கூர்மையான மூக்கு, அறிவின் விலாசத்தை அறிவிக்கும் அகன்ற நெற்றியும்கொண்ட இந்த விஞ்ஞானி ஒரு ஞானியைப்போலவே வாழ்ந்தவர், தனிமையில் விருப்பம் அதிகம் இவருக்கு. அதேபோல ஞாபக மறதியும் அதிகம் இவருக்கு.

ஒரு சமயம் ஆயிரத்து ஐநூறு டாலர் 'செக்' ஒன்றை புத்தகப் பக்கங்களுக்கு அடையாளக் காகிதமாக வைத்துவிட்டார். பிறகு அந்தப் புத்தகமே காணுமல் போய்விட்டது. உடம்பு தேய்த்துக் குளிப்பதற்கும் க்ஷவரத்திற்கும் ஒரே சோப்பை உபயோகிக்கும் இவருக்கு, சங்கீதம் என்றால் வெகுபிரியமாம். வாசித்துக்கொண்டே நாட்கணக்கில் உட்கார்ந்து விடுவாராம். இவர் இருதடவை திருமணம் செய்து கொண்டிருக்கிறார். 1901ல் மிலிவாமாரே என்கிற யுவதியை மணம் செய்துகொண்டார். இரண்டு ஆண் குழந்தைகள் அவள் மூலமாக உண்டு. 1916ல் விவகாரத்து ஏற்பட்டு அத்தை மகள் எல்சாவை இரண்டாந்தாரமாக ஏற்றுக் கொண்டார். அவளும் 1930-ல் இறந்து விட்டாள்.

'உலகத்தை உருவாக்கிய எண்மரில் இவரும் ஒருவர்' என்று பெர்னார்ட்ஷா ஐன்ஸ்டீனைப் புகழ்ந்திருக்கிறார். மற்ற எழுவரும் அரிஸ்டாட்டல், பிதகோரஸ், டாலமி, கோபர்னிகஸ், கலீலியோ, கெப்ளர், நியூடன் ஆகியோராகும். ஐன்ஸ்டீன் நல்ல எழுத்தாளர். பல அருமையான புத்தகங்களை எழுதியிருக்கிறார். சகிப்புத்தன்மையும் சமாதான உணர்ச்சியுமே இவரது வாழ்விலும் எழுத்திலும் ஊடுருவி நின்றன.

'விஞ்ஞானியாக மாறுவேடம் பூண்டு வந்திருக்கும் பெரிய ஞானி' என்று ஒரு அறிஞர், இந்த மேதையைப் புகழ்ந்தாராம். தன் இறுதி நாள்வரை பிரின்ஸ்டனில் ஆரவாரமில்லாத அமைதியான வாழ்வில் இன்பம் கண்டு, மறக்கவோ மறுக்கவோ முடியாத அழியாத தத்துவத்தைத் தந்துவிட்டு மறைந்து விட்டார். சரித்திரத்தின் பொன்னேடுகளில், அழியாத விதத்தில் அவர் பெயர் பதிந்துவிட்டது.

மனிதனின் ஜீவாதார உரிமைகளைப் பாதிக்கும் சகல சக்திகளையும் நிர்த்தாட்சண்யமாகத் தாக்கியவர், ஐன்ஸ்டீன்.

"எல்லா மக்களிடையேயும் ஒற்றுமை உணர்ச்சியாக வியாபித்திருக்கிற கடவுளைத்தான்

(27-ம் பக்கம் பார்க்க)

# பள்ளிக்கு வைத்தல்

[பி. பிரான்ஸ், ஆர். என்.]

உங்கள் வீட்டுக் கண்ணனையும் பாப்பாவையும் எப்பொழுதிருந்து ஆரம்பப் பள்ளிக்கூடம் போவதற்கு அனுப்பி வைக்க உத்தேசித்திருக்கிறீர்கள்? பள்ளி வாழ்விலும் பிற்கால வாழ்விலும் வெற்றி பெறுவதற்கு உதவியாக இளமையிலே அவர்களுக்குப் பயிற்சி யளிக்க வேண்டிய அவசியம் எவ்வளவோ இருக்கிறது. நீங்கள் காட்டும் இயல்பான சிரத்தையும் ஆர்வமும், பிள்ளைகள் படிக்கப் போவதைக் குறித்து நீங்கள் பேசுகையில் உங்கள் முகத்தில் உண்டாகும் பொலிவும் அவர்களுக்குத் துணையாக அமையும்.

பிள்ளைகள் முதல் முதல் பள்ளிக்கூடம் போகும் நாள் வந்துவிடும். வீட்டை விட்டுப் பிரிந்தறியாத இளங் கன்றுகள் எவ்வாறு பள்ளிக்கூடத்தில் நாள் முழுதும் செலவிடப் போகின்றன என்று உங்களுக்கு உள்ளூரக் கவலை இருக்கலாம். நீங்கள் அதை வெளிக் காட்டிக்கொண்டால் இளங் கன்றுகள் உபாத்தியாயரையும் பள்ளிக்கூடக் கட்டடத்தையும் கண்டு மிரள ஆரம்பிக்கலாம்.

இப்படி யெல்லாம் ஒன்றும் உங்கள் குழந்தைகள் விஷயத்தில் நடவாதிருக்க, இந்தப் புது அனுபவத்தை இலகுவாக்குவதற்கென்று நான் கூறும் ஆலோசனையின்படி செய்யுங்கள். உங்கள் குழந்தைகள் அம்மாவுடைய சிறிய மனுஷனும் மனுஷியுமாக மாறி வருவதையும், கற்பதற்கு ஏற்ற வயதையும், கௌரவத்தையும் அவர்கள் அடைந்து விட்டதையும் அவர்களுக்கு எடுத்துக் கூறி, பள்ளிக்கூடத்தில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படும் என்று அவர்களுக்குச் சொல்லி வையுங்கள்.

குழந்தைகளுக்குத் தேவையான அளவு சுயாதீனத்தை நீங்கள் அவர்களுக்கு அளித்து இருக்கிறீர்களா? இல்லையெனில், உடனே அவ்வாறு செய்யுங்கள். பொறுப்புள்ளவர்களும், குழந்தைகளைப் பொறுப்புடன் நடந்து கொள்வதற்கு ஊக்குவிப்பவர்களுமான பெற்றோர் நிச்சயம் இவ்வாறு செய்தே ஆகவேண்டும். தாங்களாகவே தங்களுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுதல் என்னும் பாடத்தை அவர்களுக்கு இப்பொழுதிருந்தே கற்றுக் கொடுக்க ஆரம்பியுங்கள். பெற்றோர் அவர்கள் இவ்வாறு செய்வதற்கு ஊக்கம் அளித்து வர

வேண்டும். அவர்கள் தாமாகவே செய்து விடும் எதையும் பாராட்டிப் பேசுங்கள். பள்ளி வாழ்வில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் விரும்பப்படுபவர்களாக வளருவதற்கு நீங்கள், அவர்களுக்கு அளிக்க வேண்டிய பயிற்சி இதுவே.

உங்கள் குழந்தைகளைப் பற்றிய உண்மைகளை ஒத்துக்கொள்ளுங்கள். அவர்களுடைய குறைகள் உங்கள் கண்களில் பட்டுவிடப் போகிறதேயென்று பயந்து அரைக் கண்ணை மூடிக்கொண்டு அவர்களைப் பார்க்க ஆரம்பித்து விடாதீர்கள். கண்ணை நன்றாக, விரிவாக, அகலமாகத் திறந்து, பள்ளி மாணவர் மத்தியில் உங்கள் குழந்தைகள் எவ்வாறு இருப்பார்கள், எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று சற்றே கற்பனை செய்து பாருங்கள். உண்மையாகவே பள்ளியில் அவர்கள் காட்டுவதற்குத் தேவையான நல்லொழுக்கத்துடனும், சுத்தமான பழக்க வழக்கங்களுடனும் அவர்கள் அங்கு நடந்து கொண்டு வருவார்களா? பள்ளிக்கூடத்தில் அனேவரும் தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளுவார்கள் என்றும், ஒன்றுக்கு அல்லது இரண்டுக்குப் போக வேண்டியதிலும், உடலையும் உடைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதிலும், புஸ்தகங்கள், நோட்டுகள், சிலேட்டு, பென்சில், இங்கி, பேனு இவற்றை நல்ல நிலையில் வைத்திருக்கவும் ஒருவரும் அடுத்தவர்களுக்கு ஒன்றும் சொல்லிக் கொடுக்கத் தேவைப்படாது எனவும், அப்படி யாராவது ஒருவர் தப்பித் தவறி எதையாவது நன்ருக வைத்துக்கொண்டிராவிடினும் பள்ளியொழுக்கத்திற்கு ஏற்ற வகையில் நடந்துகொள்ளாவிட்டாலும், உங்கள் குழந்தைகள் தாம் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று சொல்லி வையுங்கள். அப்படிக் கூறுவது தங்களின் சொந்தத் திறமையிலும் சமர்த்திலும் அவர்களுக்குச் சிறிது நம்பிக்கையூட்டுவதாக இருக்கும்.

தங்களுடைய கைகளையும் கால்களையும் முகத்தையும் கழுவி சுத்தி செய்வதற்குக் குழந்தைகளுக்குத் தெரியுமா? சாப்பாட்டிற்கு முன்னும், கக்கூசுக்குப் போய்விட்டு வந்தவுடனும், அப்படிச் செய்வதற்கு அவர்களால் கூடுகிறதா? இதை அவர்கள் இன்னமும் தெரிந்துகொண்டிராவிடில், ஆவ்வாறு செய்வதற்கு அவர்களைப் பழக்குங்கள். பலமுறை சுத்தி செய்து, தாயாரின் முன்பாக வந்து நின்று, அவள் அவர்களைப் பார்த்து, மறுபடியும் கால் அல்லது முகத்தின் எப்பாகத்தை அவர்கள் நன்ருகக் கழுவவில்லை என்று தெரிந்து கூறுமாறு வைத்து வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் அவர்கள் இதனைத் தெரிந்து கொள்ளுமாறு செய்யுங்கள். அதை வேடிக்கையாக எண்ணிச் செய்து பழகுவதற்கு அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். தமாஷாகவே பேசி எதனையும் அவர்

கள் புதிதாகக் கற்பதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வாருங்கள். கடுமையான பரிகாசத்தினாலும், அர்த்தமற்ற கண்டிப்பினாலும் அவர்கள் உள்ளம் சோர்ந்து அவர்கள் அமைதியாகத் தனித்து உட்கார்ந்து விடும்படி வைத்து விடாதிருங்கள். எதையும் செய்வதற்கு அவர்கள் மனதில் இருக்க வேண்டிய தெம்பே அவர்களுக்கு உறுதுணையாகும் என்று நினைவில் வையுங்கள்.

குழந்தைகளின் சாப்பாட்டுப் பழக்க வழக்கங்கள் எப்படி? சாப்பிடுவதற்கு நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும் பழக்கம் குழந்தைகளிடம் இருக்குமானால், சமயா சமயங்களில் அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் பிந்திப் போவதைத் தவிர்க்க முடியாது. ஆகவே சாப்பிடுவதற்கு நேரத்தைக் குறித்து, அந்த நேரம் முடிவடைந்ததும் அலாரம் கடிகாரத்தை மணியடிக்கும்படி செய்யுங்கள். அவ்வாறு செய்து விடுவது அவர்கள் சாப்பிட்டு விட்டுப் பிந்திப் போவதற்காகத் திட்டுவதையும் கண்டிப்பதையும் விட நல்லது. கண்டிப்பிற்காகப் பயந்து, குழந்தை அவசர அவசரமாகச் சாப்பாட்டை வாரி வயிற்றிற்குள் போட்டுக் கொண்டோ போடாமலோ எழும்பிவிடாதிருக்கவும் இது சரியான வழி.

குழந்தைகள் எப்பொழுது படுக்கப் போகிறார்கள்? படுக்கப் போவதற்கு முன் தொந்தரவு கொடுப்பதுண்டா? சாப்பிடுவதைப் போலவே, இரவு நித்திரைக்குப் போகும் வேளையையும் குறிப்பிட்டு வையுங்கள். மறு பகல் முழுவதும் நன்றாக இருக்கும். அப்படிப் பகலில் களையுடன் உற்சாகமாக விளங்குவதற்கு இரவு குறிப்பிட்ட வேளையில் நித்திரைக்குப் போய் விடுவதே நல்லது என்று அவர்களுக்குக் கூறிவாருங்கள். விடியற் காலை மனோகரமாக அவர்களுடைய மனக் கண் முன்பு காட்சி அளித்து, பகலில் தெம்புடன் ஓடியாடி விளையாடலாம் என்று நினைத்துக்கொண்டு அவர்கள் நித்திரைக்குப் போகட்டும். இதற்காக இரவு பயங்கரமானது என்று யாராவது குழந்தைகளுக்குக் கற்பிக்கத் துவங்கி விடாதீர்கள். பிசாசுக் கதைகள் அவர்களுக்கு நல்லதல்ல. இரவு, ஓர் நாளில் தாங்கள் சிறிது படுத்து விட்டுத் தூங்குவதற்குரிய பகுதியாக அவர்களால் எண்ணப்பட்டு வரவேண்டும். உலகத்தில் இருக்கும் பயங்கரங்களையும் இல்லாதவற்றையும் கற்பித்து, பிள்ளைகளிடம் இரவு வேளைகளில் பேசுவது தவறு.

நித்திரை செய்வது, உணவருந்துவது, சுத்தத்திற்கும் சுகாதாரத்திற்கு மடுத்தவை, இவை யாவினும் தேர்ந்து கிரமத்தையும் ஒழுங்கையும் கையாளப் பழகி விடுவதுடன், கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, பள்ளிக்கூட வாழ்வில் பிரவேசிக்கும் பிள்ளைகளைத் தகுதியாக்குவது

சிறு குழந்தைகளையுடைய பெற்ரேரின் முதற் கடமைகளில் ஒன்று.

இனி, பள்ளிக்கூடத்தைப் பற்றி என்ன? முதல் முதலாக குட்டிப் பாலர் வகுப்பில் குழந்தையைச் சேர்த்திராவிட்டால், அல்லது நர்சரி பள்ளிக்கூடத்துக்காவது அனுப்பி யிராவிட்டால், அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்குச் சிறிது முன்பாகப் பெற்ரேர் இதைக் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

சரஸ்வதி பாய் என்னும் பெயருடைய ஓர் அம்மணி சமீபத்திலே இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டியதாக இருந்தது. இதற்கு முன்பு பிள்ளைகள் பள்ளிக்கூடத்தின் பக்கத்திலே கூடப் போனதில்லை. தகப்பனர் சமுசாரி. கிராமத்திலே நில புலன்கள் ஏராளமாக இருந்தன. கிராமப் பள்ளிக்கூடம் ஒன்றும் அண்மையில் இல்லை. பையன்கள் இருவரும் எப்பொழுதும் ஊரைச் சுற்றி வளைந்து வந்து கொண்டிருப்பார்கள். வேறு வேலையில்லை. பிள்ளைகளின் படிப்பிற்காகப் பக்கத்தில் இருந்த டவுனில் குடியேறி, நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்து விட்டு, டவுனிலே ஒரு அலுவலைத் தேடிக்கொண்டார் தகப்பனர். புது இடத்தில் பார்க்கிற யாவும் புதியதாகவும் அதிசயமாகவும் இருந்ததால் முதலில் பிள்ளைகளிடம் புதிய சூழ் நிலைக் கேற்ற படி அவர்கள் நடவடிக்கைகள் யாவும் ஒரு வகை பயமே மேலிட்டுக் காணப்பட்டது. சரஸ்வதிபாய் அம்மைக்கும் உள்ளூற அப்படியே. "ஆயினும் நான் வெளிக்கு காட்டிக் கொள்ளவில்லை. யாவும் தெரிந்தது போல, நடந்து கொண்டேன். பயம் தோற்றுகிறது. யாவும் சரியாகிவிடும் என்ற எண்ணத்துடன் பிள்ளைகளிடம் தன்னம்பிக்கையை வளர்க்கவே வகை தேடினேன். கடவுள் நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் ஒருவரிடம் அழித்து வரும் எதையும் அகற்றுவது அவசியம் என்று மகாத்துமா அடிக்கடி கூறி வந்திருப்பதை நினைத்து, அதற்கேற்றவாறு குழந்தைகளிடம் நான் நடந்து கொண்டேன்" என்று கூறினர்.

தாயார் புத்திசாலித்தனம் இதிலே தெரிகிறதல்லவா?

இதற்கப்புறம் திறமை மிகுந்த மனே வைத்திய நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை பெறுமாறு இந்த அம்மணி குழந்தைகளை அழைத்துச் சென்ருர். குழந்தைகளின் மனதைக் கவர்ந்து கொள்வதில் அவர் நிபுணர் என்று அவள் கேள்வியுற்றிருந்தது சரி தான் எனக் கண்டு கொண்டாள்.

பிள்ளைகளை டாக்டர் பார்த்தார். முதலில் அவர்களுடன் அவர் பழகுவதற்கு கூச்சம் மிகுந்த அவர்களுடைய பிற்போக்கு தடையாக இருந்தது. எனினும் அவர் அவர்களை விடுவதாக இல்லை. தமக்குரிய விசேஷ திறமையுடன் சிறுவர்களுடைய கூச்சத்தை எல்லாம் போக்கி,

இருவரும் சாவதானமாக உட்கார்ந்து விளையாடுவதற்கு வைத்து விட்டார்.

சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த பொழுது, சரஸ்வதியும் டாக்டரும் பேசிக் கொண்டிருந்தனர். "ஸ்ரீமதி சரஸ்வதி, உங்கள் பையன்கள் இருவரும் நல்ல தேகாரோக்கியம் உடையவர்களாகத் தோற்றம் அளிக்கிறார்கள். புதிய வாழ்வுக்கு அவர்களை நீங்கள் தாம் தகுதியாக்க வேண்டும். நாளடைவில் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுடன் பழகுவதற்கு அவர்கள் கற்றுக் கொள்வார்கள். குழந்தைகளை வீட்டிலேயே அடைத்துப் போட்டு, அணைத்துச் செல்லம் கொடுத்து வளர்ப்பது எந்நாளும் சாத்தியமாகாது. இப்பொழுதிருந்தே பல வகையான இளஞ் சிறுவருடன் கூடி வாழ்வதற்கு அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் மனப்பான்மையே பள்ளி வாழ்விலும பிற்காலத்திலும் இவர்கள் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக அமையும். பிற மாணவர்களை விட்டு ஒதுக்குப் புறத்தில் வாழ்வதற்கு ஒரு பொழுதும் அவர்களுக்கு இடம் அளிக்காதிருங்கள். பிறருடன் கலகலப்பாயிராமல், வீட்டில் சுற்றி வரத் தஞ்சமளிக்க வேண்டாம். அவர்கள் எவ்வளவாகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலும், அவர்கள் தங்களுடைய சுற்றுப்புறத்தையும் புதிய சிநேகிதர்களையும் பழக்க வழக்கங்களையும் படிப்பையும் குறித்துச் சற்றேனும் பாரமாக எண்ணிப் பயந்து, தன்னம்பிக்கை இழந்து, தோல்வி மனப்பான்மையுடன் வாழாதபடி, யாவையும் நன்றாக அறிந்து, பயத்தை விட்டொழிக்கும்படி ஆலோசனை கூறி அடிக்கடி அவர்களைத் திடப்படுத்தி வாருங்கள்" என்று கூறினார்.

இந்தக் குழந்தை மனோ வைத்திய நிபுணர் கூறியபடி செய்வது மிகவும் நல்லது. பள்ளியில் கற்கும் தனது சிறுவன் அல்லது சிறுமி குறிப்பிட்ட சிலருடனேயே ஒத்து நட்பு பாராட்டிப் பழகி வருவது பிள்ளைகளின் பள்ளி வாழ்வை ஊன்றிக் கவனிக்கும் பெற்றோர் கண்களில் படாமல் இராது. அனைவருடனும் பிள்ளைகள் கலகலப்பாக ஏனைய மாணவரைப் போன்று இராதது ஏன் என்று பெற்றோர்களில் அநேகர் நீண்ட காலத்திற்கு அப்புறமே கண்டு பிடிக்கின்றனர். அப்புறம் சட்டென்று ஒரு நாள் இந்த ஒதுங்கும் மனப்பான்மைக்குரிய காரணம் தெரிய வருகின்றது. பெற்றோருக்குத் திகைப்பும் கலக்கமுமே தோன்றுகிறது. இப்படி எல்லாம் நேராதிருக்க, அனைவருடனும், புதிய சுற்றுப்புறங்கள் சூழ்நிலையுடனும் பழகி வாழ்ந்து வரவேண்டியது பெற்றோரின் கடமை. அவ்வாறு செய்வதில் தான் குழந்தைகளின் பிற் கால வாழ்வின் க்ஷேமம் அடங்கியிருக்கின்றது. எனவே இதில் அசிரத்தையாய் இருக்கக் கூடாது. ★

—"நல்வழி"

# சீமை தக்காளி

டி. எஸ். ரங்கநாயகி

சீமைத் தக்காளியை ஆங்கிலத்தில்டொமெட்டோ என்றும், லவ் ஆப்பிள் (காதல் இலந்தை) என்றும் கூறுகிறார்கள். இது நம் தேசத்துக்கு நூதன காய்கறியே. ஆதியில் இது தென் அமெரிக்காவில் தான் முதல் முதல் பயிர் செய்யப்பட்டு வந்தது. பின்னர் ஐரோப்பா கண்டத்தில் அதன் பழத்தின் அழகுக்காக இச் செடியை வளர்த்து வந்தனர். அதை உணவு பதார்த்தமாக உபயோகிக்க ஆரம்பித்தது வெகு சில ஆண்டுகளுக்கு முன்பிருந்து தான்.

## பல வகைகள்

சீமைத் தக்காளியில் பல வகைகள் உண்டு. சில பெரியவைகளாக இருக்கும். சில உருவத்தில் சிறியவைகளாக இருக்கும். நிறத்திலும் பழத்திலும் வித்தியாசம் உண்டு. அதில் நூற்றுக் கணக்கான வகைகள் பலவேறு பெயர்களுடன் பயிர் செய்யப்படுகின்றன. அவைகளின் வித்தியாசத்தை ருசியினின்றும் நிறத்தினின்றும் தான் கண்டு கொள்ள முடியும்.

சீமைத் தக்காளியை அதிகச் செலவு செய்யாமலேயே பயிர் செய்து தகுந்த பலன் அடையலாம். உஷ்ணமான பூமியில், தகுந்த முறையில் பயிர் செய்தால் நல்ல உயர்தரமான பழங்களை மிகுதியும் அளிக்கக் கூடிய செடிகளைப் பயிராக்கலாம். அவைகளை வெளி இடங்களிலேயே பயிர் செய்ய வேண்டும். போதிய வெளிச்சமும் காற்றும் அவசியம்.

## பயிர் செய்யும் முறை

முதலில் அதன் விதைகளை மண் தொட்டிகளில் போட்டு விதைக்க வேண்டும். முளை கிளம்பி இரண்டு இலைகள் விட்டவுடன் வேறு தொட்டிகளில் ஒரு தொட்டிக்கு மூன்று செடி வீதம் நடவேண்டும். சில வாரங்கள் மிக உஷ்ணமான இடத்தில் அந்த தொட்டிகளை வைத்து பின்னர் நன்றாகப் பண்படுத்திய பூமியில் பாத்திகள் வெட்டி மூன்று அடிக்கு ஒன்றாக நட வேண்டும். காற்று அதிகமாக அடிக்கக்கூடாது. சூரிய வெளிச்சமும் அளவுக்கு மிஞ்சி விடக் கூடாது.

செடி வளர்வதற்கு முதலில் நான்கு அல்லது ஐந்து அடியுள்ள குச்சிகள் ஊன்றப்பட வேண்டும். முதல் தண்டு வளர்வதற்குக் கிளைகள் இடையூறு செய்யாதபடி கிள்ளிவிட வேண்டும். முக்கிய தண்டின் வளர்ச்சியை ஒட்டித்தான் பழங்கள் விளைவு இருக்கும். இலைகளைக்

கிள்ளவேண்டும் என்பது அவ்வளவு அவசியம் இல்லை.

### எரு

நைட்ரேட் சோடா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ்சல் பேட் போன்ற இரசாயனப் பொருள்களை உரமாக உபயோகித்தால் பலன் அதிகம் கிடைக்கும்.

சீமைத் தக்காளியின் முக்கிய வகைகளில் சிலவற்றை மட்டும் இங்குகுறிப்பிடுகிறேன். விண்டர் பிஸ்ட்டி, 'சன்பீம்', 'கேஸ் கேட்' 'ட்வார்ப்ஜெம்' 'சாடிஸ்பேக்ஷன் இவைகளின் வித்தியாசம் ருசியிலும், பழங்களின் நிறத்திலும் வாசனையிலும்தான். சில மஞ்சள் நிறமாக இருக்கும். சில சிகப்பாக இருக்கும். மற்றும் பல ஆரஞ்சுக் கலராக இருக்கும்.

### வியாதிகள்

இந்தப் பயிருக்கும் பல வியாதிகள் உண்டு: மஞ்சள் புள்ளி-இது அதிகமாக தண்ணீர் ஊற்றுவதால் ஏற்படுவது. உலர்ந்த பதத்தில் நல்ல காற்று இருந்தால் இவ்வியாதி வராது.

கருங்கோடு- இது மிகவும் கெடுதலான வியாதி. இது செடியின் வேரைத் தாக்கி தண்டின் நிறத்தையும் மாற்றி விடுகிறது. பழத்தின் உருவமும் இவ்வியாதியால் பாதிக்கப்படும். இவைகளைச் சுண்ணாம்புத் தண்ணீர் ஊற்றுவதால் தடுக்கலாம்.

போதிய அளவு சூரிய உஷ்ணம் இருந்தால் இவைகள் வரமாட்டா. வியாதியால் பீடிக்கப்பட்ட பழங்களையும், செடிகளையும் பிடுங்கிக் கொளுத்தி விடுவதால் மற்றச் செடிகளுக்குப் பரவாமல் இதைத் தடை செய்யலாம். மீடியம் போர்டியே மிக்சர் என்பதையும், பொட்டாஷியம் சல்பேட்டையும் 10 காலன் ஜலத்தில் 3 அவுன்ஸ் அளவு மிச்சர் கலந்து செடிகள் மீது வியாதி தோன்றியவுடன் ஊற்றினால் அது குணமாகும்.

சீமைத் தக்காளி நல்ல சத்துள்ள ஆகாரம். வியாதியஸ்தர்கள் அதன் சாறைப் பிழிந்து சாப்பிட்டால் நல்ல பலமுண்டாகும். ரத்த விருத்தி உண்டாகும். ★

—"சுதேசமித்திரன்"

---

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் நம்புகிறேன். மனிதனுடைய நடவடிக்கைகளையும் முடிவுகளையும்பற்றிக் கவலைப் படுகிற கடவுளிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. கடவுட் கொள்கை, மதம் ஆகியவற்றின் சாரமே அன்பும் அறிவும்தான்"

என்று சொன்ன பகுத்தறிவுச் சுடர், அண்மையில் மறைந்துவிட்டது, உலகத்திற்கே ஈடுசெய்ய முடியாத நஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. எதையும் காரண காரியத்தோடு ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் நமக்கு, பேரறிஞர் ஐன்ஸ்டீன் ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்கிறார் என்றால் மிகையாகாது. ★

—"திராவிட நாடு"

# இணைந்த துருவங்கள்

## ஓர் செந்தமிழ் நாடகம்

[முத்தமிழ்ப் பித்தன்]

[சென்ற இதழ் தொடர்ச்சி]

### நாடக உறுப்பினர்கள்

**சபாபதி**........................*ஓர் பிரபல மனிதர்.*
**மோகன்**........................*அவர் மகன்.*
**கலா**............................*அவர் மகள்.*
**டாக்டர்சந்தானம்**..............*சபாதியின் நண்பர்.*
**வனஜா**........................*டாக்டர் மகள்.*

*மற்றும் நோயாளிகள் முதலியோர்.*

(இந்த நாடகத்தில் வரும் நிகழ்ச்சிகள், பெயர்கள் அனைத்தும் கற்பனையே. யாரையும், எந்நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுவன அல்ல.)

### காட்சி 4

**இடம் :**—*டாக்டர் சந்தானத்தின் வீடு.*

**இருப்போர் :**—*டாக்டர் சந்தானம், மோகன்.*

**நோயாளி :**—*டாக்டர், இருமி இருமி என் தொண்டையெல்லாம் புண்ணாகிவிட்டது. தினம் வெயில் ஏற ஏற காய்ச்சல் வருகிறது. நாளுக்கு நாள் பலவீனமாக இருக்கிறது. எலும்புருக்கி நோய் என்கிறார்களே, அதுவோ என்னமோ என்று என் மகன் பயப்படுகிறான்.*

**சந் :**—*(சாவதானமாக) உங்களுக்கு என்ன வேலை?*

**நோ :**—*(இருமிக் கொண்டே) நான் ஐகோர்ட்டில் வேலை செய்து வந்தேன். ரிடயராகி ஒரு வருஷம் ஆகிறது. பென்ஷன் வருகிறது. அதை வைத்துக் கொண்டு ஜீவனம் செய்கிறேன்.*

**சந் :**—*(நோயாளியைப் பரிசோதனை செய்து கொண்டே) மிஸ்டர், தைரியமாக இருங்கள். இது வெறும் மனப் பிராந்தி. உங்களுக்குச் க்ஷயமுமில்லை, ஒன்றுமில்லை. நிறைய பால், பழம், பாதாங்*

கொட்டை, அக்ரோட், பிஸ்தா இவைகளையெல்லாம் சாப்பிடுங்கள் சரியாய்ப் போய்விடும்.

நோ :—(மீண்டும் இருமிக் கொண்டே) அதுக்கெல்லாம் திருடப் போகணும். ஏதோ உங்க வாயால் க்ஷயம் இல்லேன்னு சொல்லிவிட்டீர்கள் அதுவே போதும். இதோ இதை வைத்துக்கொள்ளுங்கள்.

[நோயாளி தன் மடியினின்று ஐந்து ரூபாய் நோட்டை நடுங்கும் கரங்களால் எடுத்து டாக்டரிடம் கொடுத்து விட்டுத் தள்ளாடித் தள்ளாடி நடக்கிறார்.]

மோ :—டாக்டர்..................

சந் :—என்ன மிஸ்டர் மோகன், ஏன் தயக்கம்?

மோ :—நோயாளி சொன்ன அறிகுறிகள் அனைத்தும் கேட்டுக் கொண்டிருந்தேன். அவனுக்குச் க்ஷயம் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஏன் 'ஸ்பூடம்' எடுத்து சோதித்துப் பார்க்காமல் அனுப்பிவிட்டீர்கள்.

சந் :—(சிரித்த வண்ணம்) மிஸ்டர் மோகன், உங்கள் நிலைக்கு உண்மையிலேயே நான் பரிதாபப் படுகிறேன்.......சரி போகட்டும், எங்கள் பேச்சைக் கவனித்து வந்ததாகக் கூறினீர்களே, நான் அவனைக் கேட்ட கேள்வி என்னவென்று உங்களால் நினைவு படுத்திக் கூற முடியுமா?

மோ :—ஓ நன்றாக நினைவிருக்கிறதே, அவனுக்கு என்ன வேலை என்று கேட்டீர்கள். பென்ஷனர் என்று அவன் பதில் கூறினான்.

சந் :—அதிலிருந்து உங்களால் என்ன அநுமானிக்க முடிகிறது?

மோ :—(யோசித்து விட்டு) ஒன்றுமில்லை.

சந் :—(சிரித்துக் கொண்டே) ஒன்று மில்லையா? சரி போகட்டும், நானே கூறுகிறேன். சொற்ப பென்ஷனை நம்பி வாழும் அவன் சிகிச்சைக்கென்று ஏராளமான பணம் செலவிட முடியுமா?

மோ :—அதெப்படி முடியும்?

சந் :—அப்படிப் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்தால் நமக்குக் கட்டுபடியாகுமா?

மோ :—அப்படி யென்றால் வைத்தியத் தொழிலை ஒரு வியாபாரமாகக் கருதுகின்றீர்களா நீங்கள்?

சந் :—Certainly.

மோ :—(கோபமாக) அவனுக்குச் க்ஷயரோகம் இருக்கிறதென்று உங்களுக்கு நன்றாகத் தெரியும், ஆனல் பணம் கொடுக்க இயலாதவன் என்ற ஒரே காரணத்துக்காக அவனை அனுப்பி விட்டீர்கள் அப்படித் தானே.

சந் :—ஆம் அதிலென்ன சந்தேகம்?

மோ :—அப்படி யென்றால் அவன் அணு அணுவாக நோய்க்கு இரையாகி முடிவில் இறக்க வேண்டியது தானா?

சந் :—(கேலியாக) நாம் என்ன செய்ய முடியும். அது அவன் தலைவிதி.

மோ :—விதி......விசித்திரமான சமாதானம். ஏழையாகப் பிறந்துவிட்டால் மருந்துக்குப் பணமில்லையானால் நோயோடு போராடி முடிவில் இறக்க வேண்டும் என்ற ஒரு தலை நீதிக்குப் பெயர் விதி! ரோஜா தன்னைச் சுற்றிலும் முட்களை அமைத்துக் கொண்டது போல, சுயநலக்காரர்கள் தங்களைச் சுற்றிலும் அமைத்துக் கொண்ட அரண் தான் விதி......இல்லை......விதி ஓர் அழகிய தேன் கூடு. சுரண்டலின் விளைவாக ஏற்பட்ட ஓர் சொகுசான மாளிகை அது!

சந் :—(ஏகதாளமாக) ஆகா, அழகான உவமை மிஸ்டர். தேன் கூட்டைக் கலைக்காதீர்கள், எச்சரிக்கிறேன், தேனீக்கள் உம்மைக் கொட்டி விடும்.

மோ :—(உரத்த குரலில்) இல்லை. நிச்சயமாக இல்லை. தேன் கூடு—அந்த அழகிய மெழுகு மாளிகை—அதனைப் பகுத்தறிவு என்ற தீவட்டியின் உதவியால் சின்னா பின்னப் படுத்துவேன். வஞ்சகர்கள் தங்கள் வஞ்சகத்துக்கே இரையாவார்கள். ஈக்களால் அமைக்கப்பட்ட அந்த வஞ்சக மாளிகை உருகி, அந்த ஈக்களையே அழிக்கும் முடிவில்!

சந் :—(கேலியாக) மணலைக் கூடக் கயிறாகத் திரிப்பேன் என்று கூறுங்கள்.

மோ :—அதற்கு நான் தேவையில்லை. அதற்குப் பிரத்யேகமாக ஆட்கள் இருக்கிறார்கள், இந்த நாட்டில். மக்களின் மூட நம்பிக்கையே அவர்களுக்கு மூலதனம். எளியவர்களின் முதுகெலும்பு அவர்களுடைய இன்பபுரியின் ஏணிப் படிகள். கூரையேறிக் கோழி பிடிக்க முடியாது அவர்களால், ஆனால் வானத்தைக் கீறி வைகுந்தத்தைக் காட்டுகிறேன் என்பார்கள்.

சந் :—(சாந்தமாக) மிஸ்டர் மோகன் பதட்டப்படாதீர்கள். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். நான் இப்போது இந்த வட்டாரத்தில் மிகப் பெரிய டாக்டராக, ஒருவராலும் அசைக்க முடியாத ஓர் உன்னத நிலையை அடைந்து விட்டேன். நான் சொன்னால் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். முதன் முதலில் நான் தொழிலைத் துவக்கிய போது காப்பிக்குக்கூடக் காசில்லாமல் கஷ்டப்பட்டேன். என்னுடைய அறிவாலும், திறமையாலும் படிப்படியாக நான் உயர்ந்தேன். பெரிய

பெரிய பணக்காரர்கள் எல்லாம் இன்று என் நிரந்தர பேஷண்டுகள். இந்த நிலை எப்படி ஏற்பட்டது தெரியுமா? கூறுகிறேன். "பசியே எடுப்பதில்லை டாக்டர்" என்று கூறிக்கொண்டு யாராவது பணக்காரன் என்னிடம் வந்துவிட்டால் போதும்; "ஐயையோ இது ஒரு பயங்கரமான வியாதியாயிற்றே. நல்ல வேளையாகச் சரியான நேரத்தில் என்னிடம் வந்தீர்கள். முற்றிவிட்டால் இது எங்கே கொண்டுபோய்விடும் என்று எனக்கே தெரியாது. இப்போதே சிகிச்சை ஆரம்பித்தால் உயிருக்குப் பயமில்லை. நான் "காரண்டி" என்பேன். நல்ல திடகாத்திர மேனியோடு ஆரோக்கியமான மனிதர் இரண்டு இருமல் இருமிக்கொண்டு வந்தால் அதற்குச் க்ஷயம் என்று பெயர் சூட்டுவேன்,

**மோ:**—போதும் உங்கள் பிரதாபம். நிறுத்துங்கள் அத்துடன்.

**சந்:**—(சிரித்துக் கொண்டே) ஏழைகளுக்கு இரக்கம் காட்டிப் பேசினீர். இப்பொழுது கொழுத்த பணக்காரர்களிடம் பணம் கறக்கும் வித்தையை விளக்கினால் அதைக் கேட்பதற்குக் கூட கசக்கிறதா?

**மோகன்:**—(கோபமாக) டாக்டர், நான் உங்களிடம் தொழில் நுட்பம் அறிய வந்தேன்........

**சந்தானம்:**—(கேலியாக) அட பைத்தியமே இதை என்னவென்று நினைத்தீர்கள். இது தான் தொழில் நுட்பம். முதலில் நீங்கள் அறியவேண்டியது இதுதான்.

**மோகன்:**—(கோபமாக) சீ, நீ நாயினும் கடையன். உன் தொழில் நுட்பம் எனக்குத் தேவையில்லை.

**சந்தானம்:**—என்ன சொன்ணுய். (கோபமாக மோகனை அறைகிருர். மோகன் கண்கள் குளமாகின்றன. அறைபட்ட கன்னத்தை விரல்கள் வருடுகின்றன. தூவென்று உமிழ்கின்ருன். வாயினின்று இரத்தம் தோய்ந்த பல் விழுகின்றது.)

**மோகன்:**—(கனிவான குரலில்) அடியுங்கள் டாக்டர், அடியுங்கள். வேண்டுமானல் மறு கன்னத்தைக் காட்டுகிறேன். உங்கள் வெறி தணியுமட்டும் அடியுங்கள். ஆனல் உங்களுக்கு ஓர் எச்சரிக்கை. ஏழைகள் உலை நீர் போன்றவர்கள். கொதிப்பும் கொந்தளிப்பும் அதிகமாக் அதிகமாகத் தட்டையும் வீசியெறியும்வல்லமை உலைநீருக்கு ஏற்படுகிறது. இதை மறக்க வேண்டாம்.

**சந்தானம்:**—(கடகடவென சிரித்து) மீண்டும் கற்பனையின் உச்சாணிக் கிளைக்குத் தாவுகின்றீர்கள், நண்பரே!

**மோகன்:**—இன்று என் வாழ்க்கையிலேயே ஓர் நல்ல நாள்.

நான் புத்தறிவு பெற்ற நாள். இருளிலே வைத்த செடி ஒளி நோக்கி வளருமாம். விஞ்ஞானம் கூறுகிறது. இதுவரை இருளிலே கிடந்தேன். இன்று ஒளிநோக்கிப் பயணப்படுகிறேன். பசும் புற்களுக்கிடையே பாம்பு படுத்துறங்கும் என்று நான் எண்ணவில்லை, இது நாள்வரை. இன்று அதனைக் கண்கூடாகக் கண்டேன். அத்திப் பழத்திலே அருவெறுக்கத்தக்கப் புழுக்கள் நெளியும் என்பது தெரியாது எனக்கு. இன்று அறிந்தேன் இதனை. (கண்ணீர் சொரிந்து) இந்த அரிய உண்மையை எனக்குச் சொல்லாமல் சொல்லித்தந்த குருவே, என் ஞானப் பிதாவே, இதோ இந்த ஏகலைவன் தரும் அற்ப குருதட்க்ஷணை. இதை அங்கீகரிக்கும்படி உங்களை மன்றாடிக் கேட்கிறேன். இதை மறுக்காதீர்கள் மறுக்காதீர்கள்.

[மோகன் கீழே கிடக்கும் பல்லை எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காமல், விசையாகப் போகிறான். சந்தானம் ஸ்தம்பித்து நிற்கிறார். பின்பு மோகன் என்று கூப்பிடுகிறார். ஆனால் அவன் திரும்பவில்லை. அவர் கண்களில் நீர் ததும்புகிறது. கையில் அப்பல்லை எடுத்துக் கொள்ளுகிறார். அப்போது வனஜா குதூகலமாக வருகிறாள்.]

**வனஜா** :— அப்பா, உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று இரண்டு நாளாக நினைக்கிறேன் முடியவில்லை. டாக்டர் மோகன் இருக்கிறாரே........[கையில் பல்லை வைத்துக்கொண்டு கண்ணீர் விடும் தன் தந்தையைக் காண்கிறாள் திடுக்கிடுகிறாள்]. அப்பா இது என்ன? இது யார் பல். இதை வைத்துக்கொண்டு ஏன் அப்பா கண்ணீர் விடுகிறீர்கள். தூக்கி தூர எறியுங்கள் அதை.

**சந்தானம்** :— (கண்களைத் துடைத்துக்கொண்டு) அம்மா, இது சாதாரணப் பல் அல்ல. என் ஏகலைவன் எனக்கு அளித்த குரு தட்க்ஷணை இது. இது இரண்டு உள்ளங்களில் ஒளியேற்றிய மகத்தான பல் அம்மா.

**வனஜா** :— (பயந்தவாறு) அப்பா என்ன அப்பா கூறுகிறீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே:

**சந்தானம்** :— உன் வாழ்க்கையிலே இருள் பாய்ச்சி விட்டேன். உன் இன்பக் கனவுகளைக் கலைத்து விட்டேன். காதற்கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டேன். உன் வாழ்க்கை வேகவைத்த விதையாகிவிட்டது. ஆம் வனஜா வெளிப்படையாகக் கூறுகிறேன், நீ மோகனை மணக்க முடியாது. அவனை நான் எதிரியாக்கிக் கொண்டு

விட்டேன், என் முட்டாள் தனத்தால்.

**வனஜா** :—மோகன். (மயங்கி விழுகிருள்! சந்தானம் தாங்கிப் பிடித்து ஆசுவாசப்படுத்துகிருர்)

## காட்சி 5

[மோகனின் வீடு. மோகன் மேலும் கீழும் கூண்டில் அடைபட்ட புலிபோல் உலவுகின்ருன். அவன் தங்கை கலா கண்ணீர் வழியும் தன் முகத்தைத் தன் இருகைகளாலும் ஏந்தியபடி அமர்ந்துள்ளாள்.]

**கலா** :—அண்ணு, அப்பா உன்னை அங்குக் கொண்டு போய்ச் சேர்த்ததே தப்பு.

**மோகன்** :—அப்படிக் கூருதே. உலகம் இன்னதென்று அறிவதற்கு ஓர் அரிய வாய்ப்பை அப்பா ஏற்படுத்தித் தந்ததாகவே நாம் அதைக் கருத வேண்டும்.

[கதவு தட்டப்படுகிறது. வனஜா முன்னும் அவளைத் தொடர்ந்து சந்தானமும் வருகிருர்கள்.]

**கலா** :—சாகசக்காரி, சண்டாளி, உள்ளே வராதே. போ வெளியே.

**மோகன்**:—பாம்புக்குட்டியே, நீ ஏன் இங்கு வந்தாய்? யார் அழைத்தது உன்னை?

**வனஜா** :—மோகன், ஏன் இத்தனைக் கோபம். நான் வீட்டில் இருந்திருந்தால் இந்த மாதிரியான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது. என் தந்தையை தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்.

**மோகன்** :—தந்தையின் சார்பில் மகள் வழக்காட வந்திருக்கிருள், கலா!

**கலா** :—அவர்களோடு நமக்கென்ன பேச்சு, விரட்டுங்கள் அண்ணு அவளை.

**வனஜா** :—அவசரப்படாதீர்கள். நான் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள்.

**மோகன்** :—கேட்பதற்கு என்ன இருக்கிறது. திட்டவட்டமாகக் கூறுகிறேன். நானும் உன் தந்தையும் இருதுருவங்கள். வடதுருவம் அவர். தென் துருவம் நான்! நாங்கள் ஒன்றுபடமுடியாது. நான் உன்னை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

**வனஜா** :—மோகன், நீங்களே பேசிக்கொண்டு போகின்றீர்களே நான் கூறுவதைக் கொஞ்சம் கேளுங்களேன்....

**சந்தானம்** :—மோகன், நான் என் தவறுகளை உணர்ந்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். நான் இன்று முதல் புது மனிதன். என் உள்ளத்தில் புத்தொளி தோன்றி விட்டது என் மமதை, அகங்காரம், சுயநலம் அனைத்தையும் சுட்டுச் சாம்பராக்கி விட்டேன். இன்று

முதல் நான் எளியவர்களுக்காக உழைக்கச் சூள் எடுத்துக்கொண்டு விட்டேன். நீங்களும் நானும் இருதுருவங்க ளல்ல இணைந்த துருவங்கள் தோளோடு தோள் இணைந்தோம் உள்ளத்தோடு உள்ளம் இணைந்தோம். ஏன்? உறவாலும் இணைந்து விட்டோம். வனஜாவை ஏற்றுக்கொள்ளுங்கள்: அவள் காதலைக் கருகிய மொட்டாக ஆக்கிவிடாதீர்கள். அவள் உங்கள் நிழல்.

[சந்தானம் மோகன் காலில் விழுகிறார். மோகன் அவரைத் தூக்கி நிறுத்துகிறான்.]

**மோகன் :**—எழுந்திருங்கள். என்ன இதெல்லாம்.

**கலா :**—(குறும்பாக) பாம்புக் குட்டிக்கு மன்னிப்பே கிடையாதா அண்ணு?

**மோகன் :**— (சிரித்தபடியே) என் தங்கை கலா குறும்புத்தனத்தில் உன்னைக் கூட வென்று விடுவாள். ஏன் வனஜா, அப்படித்தானே?

**வனஜா :**—கோபம் எல்லாம் தணிந்து விட்டதா?

**மோகன் :**—வாடை போய் இப்போதுதான் தென்றல் வீசுகிறதே!

[வனஜா தன் கையைப் பாம்பு போல செய்துகாட்டி 'புஸ்' என்று ஓசை செய்கிறாள்.]

**கலா :**—(வனஜாவைப் பார்த்து) ஏ பாம்புக்குட்டி, பெட்டிக்குள்ளே அடங்கிக்கிட, என் அண்ணு இருக்கிறாரே அவர் ஒரு பெரிய பாம்பாட்டி. அவரிடம் உன் ஜபம் சாயாது.

**வனஜா :**—ஐயோ பாவம்! இந்தப் பாம்பாட்டிக்கு மகுடி இல்லையே.

**கலா :**—ஏன் இல்லை. இதோ இது என்னவாம். [ஸ்டெதாஸ் கோப்பைக் கொண்டு வந்து மோகன் கழுத்தில் மாட்டுகிறாள். எல்லோரும் சிரிக்கிறார்கள்.]

[சபாபதி வருகிறார்.]

**சந்தானம் :**—வாருங்கள் மிஸ்டர் சபாபதி, இப்பொழுது தான் உங்களை நினைத்தேன்.

**சபாபதி :**—(வனஜாவைச் சுட்டிக்காட்டி) இது யார்? புதுசா இருக்கே!

**கலா :**—(குறுக்கிட்டு) உங்கள் வருங்கால மருமகள்.

**சபாபதி :**—வருங்கால மருமகளா? அப்போ எல்லாம் பேசி முடித்து விட்டீர்கள் போலிருக்கிறது.

**சந்தானம் :**—அந்தச் சிரமத்தை நமக்கு அவர்கள் வைக்கவில்லை.

**சபாபதி :**—ஏதோ, அவர்கள நன்ருக இருந்தால் அதுவே போதுமானது. என்ன, நான் சொல்வது?

**சந்தானம் :**—வாஸ்தவம்.

**கலா :**—திருநிறைச் செல்வன் டாக்டர் மோகன் M.B.,B.S, க்கும் செல்வி வனஜாவுக்கும் அவர்களாலேயே திருமணம்

(41-ம் பக்கம் பார்க்க)

# பண்டைக் காலத்து எழுது கருவிகள்

மயிலை. சீனி. வேங்கடசாமி

இந்தக் காலத்திலே உலகம் முழுவதும் காகிதத்தாளும், பேனாவும் எழுதுகருவிகளாகப் பயன்பட்டு வருகின்றன. இவை எழுத்து வேலைக்குப் பெரிதும் வாய்ப்பாகவும், எளிதாகவும் அமைந்திருக்கின்றன. ஆனால், காகிதத்தாள்வருவதற்கு முன்பு, பண்டைக் காலத்திலே இவ்வளவு எளிதானதும் வாய்ப்பானதும் ஆன எழுதுகருவிகள் இல்லை. பண்டைக் காலத்திலே உலக மக்கள் எவ்விதமான எழுது கருவிகளை வழங்கி வந்தார்கள் என்பதையும், பின்னர் காகிதத்தாள் எவ்வாறு நடைமுறையில் வந்தது என்பதைப் பற்றியும் ஈண்டுக் கூறுவோம்.

## எகிப்தியரின் பேபைரஸ்

மிகமிகப் பண்டைக் காலத்திலே, நாகரிகம் பெற்று வாழ்ந்த மக்கள் **எகிப்தியர்** என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. அக் காலத்து எகிப்தியர்கள் எழுதுகருவியாகப் பயன்படுத்திய பொருள் **பேபைரஸ்** என்பது. பேபைரஸ் என்னும் இச் சொல் தான் இப்போதும் 'பேபர்' என்று காகிதத் தாளுக்கு வழங்கப்படுகிறது. ஆனால், எகிப்தியர் கையாண்ட பேபைரஸ் வேறு. இப்போதைய பேபர் வேறு. பேபைரஸ் என்பது எகிப்து தேசத்துச் சதுப்பு நிலங்களிலும், தண்ணீர்த் தேக்கமுள்ள இடங்களிலும் வளர்ந்த ஒருவகைக் கோரைப் புல்லின் பெயர். இந்தக் கோரை, பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வளரும். ஒவ்வொரு தாளும் ஒரு ஆளின் கைப்பருமன் இருக்கும். இக் கோரைத் தாள்களை அறுத்துவந்து பட்டையை உரித்து ஒரே அளவாக நறுக்கிப் பதப்படுத்தி வெயிலில் வைத்து உலர்த்துவார்கள். காகிதம் போன்று இருந்த இக் கருவிக்குப் பேபைரஸ் என்னும் அக்கோரையின் பெயரே வாய்ந்தது. இவ்வாறு பதப்படுத்தப் பட்ட பேபைரஸ் தாள்களை ஒன்றோடொன்று ஒட்டிச் சேர்த்து நீண்டசுருளையாகச் செய்வார்கள். பெரிய சுருளில் 20 தாள்கள் ஒட்டப்பட்டிருக்கும். பேபைரஸ் தாள்கள் பற்பல அளவுகளில் அக்காலத்துக் கடைகளில் விற்கப்பட்டன. அவை இரண்டு அங்குல அகலம் முதலாகப் பதினைந்து அங்குல அகலம் வரையில் இருந்தன.

இந்தப் பேபைரஸ் தாள்களில், எழுதுவதற்கு ஒருவகைப் பேனா பயன்பட்டது. இப்பேனா நாணல் செடிகளின் தண்டினால் செய்யப்பட்டது. நாணல்

குழாய்களைச் சுமார் 6 அங்குல நீளமுள்ள துண்டுகளாக வெட்டி, அதன் ஒரு முனையைக் கூர்மையாகச் சீவி கூரின் நடுவைச் சிறிது பிளந்துவிட்டால் அது நேர்த்தியான பேனாவாக அமையும். இந்தப் பேனாக்களினால் கருத்த மைகொண்டு பேபைரஸ் தாள்களில் பண்டைக் காலத்து எகிப்தியர், எழுத்து வேலைகளைச் செய்து வந்தார்கள். இலக்கியம், இலக்கணம், காவியம், கணக்கு, கடிதம் முதலிய எல்லாம் பேபைரஸ் தாளிலேதான் எழுதப்பட்டன.

எகிப்தியர் கொண்டிருந்த இந்த வழக்கத்தையே. அந்நாட்டுக்கு அடுத்திருந்த தேசத்தவரும் கைக்கொண்டனர். எகிப்துதேசத்துக்கு அண்மையிலிருந்த கிரேக்கரும் (யவனர்). பினீஷியரும், உரோமரும், எபிரேயரும், அர்மீனியரும், அராபியரும் எகிப்தியர் வழங்கிய பேபைரஸ் தாள்களையே தமது எழுதுகருவியாகியாகக் கொண்டனர். இக்கருவி பாலத்தீனத்தில் கி. மு. 6ம் நூற்றாண்டில் உபயோகத்திலிருந்து வந்தது. கிரேக்கர்கள் கி. மு. 5ம் நூற்றாண்டில், இதை உபயோகித்து வந்தனர். உரோமர்கள் கி. மு. 3ம் நூற்றாண்டில் பேபைரஸைப் பயன்படுத்தினர். இந்நாடுகளில் கி. பி. 7ம் நூற்றாண்டு வரையில் பேபைரஸ் வழக்காற்றில் இருந்து வந்தது.

எழுதுவோர் ஓரிடத்தில் அமர்ந்து பேபைரஸ் சுருளையை வலது பக்கம் வைத்துகொண்டு இடது கையினால் பிரிக்கப்பட்ட தாளைப்பிடித்துக் கொள்வார்கள். விரிந்த பகுதியில் நாணல்பேனாவினால் மைதொட்டு எழுதுவார்கள். ஒரு பத்தி எழுதியானவுடன், எழுதப்பட்ட பகுதியை இடது கையினால் சுருட்டிப் பிடித்துக்கொண்டு, அடுத்த பத்தியை எழுதுவார்கள், இவ்வாறு சுருளை முழுவதும் பத்தி பத்தியாக எழுதப்படும். முழுவதும் எழுதியானவுடன், நன்றாகச் சுருட்டிக் கயிற்றினால் கட்டிவைப்பார்கள். இவ்வாறு எழுதப்பட்ட பேபைரஸ் ஏட்டுச்சுருள்களில் சில இப்போதும் மேல் நாட்டுக் காட்சிச்சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன.

கிரேக்க தேசத்தார் பேபைரஸ் சுருணைகளைப் **பிப்லியன்** (Biblion) என்று தமது மொழியில் வழங்கினர். பிப்லியன் என்னும் சொல்லுக்குச் சுவடி (புத்தகம்) என்பது பொருள். உரோமர்கள் தமது லத்தீன மொழியில் பைபிள் (Bible) என்று வழங்கினர். பைபிள் என்றாலும் சுவடி என்பது தான் பொருள். எனவே, நூல், அல்லது புத்தகம் என்னும் பொருள் உடைய பைபிள் என்னும் சொல், முற்காலத்தில் பொதுவாகப் புத்தகங்களுக்கு வழங்கப்பட்டு இக் காலத்தில் கிறித்துவ வேதப் புத்தகத்துக்குச் சிறப்புப் பெயராக வழங்கப் படுகிறது என்பது விளங்குகிறது.

தொடக்கத்திலே, நெடுங் காலம் வரையில், பேபைரஸ் நீண்ட சுருள்களாக அமைந்திருந்தன. பேபைரஸ் சுருளை முழுவதும் பிரித்துப் பார்த்தால் அன்றி, குறிப்பிட்ட ஒரு பகுதியை வாசிக்க இயலாது. இந்தச் சங்கடத்தைப் போக்குவதற்குப் பிற்காலத்திலே, புத்தக அமைப்பில் பேபைரஸ் தாள்களை அமைத்தனர். ஓரே அளவாக உள்ள பேபைரஸ் தாள்களை இரண்டிரண்டாக மடித்து ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி பைண்ட் செய்தனர். அதாவது தற்காலத்திய புத்தக உருவத்தில் அமைந்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட பேபைரைஸ் புத்தகங்களை எளிதாகப் புரட்டித் தமக்கு வேண்டிய பகுதியை எடுத்து வாசிக்கலாம். இத்தகைய சுவடிகளுக்கு கோடக்ஸ் (Codex) என்பது பெயர். கோடக்ஸ், அல்லது கௌடக்ஸ் என்னும் லத்தீன் மொழிச்சொல்லுக்குப் பொருள் மரப்பலகை என்பது. மெல்லிய பலகைகளாக அறுக்கப்பட்ட சிறு பலகைகளை நன்றாக இழைத்து அதன் மேல் மெழுகைப்பூசி அதில் கூரிய ஆணியால் கடிதம் எழுதுவது உரோமரது பண்டைக்காலத்து வழக்கம். இவ்வாறு அமைக்கப்பட்ட பலகைகளைக் கோடக்ஸ் என்று வழங்கினர். பிறகு, புத்தகவடிவில் அமைக்கப்பட்ட சுவடிகளுக்கும் கோடக்ஸ் என்னும்பெயர் வழங்கப்பட்டது.

## தோலாலமைந்த கருவிகள்:

எகிப்து நாடு வெப்பமுள்ள நாடு. அதைவிட வெப்பம் குறைந்த கிரேக்கம் இத்தாலி முதலிய தேசங்களில் பேபைரஸ் விரைவில் கெட்டுப்போன படியால், அந்நாட்டார் வேறு எழுது கருவிகளைத் தேடலாயினர். மிருகங்களின் தோல்கள் பேபைரசுக்குப் பதிலாக உபயோகப் படுத்தப்பட்டன. எகிப்து தவிர ஏனைய மத்திய தரைக் கடல் ஓரத்திலுள்ள நாடுகள் தொன்று தொட்டு தோலை எழுது கருவியாக வழங்கிவந்தன. பிறகு, பேபைரஸ் உபயோகப்படுத்தப் பட்டது. பேபைரஸ் விரைவில் கெட்டுப்போவதைக் கண்ட பிறகு இவர்கள் தோலையே மீண்டும்எழுதுகருவியாகப்பயன் படுத்தினர். எகிப்திலும் கூட தோல் எழுதுகருவியாகப் பிற் காலத்தில் பயன் படுத்தப்பட்டது. ஆனாலும், பேபைரஸ் அடியோடு வழக்கொழிந்து விடவில்லை. இரண்டும் கையாளப் பட்டு வந்தன.

சாதாரண மிருகங்களின் தோலைவிட, வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின் தோலை நன்கு பதப்படுத்தி எழுது கருவியாகப் பயன்படுத்தினார்கள். இதற்கு மேம்ரேனா (Membrana) என்று பெயா வழங்கினர். ஆட்டுத்தோலைச் சுண்ணாம்பு நீரில் ஊறவைத்து மயிர்களைக் களைந்து விட்டு, மறுபுறத்தில் உள்ள சதைப்பற்றுக்களையும் நீக்கி, மரச்சட்டத்தின் மேல் உலரவை

த்து, சீலைச் சுண்ணத்தினாலும், ஒருவகைக் கல்லினாலும் தேய்த்து பெருகு ஏறச்செய்வார்கள். இது நேர்த்தியான எழுது கருவியாகவும் இருபுறத்திலும் எழுதக் கூடியதாகவும் இருந்தது.

இதைவிட நேர்த்தியான எழுதுகருவி, கன்றுக்குட்டியின் தோலினால் செய்யப்பட்டது. இது **வெல்லம்** (Vellum) என்று பெயர் பெற்றது. இது ஆட்டுத் தோலினால் செய்யப்பட்ட எழுது கருவியைவிட மிக நேர்த்தியாகவும் அழகும் மெருகும் உள்ளதாகவும் இருந்தது. கன்றுக்குட்டித் தோல் என்னும் பொருளுடைய வெல்லம் என்னும் லத்தீன் மொழிச்சொல், பிறகு, ஏனைய மிருகங்களின் தோல்களினால் செய்யப்பட்ட எழுது கருவிகளுக்கும் வழங்கப்பட்டது.

தோலினால் செய்யப்பட்ட எழுது கருவிகளுக் கெல்லாம் இன்னொரு பொதுப்பெயரும் வழங்கி வந்தது. அப்பெயர் **பெர்கமேனா** (Pergamena) என்பது. சின்ன ஆசியாவில் **பெர்கமம்** என்னும் ஒரு நகரம் இருந்தது. இந்த நகரத்தில் ஏராளமான தோலினால் செய்யப்பட்ட எழுதுகருவிகள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து விற்கப்பட்டன. பெர்கமம் நகரத்தில் செய்யப்பட்டபடியால் இத் தோற் கருவிகளுக்குப் பெர்கமேனா என்று அந்நகரத்தின் பெயர் வழங்கப்பட்டது; கலிங்க நாட்டிலிருந்து வந்த துணிகளுக்குப் பண்டைக்காலத்-தமிழர் **கலிங்கம்** என்று பெயர் வழங்கியதைப் போல. பெர்கமேனா என்னும் எழுதுகருவி எப்படி வழக்காற்றில் வந்தது என்பது பற்றி வர்ரோ (Varro) என்பவர் கூறும் கீழ்கண்ட செய்தியை, பிளினி (Pliny) என்னும் யவன ஆசிரியர் தமது இயற்கைச் சாத்திர வரலாறு என்னும் நூலில் குறித்துள்ளார்:—பெர்கமம் நாட்டு அரசனான யூமேனஸ் II. (Eumenes II. B. C. 197 – 159.) என்பவருக்கும், எகிப்து நாட்டு மன்னரான **டாலமி** (Ptolemy) என்பவருக்கும் தமது நாட்டுப் புத்தகசாலைகளைப் பற்றிப் போட்டி ஏற்பட்டது. பெர்கமம் நாட்டு நூல் நிலையம் அலெக்ஸாந்திரியா நகரத்து நூல் நிலையத்தைவிடச் சிறப்படைந்துவிடுமோ என ஐயுற்ற டாலமி அரசன், தனது எகிப்து தேசத்திலிருந்து பேபைரஸ் எழுது கருவிகளை பெர்கமம் நாட்டுக்கு அனுப்பக்கூடாதென்று உத்தரவிட்டான். இதனால் பெர்கமம் நாட்டில் அதிகமாக நூல்கள் எழுதப்படுவது தடைப்படும் என்பது இவன் கருத்து. பெர்கமம் நாட்டாருக்கு பேபைரஸ் கிடைக்காமற் போகவே அந்நாட்டார் மெம்ரேனா என்னும் தோற்கருவிகளைக் கண்டு பிடித்துக் கையாண்டனர்.

இவர் கூறும் இச்செய்தி உண்மைபா அல்லது கட்டுக்கதையா என்பது தெரியவில்லை, ஆனால், தோலினால் எழுது கருவிகளை

உண்டாக்கி வெளி நாடுகளிலும் விற்பனை செய்து பேர் பெற்ற இடம் பெர்கமம் என்னும் நகரம் என்பது இதிலிருந்து உறுதிப் படுகிறது.

கி. மு. முதல் நூற்றுண்டிலிருந்து தோல் எழுதுகருவி, மெல்ல மெல்ல வழக்காற்றில் வரலாயிற்று. பேபைரஸ் உபயோகமும் இருந்து வந்தது. படிப்படியாக தோற்கருவிகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. கி. பி. 4-ம் நூற்றுண்டில் தோல் எழுது கருவிகள் முக்கிய இடம்பெற்றன. சீசரியா (Caesarea) என்னும் இடத்தில் இருந்த ஒரிஜன் (Origen), பாம்பிலஸ் (Pamphilus) என்பவர்கள் அமைத்திருந்த நூல் நிலையங்கள் பாழுடைந்து விட்டன. கி. பி. 4-ம் நூற்றுண்டின் மத்தியில் இந்நூல் நிலயங்களைப் புதுப்பித்துச் செம்மைப்படுத்திய அகசியஸ், யூசெபியஸ் என்னும் இரண்டு பாதிரிமார்கள், இந்நிலையங்களிலிருந்த சிதைந்து போன பேபைரஸ் சுவடிகள், தோல்களில் எழுதிவைக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். கான்ஸ்டன்டின் என்னும் சக்கரவர்த்தி, தமது கான்ஸ்டான்டினோபில் என்னும் நகரத்திலிருந்த 50 கிறித்துவக் கோயில்களுக்கு 50 விவிலிய நூல்களை வெல்லம் என்னும் தோல்களில் எழுதி வைக்கும்படி கி. பி 332-இல் உத்தரவு செய்தார் (இத்தோற் கருவிகள். புத்தக உருவ அமைப்பிலே செய்யப்பட்டன.) இத்தகைய சான்றுகளினால் கி. பி. 4-ஆம் நூற்றுண்டிலே, பேபைரஸ் தாள்களைவிட, தோற்கருவிகள் தாம் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டன என்பது தெரிய வருகிறது.

## ஓலைச் சுவடிகள்

எகிப்தியர், கிரேக்கர், உரோமர், அராபியர், யூதர் முதலிய இனத்தவர் பண்டைக்காலத்தில் பேபைரஸ் தாளையும் விலங்குகளின் தோல்களையும் எழுது கருவியாக வழங்கி வந்த காலத்தில் நமது நாட்டவர் பனையோலையினால் செய்யப்பட்ட ஓலைச்சுவடிகளில் நூல்களை எழுதி வந்தார்கள். பனையோலைகளை ஒரே அளவாக நறுக்கி ஒன்றுகச்சேர்த்து இரண்டு மரச்சட்டங்களை இருபுறங்களிலும் நீண்டபக்கமாக அமைத்து இவைகளின் ஊடே இரண்டு துளைகளை அமைத்துக் கயிறுகொண்டு சுற்றிக் கட்டிய சுவடிகள் தாம் ஓலைச் சுவடிகள். இப்பனையோலை ஏடுகளில் இரும்பினுல் அமைந்த எழுத்தாணிகளினால் வரைவார்கள். ஓலைச்சுவடிகளைப் பற்றி அதிகமாக எழுத வேண்டியதில்லை. இத்தகைய ஓலைச்சுவடிகள் தாம் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய கீழை நாடுகளில் முற்காலத்தில் வழக்காற்றில் இருந்தன.

## குறியீடுகள் முதலியன

பேபைரஸ், தோல், பனையோலை ஆகிய பண்டைக்காலத்து எழுதுகருவிகளில் எழுதப்பட்ட எழுத்துக்கள் முற்றுப்

புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி முதலிய குறியீடுகளைக் கொண்டிருக்கவில்லை. அன்றியும் சொற்களைத் தனித்தனியே பிரித்தெழுதாமல் ஓரே கோர்வையாக எழுத்துக்கள் எழுதப்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பது கடினமாகவும் வருத்தமாகவும் இருந்தது. பழக்கப்பட்டவர்கள் மட்டும் இவைகளைப் படிக்கமுடியும். பழக்கப்பட்டவர்களுக்கும் தொடரைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. மேல்நாட்டார். கி. பி. இரண்டாம் நூற்றூண்டில், சொற்களைப் பிரித்து எழுதத் தொடங்கினார்கள். இன்னும் பிற்காலத்தில் புள்ளிகள் முதலியகுறியீடுகளை வழங்கினார்கள். நமது நாட்டு ஓலைச்சுவடிகளில் முற்றுப் புள்ளி முதலிய குறியீடுகள் அமைக்கப்படவில்லை.

## பேபர் (கடதாசி) வந்த வரலாறு

இப்பொழுது பேபர் என்று வழங்குகிற எழுது தாள்களை முதல் முதல் கண்டுபிடித்தவர் சீனநாட்டுச் சீனர்கள். கத்தைத் துணி, சணல்நார், வைக்கோல், முசுக்கட்டைமரம், முதலிய பொருள்களிலிருந்துகாகிதத்தை அவர்கள் செய்து உபயோகப் படுத்தி வந்தார்கள். சீனர் காகிதத்தாளுக்கு என்ன பெயர் வழங்கினார்கள் என்பது தெரியவில்லை. இதற்கு இப்போது வழங்கபடடுகிற பேபர் என்னும் பெயர், பேபைரஸ் என்னும் எகிப்திய மொழியிலிருந்து வந்தது. சீனர் கடதாசியை கி. பி. முதல் நூற்றூண்டில் உண்டாக்கினார்கள். அக்காலத்தில் சீனர் செய்த காகிதத் துண்டுகளில் சில, சீனநாட்டு நெடுஞ்சுவர்களிலிருந்து இப்போது கண்டெடுக்கப்பட்டன. அன்றியும், சீன நாட்டிலே, புதைபொருள் ஆராய்ச்சியாளர் (Archoeologists) பழைய சீன நாட்டுக் காகிதங்களைப் பூமிக்குள்ளிருந்து கண்டெடுத்தனர், கி. பி. 7-ம் நூற்றூண்டில், அராபியர் பெரும் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் இந்தியா, சீனு முதலிய கீழ்நாடுகளுடன் பெருத்த வாணிபம் செய்து வந்தார்கள். அக்காலத்தில் சமர்கண்டு என்னும இடத்தில் சீனர் காகிதப்பட்டரை ஒன்றை ஏற்படுத்திக் காகிதம் செய்து வந்தனர். வாணிபத்தின் பொருட்டு அங்குச் சென்ற அராபியர், காகிதம் செய்யும் தொழிலின் இரகசியத்தைக் கி. பி. 650ல் கண்டு கொண்டனர். பிறகு, தாங்களே காகிதம் செய்யத் தொடங்கினார்கள். இவ்விதமாக அராபியர் காகிதத் தொழிலைச் சீனரிடமிருந்து கற்றுத் தங்கள் நாடுகளில் பரவச் செய்தனர். கி. பி. 800ல் பாக்தாத் நகரத்தில்காகிதப் பட்டரை இருந்தது கி. பி. 900ல் எகிப்து நாட்டில் ஒரு காகிதப்பட்டரை இருந்தது. கி. பி. 1100ல், மொராக்கோ தேசத்தில் காகிதத் தொழிற்சாலை இருந்தது. அராபியர், ஐரோப்பா கண்டத்திலுள்ள ஸ்பெயின் தேசத்தையும்

கைப்பற்றிச் சிலகாலம் அரசாண்டார்கள். அக்காலத்தில், அதாவது, கி. பி. 1150ல் ஸ்பெயின் தேசத்திலும் அராபியர் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்தினார்கள். பிறகு, அங்கிருந்து பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாட்டினர் காகிதம் செய்யக் கற்றுக் கொண்டார்கள். இவ்வாறு, கீழ்நாடாகிய சீன தேசத்திலிருந்து காகிதத் தொழில், அராபியர் வழியாக மத்தியகிழக்கு நாடுகளுக்குச் சென்று, அங்கிருந்து அராபியர் மூலமாகவே மேல் நாடுகளுக்குச் சென்றது. கடதாசித்தாள் பேபைரஸ், தோல் இவைகளைவிட விலை குறைவாகவும் அதிக வாய்ப்பாகவும் இருந்தபடியால் கடதாசித்தாளை மக்கள் நாளுக்குநாள் அதிகமாகக் கையாளத் தொடங்கினார்கள். ஆகவே, நாளடைவில் பேபைரஸ் தோலும் வழக்கொழிந்து விட்டன. நமது நாட்டுக்கு முகமதியர்கள் தான் கடதாசியை முதல் முதல் கொண்டு வந்தனர். கடதாசி வந்த பிறகு ஓலையில் எழுதும் வழக்கம் மறைந்து விட்டது.

காகிதப்பட்டறைகளில் கையினாலேகடதாசியை அக்காலத்தில் செய்து வந்தார்கள். ஆகவே, அக்கடதாசி கனம் தடித்தனவாயும் முரடாயும் இருந்தன. பிறகு 19ம் நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்பே, பிரான்ஸ் தேசத்தில் மெஷின் என்னும் இயந்திரத்தினால் கடதாசித்தாள் செய்யத் தொடங்கினார்கள். இந்த யந்திரம் பிற்காலத்தில் படிப்படியாகசீர்திருத்தப்பெற்று இப்போது புதிதாகப் பல நுட்பமான கருவிகளுடன் அமைக்கப் பட்டிருக்கின்றது. இந்தக் காகித யந்திரங்களின் மூலமாகப் பல வகையான காகிதங்களை நாம் இன்று பெற்றுக் கொள்கிறோம்.

காகிதத் தொழில் செம்மைப் படுத்தப்பட்டது போலவே, நாணற்குழாய் பேனாக்களுக்குப் பதிலாக குவில்பேனா என்னும் இறகுப் பேனா வந்து, அதற்குப் பிறகு நிப் உள்ள முள்பேனா உண்டாகி, இப்போது பௌண்டன் பேனாவும் வழக்காற்றில் இருந்து வருகிறது. நாம் இப்போது சாதாரணமாக வழங்கி வருகிற பேபர், பேனாக்களை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த மக்கள் காண்பார்களானால், எவ்வளவு வியப்பும் மகிழ்ச்சியும் அடைவார்கள்!

—" செந்தமிழ்ச் செல்வி "

---

(34-ப் பக்கத் தொடர்ச்சி)

உறுதி செய்யப்பட்டு........

**சபாபதி** :— பெரியோர்களால் ஆமோதிக்கப்பட்டு............

**சந்தானம்** :—வரும் தை மாதம் 10ம் நாள் காலை 10 மணி அளவில் இதே இல்லத்தில் நடைபெறும்.

**கலா**:—தாங்கள் தங்கள் நட்பும் சுற்றமும் சூழ வந்திருந்து மணவிழாவினைச் சிறப்பிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

**எல்லோரும்** :—வணக்கம்.

[திரை]

முற்றிற்று.

# அந்தக் காலத்து :: :: நூல் நிலையம்!

[ கௌதமன் ]

உலகிலே பல நூல் நிலையங்கள் இருந்தன—இருக்கின்றன. அவற்றிலே மிகப் பெரியதும், முதன்மையானதும், பழமையானதுமான நூல்நிலையம், எகிப்து நாட்டிலுள்ள அலெக்ஸாண்டிரியா நூல்நிலையம்தான்! கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டர் கி. மு. 332–ல் எகிப்து நாட்டின் மீது படையெடுத்து வந்தபோது, 'அலெக்ஸாண்டிரியா' என்னும் இந்நகரை நிறுவினான்! அவனுக்குப் பிறகு ஆளும் பொறுப்பேற்ற அவன் தளபதி தாலமி அதில் சிறந்ததொரு நூல்நிலையம் கண்டான். இந்நூல்நிலையத்தைப் பற்றியும்—இந்நகர் உண்டாகி வளர்ந்தவிதம் பற்றியும்—அங்கு நடந்த ஆராய்ச்சி பற்றியும்—நண்பர் 'கௌதமன்' இக்கட்டுரையில் தீட்டியுள்ளார்.

*நிறுவம்:* கி. மு. 332

*நிறுவியவன்:* கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டர்.

'இதோ, இந்தத் தீவுக் கூட்டங்களுக்கு என்ன பெயர் ஹெபேஸ்டியன்?''

'பரோஸ்' என்று பெயர்!

அதோ தெரிகிறதே அந்த ஏரி...!

'அதுதான் 'மரியோடிஸ்' ஏரி!'

'ஆகா! எவ்வளவு பிரமாதமாக இருக்கிறது, ஹெபேஸ்டியன். இந்த இயற்கைக் காட்சிகள்! அழகான நைல் நதி ஒரு புறம்—அதை வாரி அணைத்துக் கொள்ளும் கடல், மற்றோர் புறம்—கடல் போலக் காட்சி தரும் ஏரி பிறிதோர் புறம்—எதிரிலோ சிறு சிறு தீவுக் கூட்டங்கள், கடலிலே மிதந்து கொண்டு! என்ன அருமை ஹெபேஸ்டியன்! எகிப்தின் மாட்சியே மாட்சி!

'ஆமாம் மன்னவா! எகிப்தியர்கள் பெருமிதம் கொள்ள வேண்டும் இவைகளையெல்லாம் தங்களுடையது என்று சொல்லிக்கொள்ள...!

'என்ன ஹெபேஸ்டியன் அப்படிச் சொல்லுகிறாய்...! கிரேக்

கர்கள் பெருமிதம் கொள்ள வேண்டும்—பூரிக்க வேண்டும்—என்று சொல்லு!'

'மன்னிக்க வேண்டும் அரசே! நாம் வெற்றி கொண்டதை மறந்தே போய்விட்டேன்...!

'அது கிடக்கட்டும்! இந்த இடத்தை நாம் எப்படியும் பயன் படுத்தியாகவேண்டுமே...! நமது வெற்றிச் சின்னமாக — நமது கலாச்சாரத்தின் புகழிடமாக— இதை ஆக்கினால்தான் எனதுள்ளம் — இல்லை இல்லை நம்முள்ளம் மகிழ்வுறும்! என்ன சொல்கிறாய் ஹெபஸ்டியன்...!

'சொல்வதென்ன இருக்கிறதரசே! மன்னன் அலெக்ஸாண்டர் கட்டளையிட்டால் இந்த இரேக்கம் செய்து முடிக்கத் தானே காத்துக்கிடக்கிறது!'

'அப்படியானால்...!!!

'அப்படியானால், வேண்டாமரசே! ஆகையால் இங்கு ஒரு 'கடல் நகர்' நிர்மாணமாகிவிடும்! அதுவும் தங்கள் பெயராலேயே...! அழகான ஏத்தேன்ஸ்—ஒப்பற்ற காரிநீத்—இவைகளுக்கும் மேலாக விளங்குமிந்த 'அலெக்ஸாண்டிரியா! கவலையே வேண்டாமரசே!'

இப்படி உருவானது தான் அலெக்ஸாண்டிரியா! உலகில் அன்று முதல் இன்றுவரை முக்கியத்துவமிழக்காத பெருநகராக —நல்லதொரு பழம் நகராக— விளங்குவதுதான் அலெக்ஸாண்டிரியா.

கி. மு. 332-ல் உருவானது கி.பி. 1954லிலும் புகழ்குன்றாத எழில் மண்டலமாக இருக்கிறது! உலகில் இத்தகைய முறையில் பழம் பெருமையுடனும்—புதுப் பொலிவுடனும் விளங்குகின்ற நகர்கள் வெகு வெகுச் சிலவே யாகும்!

கிரேக்க நாட்டிலே ஏத்தென்ஸும், காரிநீத்தும் ஒரு காலத்திலேபுகழ்வாய்ந்த நகரங்களாகக் காட்சியளித்தன! தக்ஷசீலமும், பாடலிபுத்திரமும் இந்தியாவின் புகழ் நகர்கள்—ஒரு காலத்தில்! பூம்புகாரும், முசிரியும், மதுரையும், காஞ்சியும், தமிழகத்தின் இதய நகர்கள் —முன்பொரு சமயம்! ஆனால் இன்று...?

இன்றும் அவைகளிருக்கத் தான் செய்கின்றன. ஆனால், சிதைந்துபோன பெருமையோடு —மங்கிய ஒளியோடு! ஆனால் அலெக்ஸாண்டிரியா அப்படியல்ல; இன்றும் அதற்கு முக்கியத்துவம் இருக்கத்தான் செய்கிறது! அந்த அழகான கடல் நகர், இன்றும் ஓர் சிறந்த துறைமுகம்— எகிப்து நாட்டிற்கு!

இத்தகைய அருமை நகரை நிறுவிய பெருமை கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டரைத் தான் சாரும்! இளமையால் பொங்கி, இறுமாப்பால் வளர்ந்து, பேராசையால் மன்னனாகி, படை பலத்தால் பார்முழுவதையும் கட்டியாளக் கிளம்பிய அந்த மாஸிடோனியக் காவலன், தனது பெரும் பாரசீகப் படையெழுச்சியின்போது பல நாடுகளை வெற்றி

கொண்டுவிட்டு, பல மண்டலாதி
பதிகளின் மணிமுடிகளை—அல்ல
அல்ல—மணிமுடி தரித்த தலை
களை—மண்ணிலே உருளச்
செய்துவிட்டு இறுதியாக கி. மு.
334-ல் 'டையா' என்ற வீரம்
செறிந்த நல்நாட்டை—பாறைக்
கூட்டங்களிடையே கடலிலே
மிதந்து கொண்டிருந்த அந்த
மறவர் நாட்டை — கடலிலே
பாலமமைத்து, முற்றுகையிட்டு
பலிபீடத்திலே அதனைச்
சாய்த்துவிட்டு, அதன் வீரர்களை
ரத்த வெள்ளத்திலே தவழ்ந்
தோடச் செய்துவிட்டு, மீண்டும்
தனது படையெழுச்சியைத்
தொடர்ந்து போகின்ற நேரத்
திலே, பாலஸ்தீனத்திற்குள்ளே
புகுந்து அங்கேயிருந்த யூதர்
களால், வெற்றி வீரனெனப்புகழ்
மாலை சூட்டி வரவேற்கப்பட்டு,
மீண்டும் அங்கிருந்து கிளம்பிப்
போகின்ற நேரத்திலே காஜா
என்ற பாலஸ்தீன நகரை
வீழ்த்திவிட்டு பழம் பெருமை
வாய்ந்த எகிப்து நாட்டின் எல்லை
களை மிதித்து ஆங்கே பாரசீகர்
களின் அடிமைப் பிடியினின்றும்
தங்களை விடுவித்த 'விடுதலை
வீரன்' என்று எகிப்தியர்களால்
(கி. மு. 332 நவம்பரில்) மலர்
மாலைகள் சூட்டி வரவேற்கப்
பட்டு, அங்கிருந்து அழகான
நைல்நதியின் போக்கையும் இயற்
கைக் காட்சிகளையும் கண்டு
ரசித்துவரத் தன் அருமை நண்
பர்களுடன் மத்தியதரைக் கடல்
வரை, நதியில் மிதந்து சென்று
நைல் நதியின் முகத்துவாரத்தின்
அருமைச் சூழ்நிலைகளால் பெரி
தும் கவரப்பட்டு அலெக்ஸாண்ட
ரது நினைப்பிலே தோன்றி, நெஞ்
சிலே உருவாகி அவன் செயல்
வீரர்களால் நிர்மாணிக்கப்பட்
டதுதான் அந்த அருமை நகர்!
அவன் பெயராலேயே இன்றும்
அழைக்கப்படுகிறது 'அலெக்
ஸாண்டிரியா'வென்று!

ஆரம்பத்திலே குறிப்பிட்டி
ருந்ததைப்போல, கனோபஸ்
என்ற நகரிலிருந்தபடியே அலெக்
ஸாண்டரால் திட்டம் (Plan)
தீட்டப்பட்டு தன் கண் முன்னே
தெரிந்த மரியோடிஸ் (Mareo-
tis) ஏரிக்கும். மத்தியதரைக்
கடலுள் மிதந்த சிறு சிறு
'பரோஸ்' தீவுகளுக்குமிடையே
யுள்ள பிரதேசத்தையெல்லாம்
ஒன்றாக இணைத்து முதலில் கற்
பனை ரீதியாக சிருஷ்டிக்கப்பட்
டதுதான் அலெக்ஸாண்டிரியா!
பிறகு நிஜநகராகவே உருவாகி
விட்டது—உருவாக்கப்பட்டுவிட்
டது.

அது முதல் கிரேக்க நாகரீகத்
தையும் எகிப்திய நாகரீகத்தை
யும் ஒன்றாகப் பிணைக்கும் கலா
சாரப் பணியை அது வெகுநாள்
வரை தொடர்ந்து செய்து வந்தி
ருக்கிறது. அதோடு உலகோர்
வியக்கும் வண்ணம் பல நூறு
புராதனச் சின்னங்களுடன், நாக
ரீகத்தின் உறைவிடமாய்—அறி
வுத்துறையின் பல்கலைக் கழக
மாய்—பழம் பெருமையின்நிலைக்
களமாய்—இன்றும் பல்வேறு
நூல் நிலையங்களையும் பொருட்
காட்சிச்சாலைகளையும்கூட தன்ன
கத்தே கொண்ட புகழ் நகராய்

விளங்குகிறது அலெக்சாண்டி ரியா, என்றால் அந்த பொன்னுன புகழ் அதை நிறுவிய மாஸி டோனிய மாவீரன் அலெக் ஸாண்டரைத்தான் சாரும்!

அதுமட்டுமல்ல. உலகின் கீழ்க் கோடி நாடுகளுடன்—மேற்கத் திய உறவின் முறையை விஸ் தரிக்க-வணிகத் தொடர்பை அதி கரிக்க – அரசியல் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்ள — பயனுள்ள தாகுமென்ற நுண்ணறிவால் தான் அலெக்சாண்டர் இந்நகரை நிறுவினன் அக்காலத்தில், என் ருல் உள்ளபடியே அவன் எதிர் கால அறிவு போற்றப்படவேண் டியது ஒன்றுதான்!

கிரேக்க கலாசாரத்தை எகிப் தில் மட்டுமல்ல; இங்கிருந்து எங் கெங்கோ உள்ள கண்காணுக் கீழ்த்திசை நாடுகளிலெல்லாம் பரப்ப வேண்டுமென்ற உள்ளக் கிடக்கையோடுஉருவாக்கப்பட்ட அந்நகர், அவன் நினைத்த எண் ணங்களை மிக அருமையாகப் பிரதிபலித்ததென்றாலும் அவனே இருந்து அதை ரசித்து மகிழ மட்டும், வாய்ப்பளிக்க வில்லை! அந்த நல்வாய்ப்பில்லாம லேயே- அந்நகரைமீண்டும் மிதிக் காமலேயே பொன்றிவிட்டான் அந்த மகிபன்!

ஆம்! பாரசீகத்தை வீழ்த்தி, இந்தியாவின் எல்லைப்புற நகர் களை உள்நாட்டு விபீஷணர்கள் சிலரின் துணை கொண்டு வெற்றி கொண்டு, மீண்டும் யானைப் படைகளைக் கண்டஞ்சிய அவன் வீரர்கள் தொடர்ந்து போரிட மறுத்ததால் தாயகம் திரும்புகின்ற வேளையிலே பாபி லோனியா நகரிலே கொடிய விஷஜுரத்தால் தாக்கப்பட்டு கி. மு. 323-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந்தேதி வெற்றி கொண்டநாடுகளைக் கட்டியாளும் வாய்ப்பொன்றுமே இல்லாமல், பறித்த உரிமைகளை யெல்லாம் தனிக் காட்டிலே அலையவிட்டுத் தனது இளமை குன்றாத 33 வய திலே தானும் பொன்றிவிட் டான் அலெக்சாண்டர்!

அவன் வீழ்ந்த பிறகு அவ னின் அருமை நாடு சிதறிவிட் டது! டான்யூப் நதி முதல்— சிந்து நதிவரை பரந்து கிடந்த அவனது இன்பபுரிகள் உரிமைப் பூசலுக்கும்—ஆளும் போட்டிக்கு மிடையே சிக்கி வேதனை யடைந்து கொண்டிருந்தது. நல்லவேளையாக எகிப்தையாளும் பொறுப்பு அலெக்ஸாண்டரின் நண்பனும்—நல்லதோர் தளபதி யும்—அலெக்ஸாண்டரைப் போலவே அரிஸ்டாட்டலின் சீடனுமான தாலமி (Ptolemy) என்பவனுக்குக் கிடைத்தது. தாலமி எகிப்தின் மன்னனானதும் அலெக்ஸாண்டரின் எண்ணங் களை மட்டுமல்ல; தன் குருவான அரிஸ்டாட்டலின் கருத்தோவி யங்களையும் பரவச்செய்யவேண்டு மென்று புதிய ஆர்வத்தால் நிறைந்து காணப்பட்டான்! எனவே தனது இளம் மன்னன் நிறுவிச் சென்ற அலெக்சாண்டி ரியாவை தன் தலைநகராக்கிக்

கொண்டதோடு அதை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் முன் வந்தான்!

கலைக்காகவும்—நாகரீக வளர்ச்சிக்காகவும் — விஞ்ஞான முன்னேற்றத்திற்காகவும் அறிவுத் துறையின் உயர்விற்காகவும்— தத்துவ ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காகவும் தொண்டு செய்யக் கிளம்பினான் தாலமி! அதற்காக அலெக்ஸண்டிரியாவில் சில பல நிரந்தர ஏற்பாடுகளையும் செய்தான்! அலெக்ஸாண்டரோ தன் கருத்துக்களையும் தனது விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகளையும் தொகுத்தறிவிக்கும் வண்ணம் தன் குரு அரிஸ்டாட்டலுக்கு ஒரு நிதியை மட்டும் தான் அளித்திருந்தான்! ஆனால் அவன் நண்பனோ இந்தப் பணியைச் செய்ய பெரியதோர் ‘பல்பொருட்காட்சிசாலை’(Museum) ஒன்றையே அலெக்ஸாண்டிரியாவில் நிறுவி விட்டான்! இதன் காரணமாகத்தான் அலெக்ஸாண்டிரியா உயர் வாழ்வு மண்டலமானது!

‘பல்பொருட் காட்சிசாலை’ என்ற பேரால் நிறுவப்பட்டது பிற்காலத்தில் பெரியதோர் நூல் நிலையமும், அறிவாராய்ச்சி சாலையும் கொண்ட ஒரு பல்கலைக் கழகமாகவே மாறிவிட்டது. அந்த அளவுக்குத் தாலமியிடமிருந்தும் அவன் மகன் ‘தாலமி பிலெடெல்பஸ்’ (Ptolemy Philadelphus) என்ற இரண்டாம் தாலமியிடமிருந்தும் ஆதரவு கிடைத்தது!

கிரேக்க நாட்டிலே—குறிப்பாக எத்தென்ஸ் நகரிலே சாக்ரடீஸின் கொள்கைகளை எடுத்துச் சொல்லவும், தன் சொந்த அரசியல் தத்துவங்களையும் உலகின் முன்னாலே வைக்கவும், தனது சமுதாய அமைப்பு முறைகளைத் தெளிவுபடுத்தவும், புதியதோர் அறிவாராய்ச்சி நிகழ்த்தவும் சாக்ரடீஸின் பிரதம சீடன் பிளேட்டோவால் ஏத்தேனிய கடற்கரைப் பகுதியிலே நிறுவப்பட்ட ‘லைசியம்’ என்ற கழகம் (கி. மு. 380–கி. பி. 529) போல இங்கும் அறிவாராய்ச்சி நடைபெற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தின் எதிரொலிதான் தாலமிக்களின் ஆதரவுக்குக் காரணம்!

எனவே தாலமிக்களின் காலத்தில், அலெக்ஸாண்டிரியா புதுப் பொலிவும், ஒளியும் கொள்ளலாயிற்று. தாலமியின் அரண்மனையை ஒட்டி இப்போது அறிவுச்சாலை திறக்கப்பட்டு விட்டது! உலகின் பல்வேறு விநோத நிகழ்ச்சிகளையும் — பொருள்களையும், இங்கே கண்டும்—சேமித்தும் வைப்பதற்கென எழுந்த அந்த கண்காட்சிச்சாலை, இப்போது அறிவுத்துறைக்கு ஆக்கம் தேடியது முதல், மதத்தத்துவங்களையும், சமுதாயக் கோட்பாடுகளையும், விஞ்ஞானத்தின் உயர்வையும் தொகுத்தறிவிக்கும் அருமையான நூல்கள் வரையிலுமுள்ள — எல்லா நூல்களையும் ஒருங்கே திரட்டி வைத்துக் கொள்ளவும், ஆர்வமுடன் வெளி

வந்தது! அதன் பயனாக எகிப்தில் மட்டுமல்லாமல், அதையொட்டிய மேல்நாடுகளிலும், கீழ்த்திசை நாடுகளிலும், தீட்டப்பெறும் அத்தனை நூல்களின் ஓரிரண்டு பிரதிகள், எப்படியும் அங்கே கொண்டுவந்து வைக்கப்பட்டன! இதற்கான செலவினங்களைத் தாலமியின் அரசாங்கம் மிகமகிழ்வோடு அள்ளித்தந்தது! காகிதமும், அச்சு யந்திரமும் இல்லாதிருந்த அந்த நேரத்திலும் நைல் நதியோரத்திலே கிடைத்த ஒருவகை மரப்பட்டைகளைப் பயன்படுத்தி ஆதிகால மக்கள் நூல் எழுதி வைத்துள்ளனரென்றால், அவர்களின் ஆர்வம் எந்த அளவுக்கு இருந்திருக்க வேண்டுமென்று எண்ணிப் பார்க்கவேண்டும்! அந்த அறிவுச் சாலையில் வாங்கப்பட முடியாத நூல்களின் பிரதிநிதிகளை யெல்லாம் கையால் எழுதி வைப்பதற்கென்றே பல எழுத்தாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனராம்! இப்படியாக அங்கே மொத்தம் 4 லட்சம் நூல்கள் அந்தப் பொருட்காட்சி சாலையிலும்—அதிலும் இடமில்லாத காரணத்தால், அதையொட்டிய சரபீஸ் (Temple of Serapis) ஆலயத்தில் சுமார் 3 லட்சம் புத்தகங்களுமாக மொத்தத்தில் 7லட்சம் புத்தகங்களைக்கொண்ட உலகின் முதல் நூல் நிலையமாக வெகு சீக்கிரத்திலேயே ஆகிவிட்டதாம் அலெக்ஸாண்டிரியா! அதுமட்டுமல்ல, இவ்வளவு நூல்களையும், தன்னகத்தே கொண்ட பிறகும் அதை உலகிற்குப் பயன்படுத்தாமலிருக்க விரும்பவில்லை அலெக்ஸாண்டிரியாவால்! எனவே மன்னன் கட்டளைப்படி எகிப்தின் தலைநகரிலே இனி அறிவாராய்ச்சியும் தொடங்கியது! அலெக்ஸாண்டரின் குரு அரிஸ்டாட்டலின் கருத்துரைகளையும் கோட்பாடுகளையும், மையமாகக் கொண்டு அது தன் பணியையும் துவக்கிவிட்டது.

இதன் பயனாய்க் கலை, காவியம், ஓவியம், தத்துவம், விஞ்ஞானம் முதலிய பல்வேறுபட்ட பொருள்கள் அங்கே நன்கு ஆராயப்பட்டு பிறருக்குமுறையாகப் போதிக்கப்பட்டும் வந்தது!

இன்றைய தினம் உலகம் போற்றும் தத்துவ—விஞ்ஞான மேதைகளின் பரம்பரையே அலெக்ஸாண்டிரியாவின் பல்கலைக் கழகத்திலேதான் தோன்றியது முதன் முதலிலென்றாலும், மிகையல்ல அது! அந்த அளவுக்கு பல்வேறுபட்ட கருத்துடைய விற்பன்னர்களும் அங்கே வந்து குழுமி நூல்களை நன்கு ஆராய்ந்து, தெளிந்து, அறிவு பெற்று அதை வெளியிடவும் முன்வந்திருக்கிறார்கள்! கீழ் நாடுகளிலிருந்தும்,பல நல்லறிஞர்கள் அந்தப்பல்கலைக்கழக நகருக்குச் சென்று புகழுற்றனர். விஞ்ஞான மேதை ஆர்க்கிமெடீஸ்(Archimedes) ஸைரக்கியூஸ் என்ற பெருநகரிலே இருந்து வந்து இங்கேதான் விஞ்ஞானம் பயின்று, தெளிந்து புதிய தத்துவங்களையும் கண்டறிந்து வெளியிட்டானாம்! பூமியின் சுற்றள

வைக் கண்டறிந்த யூக்கிளிட் (Euclid)டும் ஹெரட்டோஸ் தென்னஸும் (Erotosthenes) கணிதத்தில் கோணங்களின் வகையறிவித்த அப்போலோனியஸ்ஸும் (Apolionius) வானத்திலே திகழும் நட்சத்திரங்களின் இருப்பிடங்களையும், பெயர்களையும் கண்டறிந்துமுறையாக வெளியிட்டுக் காட்டிய ஹிப்பார்க்கஸ்ஸும் (Hipparchus) முதன் முதல் நீராவி யந்திரம் அமைக்க வழிவகை கண்டறிந்த ஹீரோவும் (Hero)அலெக்ஸாண்டிரியாவின் அறிவுக் கழகத்தின் மாணவர்களாயிருந்து உயர்வு பெற்றவர்கள் தான் என்றால், அலெக்ஸாண்டிரியா எத்தகைய சிறப்பு வாய்ந்த பெருநகராக இருக்க வேண்டுமென்று எண்ணிப் பாருங்கள்.

இவற்றையெல்லாம் விட, அலெக்ஸாண்டிரியாவைப்பொன்னராகச் செய்த மன்னன் தாலமியேசிறந்ததொரு விஞ்ஞானியாகவும்,ஒரு நல்ல சரித்திராசிரியனுகவும் இருந்திருக்கிறுன். சூரியனுக்கும்– சந்திரனுக்கும்— பூமிக்கும் இடையேஉள்ள இடைவெளியைக்கண்டறியும்ஆராய்ச்சியிலே அவன் ஈடுபட்டிருந்திருக்கிறுன். அதோடு அலெக்ஸாண்டரின் படையெழுச்சியின் நிகழ்ச்சிகளையும் அவன் ஒன்றையும் விடாது தொகுத்து எழுதியிருக்கிறுன். துரதிருஷ்ட வசமாக இந்த சரிதத்தின் பிரதி பிற்காலத்தில் உலகினருக்குக் கிடைக்காமற் போனது வருந்தத்தக்க விஷயந்தான்!

எனவே அலெக்ஸாண்டரால் எழுப்பப்பட்ட அந்த அருமையான கடல்நகர், உலகிலே அதுவரை என்றுமே கண்டிராத— ஆய்ந்திராத அவ்வளவு விஷயங்களையும் ஆய்ந்து தெளிந்து விஞ்ஞான ரீதியான முடிவுகளையும்— புதிய கண்டு பிடிப்புகளையும் வெளியிட்டிருக்கிறது! கி. பி. பதினேழாம் நூற்றுண்டிற்கும் கி. மு. இரண்டு மூன்று நூற்றுண்டுகளுக்கும் இடையேயுள்ள சுமார் ஆயிரம் ஆண்டு இடைவெளியிலும் கூட இத்தகைய முறையில் விஞ்ஞானம் தத்துவம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி நிகழ்த்தப்படவேயில்லை என்றுல் அலெக்ஸாண்டிரியாவின் அறிவுச்சாலை எவ்வளவு புகழ் வாய்ந்ததென்று நீங்களே எண்ணிப் பாருங்கள்.

மேலே குறிப்பிட்ட விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள், வானமண்டல ஆராய்ச்சிக்காரர்கள் ஆகியோர்கள் தனித்தனியே கண்டறிந்த சேதிகளையும் கண்டு பிடிப்புகளையும் பற்றி நாம் இன்னும்கூடக் கொஞ்சம் விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளலாம் தற்போதல்ல; பிறிதோர் சமயம்!

ஆகவே அலெக்ஸாண்டிரியாவின் அறிவாராய்ச்சி தொடர்ந்து நடைபெறவில்லை. ஆரம்பித்த இரண்டு மூன்று நூற்றுண்டுகள் வரையில்தான் ஒழுங்காகவும்

சிறப்பாகவும் நடைபெற்றிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் இரண்டு தாலமிக்களின் காலத்தில்தான் அவைகளின் புகழ் உச்சநிலையை அடைந்திருக்கிறது! பிறகு அவைகளின் ஒளி மங்கி தேய்ந்து இறுதியில் நூல் நிலையம் மட்டுமே பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இதற்குப் பல காரணங்கள் இருந்தனவென்றாலும் முக்கியமானதும் முதன்மையானதுமான காரணம் முதலிரண்டு தாலமிகளுக்குப் பிறகு இவைகளுக்குப் போதிய ஆதரவு அரச அவையிலேயிருந்து கிடைக்கவில்லையென்பதுதான்! மேலும் பிற்கால தாலமிக்களெல்லாம் எகிப்தியமயமாக்கப்பட்டவர்கள்! கிரேக்க கலையையும் — கலாசாரத்தையும் நாகரீகத்தையும் மதச் சார்பற்ற விஞ்ஞானத்தையும் பற்றி அவர்கள் விரும்பவில்லை. அவைகளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. எனவேதான் அலெக்ஸாண்டிரியாவின் அறிவாராய்ச்சிக் கழகம் வீழ்ந்துவிட்டது! ஆனாலும் நூல்நிலையம் மட்டும் மிகப் பத்திரமாகவேபாதுகாக்கப்பட்டு வந்தது.

இருந்தாலும் இந்த நூல்நிலையத்திற்குக்கூட இரண்டு முறைகள் நாசகாரர்களால் ஆபத்துகள் விளைவிக்கப்பட்டிருப்பதாக வரலாற்று ஏடுகளிலேயிருந்து நாம் மிகமிக வேதனையோடு தெரிந்துகொள்கிறோம்!

வடநாட்டு மன்னன் ஹர்ஷவர்த்தனன் காலத்தில் (கி. பி. 629—ல்) இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகன் 'ஹூவான்—சாங்' மாணவனாயிருந்து தத்துவம் முதலிய பலகலைகளைக் கற்று இறுதியில்தான் கற்ற பல்கலைக் கழகத்திலேயே துணைவேந்தராகவுமிருந்த பாடலிபுரத்தின் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாம் 'நலந்தா'வைத் தீயிட்டுக் கொளுத்தியதுபோல அலெக்ஸாண்டிரியா நூல்நிலையத்திற்கும் அழிவுக்காரர்களால் இருமுறை தீவைக்கப்பட்டிருக்கிறது! இருந்தாலும் நல்ல வேளையாக அலெக்ஸாண்டிரியா சில பகுதிகள் நஷ்டத்துடன் தப்பிப் பிழைத்துவிட்டது. ஆனால் நலந்தாதான் அடியோடு சாம்பலாகிவிட்டது!

ரோமானிய முடிசூடா மன்னனும், சரித்திரங்களின் பக்கங்களைக் கொடுமைக் காட்சிகளாலும் வெறிச்செயல்களாலும் நிரப்பியவனும், சொல்லின் செல்வன் 'மார்க் ஆண்டனி'யால்மாத்திரம் மாவீரன்—புகழ்வாய்ந்த மகிபன்—என்றெல்லாம் தன் சொல்வன்மையால் தொழுதேத்தப்பட்டோனும், கைதேர்ந்த ரோம் நாட்டின் சர்வாதிகாரியுமான ஜூலியஸ் சீஸர் கி. மு. 47—ல் எகிப்து நாட்டின் மீது படையெடுத்தபோது அலெக்ஸாண்டிரியாவின் அறிவுக் கழகத்தின் ஒரு நூல்நிலையப் பகுதியையே தீயிட்டுக்கொளுத்தியிருக்கிறான். அந்த மகானுபாவனின் (!) நாச

வேலையைத் திரையிட்டு மறைக்கவும், அழிந்த புகழ் வாய்ந்த பொக்கிஷங்களின் நஷ்டத்தை ஈடுசெய்யவும், பிற்காலத்தில் சீஸரின் நண்பரான 'ஆண்டனி பெர்காமஸ்' என்ற சிறுநாட்டு மன்னன், ஹெப்யூன்ஸ் என்பவனால் சேகரிக்கப்பட்டதும் அலெக்ஸாண்டிரியா நூல்நிலையத்திற்கு ஒரு காலத்தில் போட்டியாக ஸ்தாபிக்கப்பட்டதுமான — நூல்நிலையத்தின் அவ்வளவு புத்தகங்களையும், அலெக்ஸாண்டிரியாவிற்குப் பரிசாக ராணி கிளியோபாட்ராவின் கையில் ஒப்படைத்திருக்கிறான்!

பிறிதோர் சமயம் காலிப் ஹோமர் காலத்தில் அவன் தளபதி அம்ரான் என்பவனால் எகிப்து நாடு வெற்றி கொள்ளப்பட்டபோது, அலெக்ஸான்டிரியாவின் நூல்நிலையம் — அது மதசார்பற்ற நூல்களைப் பெற்றிருக்கிறது என்ற காரணங்காட்டி மற்றொரு பகுதியும் அழிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

எது எங்ஙனமாயினும் அலெக்ஸாண்டிரியாவின் நூல் நிலையம் முழுதும் அழிக்கப்படவில்லை! எண்ணற்ற புத்தகங்கள் — புகழ் பெற்ற இலக்கியங்கள் — இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. பதினெட்டாம் பெருக்கிற்கும் — செல்லரித்த கொடுஞ்செயலுக்கும் — தீயிட்ட ஜோதி விழாவிற்கும் (!) தப்பிப்பிழைத்து நம்மிடையே களிநடம் புரியும் அருமைத் தமிழ் இலக்கியங்களைப் போல, அங்கேயும் நெஞ்சை அள்ளும் இலக்கியங்கள் — பொன்னனை நல்லேடுகள் — இன்றும் இருக்கத்தான் செய்கின்றன! கால வேறுபாட்டால் அவைகள் உருவம் மாறியும், பொருள்கள் மாற்றப்பட்டும், நோக்கங்கள் சிதைக்கப்பட்டும், உண்மை எண்ணங்கள் மறைக்கப்பட்டும், இன்று கிடைக்கும் தமிழகத்தின் இலக்கியங்களைப்போல காட்சி தருமென்றாலும், அவற்றின் உண்மையை அறியும் பொறுமையையும் பொறுப்பையும் நம்மிடையே விட்டு — எதிர்காலத்தின் அறிவுப்பொக்கிஷமாக அவைகள் இருக்கத்தான் செய்கின்றன.

உலக முழுவதும் பரவியிருக்கும் இத்தகைய எண்ணற்ற அறிவுக் கழகங்களையும், நூல்நிலையங்களையும் தேடிக் கண்டெடுத்து, அவைகளைப் பயனும் — பொலிவுமுள்ளதாகச் செய்யும் பெரும் பொறுப்பு உலகில் எதிர்காலத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! மகத்தான பெருமூச்சுச் சுழலிலே தோய்ந்தாலும் இப்பணியை அந்த எதிர்காலம் என்றுதான் செய்து வெற்றி கொள்ளுமோ..... மகிழ்வுறுமோ ....நாமறியோம்! ★

— "திராவிடன்"

# சுழலும் உலகம்

## புதிய பாதையில் பெரிய மனிதர்கள்!

நீண்ட நெடுங்காலமாகப் பாலைவனத்தையே கண்டு கண்டு சலித்துப் போனவர்களின் கண்ணெதிரே ஓர் பழமுதிர் சோலை காட்சி அளிக்கிறது.

ஓயாமல் ஒழியாமல் கலலறைகளே காட்சி அளித்துவந்த ஓர் பாதையில் முதன் முறையாக அழகானதோர் குடிசையும் அதனுள்ளே அன்பை அள்ளித் தெளிக்கும் அழகிய குழந்தைகளும் தோற்றமளிக்கின்றனர்.

நெடுநேரமாக ஒளி என்பதையே அறியாமல் காரிருள் படர்ந்திருந்த சமயத்தில் திடீரென்று ஒரு மின்னல் தோன்றி ஒளிக் கதிர்களை வாரி வீசுகிறது.

எத்தனையோ நாட்களாகப் பசி பசி என்று பரிதவித்துப் பட்டினி கிடந்து வாடி வதங்கிய ஏழையின் முன்னால் சட்டென்று ஓர் வாழையிலையும் அது நிறைய அறுசுவை உணவும் தோன்றி நிற்கின்றன.

இத்தனை உவமைகளையும் இன்னும் இவை போன்ற எண்ணற்ற பல உவமைகளையும் ஒருங்கே கூறலாம் ஜெனிவாவில் 18-7-55 அன்று தொடங்கியுள்ள நால்வர் மாநாட்டைப் பற்றி நினைத்துப் பார்க்கும் போது.

இரண்டாவது உலகப் போர், 1945-ம் ஆண்டில் முடிவுற்றது.

இப்போது நடைபெறுவது 1955-ம் ஆண்டு

இடையே சென்று மறைந்தவை பத்து ஆண்டுகள்.

இந்தப் பத்து ஆண்டுகளிலேயும், உலகம், அதனுடைய அரசியல் வானத்தில், காரிருளையும் காதைச் செவிடாக்கும் இடிகளையும்தான் கண்டு வந்திருக்கிறதே தவிர, அமைதியான சூழ்நிலையையும் ஆநந்தமான காட்சிகளையும் கொண்டிருந்ததில்லை.

ஏறத்தாழ உலகப் போர் முடிந்து ஜெர்மன்—ஜப்பான் எதிரிகள் தோற்பதற்கும், அதுவரையில் நெருங்கிய நண்பர்கள் போல் காட்சியளித்த அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றை ஒன்று முறைத்துப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

அந்தக் காலம் முதல் இந்த ஆண்டு வரையில் அந்த இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட பகை தீரவில்லை—பூசல் மறையவில்லை.

இன்றைய உலகிலே மிகக் கூடுதலான பலம் பெற்றுத் திகழும் நாடுகள் இந்த இரண்டும் தான். எனவே இந்த இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட பகையும் பிணக்கும் பூசலும் பொருமலும் மெள்ள மெள்ள ஏனைய நாடுகளிடையேயும் பரவலாயின. பிற நாடுகளில் மிகப் பல, ரஷ்ய அணிவகுப்பு அல்லது அமெரிக்க முகாம், ஏதேனும் ஒன்றில் சேர்ந்திடலாயின.

உலகப் பிரச்சினை எது எழுந்தாலும் சரி. பிரச்சினையின் தாராதரத்தைப் பார்த்து அதனை மதிப்பிடும் பண்பும், தீர்த்து வைக்கும் போக்கும் அழிந்து, எந்தப் பிரச்சினையை எப்படித் தீர்த்து வைத்தால் எந்த முகாமுக்கு லாபம் என்கிற ஒரே கட்டளைக் கல்லே எல்லா நாடுகளும் ஏற்றுக் கொள்ளலாயின.

அமெரிக்கத் தலைவர்கள் ரஷ்யத் தலைவர்கள் மீது கடுங் கோபத்தைக் கொட்டுவதும், ரஷ்யத் தலைவர்கள் அமெரிக்க அரசியல் வாதிகள் மீது ஆத்திரத்தைப் பொழிவதும சர்வ சாதாரணமாகி விட்டன.

பார்மோசாத் தீவு யாருக்குச் சொந்தம்? கொரியாவின் எதிர் காலம் எப்படியிருக்கவேண்டும்? இந்தோ சீனு யாருடைய ஆட்சியின்கீழ இருப்பது? ஜெர்மன் நாட்டை ஒன்றுபடுத்துவது எப்படி? ஆஸ்டிரியாவுக்கு விடுதலை வழங்கலாமா வேண்டாமா என்று இவ் வண்ணமாகப் பிரச்சினைகள் மூண்ட நேரங்களிலெல்லாம், அமெரிக்க அணிக்கும் ரஷிய முகாமுக்குமிடையே ஏற்பட்ட மோதுதல், மிகக் கடுமையானதாகவும் பயங்கர விளைவுகளை அளிப்பதாகவும் இருந்தது. ஒவ்வொரு பிரச்சினை ஏற்பட்ட நேரத்திலேயும் அந்தப் பிரச்சினையின் விளைவாக உலகப் போர் மூண்டு விடுமோ, மூண்டு விட்டால் அணுக் குண்டுகள் பயன்படுத்தப்படுமோ, பயன் படுத்தப்பட்டால் மனித சமுதாயத்தின் பூண்டே அற்று விடுமோ என்றெல்லாம் அச்சம் உலக மக்கள் உள்ளத்தைக் குடைந்திடும் கொடுமை நேரிடலாயிற்று.

உலக அரசியல் தலைவர்கள் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்தால் இந்தப் பூசல் குறையுமே, நேசம் வளருமே, பகை மறைய வழி பிறக்குமே என்றெல்லாம் ஒரு சில தலைவர்கள் அடிக்கடி எண்ணியதுண்டு.

ஏனைய பலரைவிடப் பிரிட்டிஷ் முதலமைச்சர் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு இந்த ஆசை சற்று அதிகமாகவே இருந்தது, இப்படிப்பட்ட ஒரு சந்திப்பை உருவாக்குவதே என்னுடைய இறுதிக் கால ஆசை என்றுகூட அந்த முதுகிழவர் இயம்பி வந்தார்.

ஆனல் அதற்கு வழி இதுவரை பிறக்காமலே யிருந்தது.

சந்திப்புக்கு நான் தயார் என்று ரஷ்ய முதல்வர் எப்போ

தாவது தெரிவித்தால், சந்திப்பா— ஒருவரை ஒருவரா — என்றால் முடியாது என்று அமெரிக்கத் தலைவர் அறிவித்து விடுவார். பொதுவான பிரச்சினைகளை ஒன்றுகூடி விவாதிப்போம் வாரீர் என்று பிரிட்டிஷ பிரதமர் அறிவித்தால் அது முடியாத காரியம், ஏன் வீண் முயற்சி என்று ரஷ்யத் தலைவர் இயம்பிவிடுவார். இப்படித்தான் நிலைமை இதுவரை இருந்துவந்தது.

1945—ம் ஆண்டில், ஏறத்தாழ போர் முடிகிற கட்டத்தில், அன்றைய ரஷ்யப் பிரதமர் ஸ்டாலின், அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் அட்லி, அன்றைய அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் ஆகிய மூவரும் பாட்ஸ்டாம் என்னும் இடத்தில் ஒன்று கூடிப் பேசி ஒரு சமரச முடிவுக்கு வந்தார்கள்.

வரலாற்றுப் புகழ்பெற்ற அந்தப் பாட்ஸ்டாம் மாநாட்டிற்குப் பிறகு, இப்போதுதான், முதல் முறையாக, ஜெனிவாவில், நாற்பெருந் தலைவர்கள் எனத்தக்கோர் ஒன்றுகக் கூடுகின்றனர்.

ரஷ்யாவிலிருந்து அதன் பிரதமர் புல்கானின், அமெரிக்காவிலிருந்து அதன் தலைவர் ஐசனோவர், இங்கிலாந்திலிருந்து அதன் முதல்வர் அந்தோணி ஈடன், பிரான்சிலிருந்து அதன் முதலமைச்சர் எட்கார் ஃபார் ஆகியோர் ஜெனிவாவுக்கு வந்திருக்கின்றனர்.

ரஷ்யாவின் குழுவில், பிரதமர் புல்கானின் தவிர, கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி க்ருஷ்சேவ், வெளிநாட்டமைச்சர் மாலடோவ், வெளிநாட்டுத் தீணை அமைச்சர் கிராமிகோவ், போர்ப் படைத் தலைவர் ஷுகோவ் ஆகியோரும் இடம் பெற்றிருக்கின்றனர்.

அமெரிக்கத் தலைவர் ஐசனோவருடன் அவருடைய வெளிநாட்டுத் துறை அமைச்சர் ஜான் பாஸ்டர் டல்லசும் வந்திருக்கிறார்.

மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மாநாட்டிற்கு ஐசனோவர் தலைமை வகிக்கிறார்.

உலக அமைதியைக் குலைக்கும் பிரச்சினைகளைக் கண்ணியமான முறையிலும் சமாதானம் நிரம்பிய வழியிலும் தீர்த்துவைப்பது எப்படி என்பது ஒன்று. ரஷ்ய அணிவகுப்புக்கும் அமெரிக்க அணிவகுப்புக்குமிடையே உள்ள பூசலையும் பிணக்கையும் எப்படி ஒழிப்பது என்பது இரண்டு. ஆகிய இந்த இரண்டு பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து நல்லதோர் முடிவுக்கு வரவேண்டும் என்பதே மாநாட்டில் ஈண்டியுள்ள பெருந் தலைவர்களின் நோக்கம்.

இந்தநோக்கம் எந்த அளவுக்கு ஈடேறும் ?—இப்போது சொல்ல முடியாது. இரு வேறு முகாம்களில் இருப்பவர்கள் அனைவரும் தத்தம் பிடியே பெரும்பிடி என்று இராமல் ஒருவருக்கொருவர் சிறிதளவு விட்டுக்கொடுத்தால், அவர்களால் தீர்க்க முடியாத பிரச்சினை எதுமில்லை.

மாநாடு கூடுவதற்கு முன்னால் இருசார்புத் தலைவர்களும் பேசிய பேச்சுகள், அவர்கள் அநேகமாக விட்டுக் கொடுத்து, சமாதான மான முடிவுகளுக்கு வரக்கூடும் என்கிற அறிகுறியைக் காட்டுவன வாகவே இருக்கின்றன.

இதற்கு முன்பெல்லாம் ஒரு சாரார் மற்றொரு சாராரைப் பற்றிப் பேசும்போது தீப்பொறி பறக்கும். ஆத்திரம் அலைமோதும். கடுஞ் சொற்கள் கனவேகத்தில் கிளம்பிச் சுழலும். ஆனால் இம்முறையோ இரு சாராரின் பேச்சிலேயும் சாந்தம் தவழ்கிறது. அன்பின் குரல் இன்ப ஒலி எழுப்புகிறது. பொறுப் புணர்ச்சியும் அடக்க சுபாவமும் காட்சியளிக்கின்றன. எனவே இம்முறை, மாநாட்டின் முடிவு களும் நல்ல முடிவுகளாக இருக்கக்கூடும்.

முடிவு எப்படி யிருந்தாலும் சரி, இப்படி ஒரு மாநாடு கூடுவதே உலக அமைதிக்கான முதல் படி என்பதில் ஐயமில்லை. ஒருவரை ஒருவர் காணவே மறுத்தவர்கள், இப்போது கூடிப் பேச ஒப்பியிருப்பதும், ஒப்புக்கொள்ளும்போதே இனிய சொற்களை இயம்பியிருப்பதும், மாநாடு தொடங்கும்போது வேண்டுமென்றே அவர்கள் இதற்கு முன்னரெல்லாம் கிளப்பி வந்தவை போன்ற தேவையற்ற சிக்கல்களை எழுப்பாம லிருப்பதும், மனித சமுதாயத்தின் மகிழ்ச்சிக்குரிய மிகப் பெரிய நிகழ்ச்சிகளாகும்.

உலக மக்களில் அரசியல் நுணுக்கம் அறிந்த அத்தனைப் பேரின் பார்வையும் இப்போது ஐரோப்பாவின் மீது — அங்கே உள்ள ஸ்விட்சர்லாந்து நாட்டின் மீது — அந்த நாட்டில் அமைந்துள்ள ஜெனிவா நகரத்தின்மீது — அந்த நகரத்தில் எழுப்பப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 'அழகுமிக்க' மாளிகைமீது — அல்ல அல்ல — அந்த மாளிகையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புடைய அரசியல் தலைவர்களின் மாநாட்டின்மீதே படிந்து கிடக்கிறது.

, காரிருளைக் கிழித்துக்கொண்டு ஒரு சிறிய ஒளி தோன்றியிருக்கிறது.

அந்த ஒளி வளருமா? தெரியவில்லை. இப்போது உள்ள அதன் அளவாவது நிலைத்து நிற்குமா? அதுவும தெரியவில்லை.

ஆனால் ஒன்று தெரிகிறது நிச்சயமாக. இந்த ஒளி அல்லது இப்படிப்பட்ட ஓர் அமைதி ஒளி வளர்ந்தாக வேண்டும். வளர்ந்து நிலைத்தாக வேண்டும். நிலைத்தால் தான் மனித சமுதாயம் நிலைக்கமுடியும்.

## அறிஞர்கள் காட்டும் அபாய அறிகுறி

மேலைநாடுகளின் ஈடு இணையற்ற தத்துவஞானி என்கிற புகழைப் பெற்றிருப்பவர் பெர்ட்ரண்ட் ரசல்.

இருபதாம் நூற்றாண்டின் ஒப்பு உவமை யற்ற விஞ்ஞானி

என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

இந்த இருவரின் கையொப்பத்தையும் பெற்ற ஓர் அறிக்கை லண்டன் நகரிலிருந்து 8–7–55 அன்று வெளியிடப் பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் உலகப் புகழ்பெற்ற வேறு ஆறு விஞ்ஞானிகளும் தங்கள் கையெழுத்தைப் பொறித்திருக்கின்றனர்.

அந்த அறிக்கை வெளியான ஏழாம் நாள் மற்றோர் அறிக்கை மேற்கு ஜெர்மனியிலிருந்து வெளியாகியிருக்கிறது. அதில் பதினெட்டுப் பேர் கையொப்பமிட்டிருக்கின்றனர். பதினெட்டுப் பேர் என்றால் ஏனோதானோக்களல்ல. ஏதும் அறியாதார் அல்ல. அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு நோபல் பரிசு பெற்றிருப்பவர் அத்தனைப் பேருமே விஞ்ஞானிகள். இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஸ்விட்சர்லாந்து, ஸ்வீடன், ஜெர்மனி முதலிய பல்வேறு நாடுகளைச் சார்ந்தவர்கள்.

இரண்டு அறிக்கைகளையும் சேர்த்துப் பார்த்தால் உலகப் புகழ் வாய்ந்த 26 விஞ்ஞானிகளின் கையெழுத்துக்கள் அவற்றில் இருக்கின்றன.

வெறும் கையெழுத்துக்கள் மட்டும்தானா அவற்றில் இருக்கின்றன — இல்லை இல்லை — அந்த விஞ்ஞானிகளின் தூய உள்ளங்கள் இருக்கின்றன — உலகம் அதற்கு ஏற்படக்கூடிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமே என்கிற உயரிய கொள்கை இருக்கிறது — விஞ்ஞானம் என்னும் வியத்தகு கருவி மனித சமுதாயத்தையே வேரோடு குழிதோண்டிப் புதைக்கும் கொடுஞ் செயலுக்குப் பயன்பட்டு விடக்கூடாதே என்கிற பொறுப் புணர்ச்சி இருக்கிறது. மனித சமுதாயம் என்கிற ஒரு வர்க்கம் இருப்பதா அல்லது இறப்பதா என்கிற கேள்விக்கான விடையே அந்த அறிக்கைகளில் அடங்கியிருக்கிறது.

அந்த இரண்டு அறிக்கைகளின் சாரம் இதுதான் :—

உலகப் போரின் இறுதியில் ஜப்பான் நாட்டிலுள்ள நாகசாகி, ஹிரோஷிமா ஆகிய இரு நகரங்கள் மீது வீசப்பட்ட அணுக் குண்டுகள் இரண்டும் அந்த இரு நகரங்களை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டது.

இன்றைய தினம் அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிற அணுக் குண்டுகள் ஒவ்வொன்றும் ஜப்பானில் வீசப்பட்ட அணுக் குண்டுகளைவிட நூறு மடங்கு அதிக சக்தி உள்ளது.

இப்போது தயாரிக்கப்பட்டு வரும் ஜலவாயுக் குண்டோ இன்றைய அணுக்குண்டைவிடப் பல நூறு மடங்கு அழிவுச் சக்தி வாய்ந்தது.

இனி ஓர் உலகப் போர் மூளு மானல் இந்தப் பயங்கரக் கருவி கள் யாவும் நிச்சயம் பயன்படுத் தப்படும்.

அப்போது அவற்றிலிருந்து வெளியாகிற அணுக் கதிர் சக்தி சில குறிப்பிட்ட நகரங்களை அல்ல, மனித சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியை அழித்து விடும்.

ஒரு வேளை மனித சமுதா யமே இல்லாமற் போனலும் போய்விடலாம்.

தப்பித் தவறி சில லட்சம்பேர் அல்லது சில கோடிப் பேர் உயிர் பிழைத்தாலும் போர்க் காலத் தின்போது அவர்கள் உடலில் பாய்ந்திருக்கக்கூடிய அணுச் சக்தி காரணமாக சந்ததியைப் பெருக்கும் சக்தியை அவர்கள் இழந்துவிடக் கூடும்.

இப்படியெல்லாம் ஏற்படக் கூடிய ஆபத்துகள் மனித சமு தாயம் என்று சொல்லப்படுகிற ஏதோ ஒரு பொருளுக்குத் தானே என்பது போல எந்த ராஜதந்திரியும் எண்ணிவிட வேண்டாம். இந்த ஆபத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களுடைய மனைவி மக்களுக் கும், அந்த மனைவி மக்களின் நேசம் பாசம் ஆகியவற்றிற்கு உரியவர்கட்கும் நேரிடையாக ஏற்படக்கூடிய ஆபத்து.

மனித சமுதாயத்திற்கு இந்த ஆபத்து ஏற்படாமற் காக்க வேண்டிய பொறுப்பு உலகில் உள்ள பல்வேறு அரசாங்கங் களின் தலைவர்கள், மந்திரிகள், முதன்மையாளர்கள் ஒவ்வொரு வருக்கும் உண்டு.

போர் மூளுமானல் இந்த நாசக் கருவிகள் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட்டே தீரும். இந்தக் கருவிகளால் நேரிடக் கூடிய ஆபத்தைத் தடுக்கவேண்டு மானல் போரையே தடுத்தாக வேண்டும். போர் மூளாதபடி தடுப்பது ஒவ்வொருவரின் புனி தக் கடமை.

இரண்டு அறிக்கைகளிலும் காணப்படும் உயரிய கருத்துக்கள் இவை.

பொதுவாக மக்கள் அனை வருக்கும், சிறப்பாக அரசாங்கத் தலைவர்கட்கும் இந்த அறிக்கை கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆம்! அறிஞர்கள் மானிட சாதிக்கு ஏற்படக்கூடிய பேரா பத்தை எடுத்துக் காட்டித் தங் கள் கடமையை நிறைவேற்றி யிருக்கின்றனர். இனி, அரசாங் கத் தலைவர்கள், அந்தப் பேரா பத்தைத் தடுக்கக்கூடிய திட்டங் களைத் தீட்டித் தங்கள் கட மையை முடிக்கவேண்டும். அறி ஞர்கள் உலகம் வழியை வகுத்து விட்டது. அரசாங்க உலகம் அந்த வழியில் நடக்கவேண்டும். நடந்தால்தான் நானிலம் தப்பும். மக்கட் சமூகம் பிழைக்கும்.

# அமைதி வழியில் அணுவாற்றல்

அணுவாற்றலைப் பற்றிய பேச்சு இன்று அவனி எங்கும் பேசப்படுகின்றது. சிலரால் அச்சத்துடன் பேசப்படுகிறது; சிலரால் ஆவலுடன் பேசப்படுகிறது. உலகப் பொதுமக்கள் அச்சம்—ஆவல் ஆகிய இரண்டு உணர்ச்சிகளுக்கிடையே மாறிமாறித் தள்ளப்பட்டு ஊசலாடும் நிலையிலிருக்கிறார்கள்.

அணுவாற்றல், அணுக்குண்டின் மூலமதன்னை முதன்முதல் அறிமுகப்படுத்திக்கொண்டுவந்ததால், அணுக்குண்டின் ஆற்றலையும், அதனால் ஏற்பட்ட அழிவையும் கண்டமக்கள் அதனை எப்பொழுதும் அச்சத்தோடு பார்க்கும்பழக்கத்தை அடைந்துள்ளனர். அந்த அச்சத்தை நீக்கும் பணியில் உலக அறிவியற் பேரறிஞர்கள் சிலரும், உலகைத்திருத்தும் உயர்ந்தோர் சிலரும் இது நாட்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெருப்பு, நீர், காற்று, கத்தி போன்றவைகள் நன்மைக்கும் பயன்படும். தீமைக்கும் பயன்படும். அதுபோலவே அணுவாற்றலும் நன்மைக்கும் பயன்படும் தீமைக்கும் பயன்படும் பொருளாகும். நெருப்பை உணவு சமைப்பதற்கும் பயன்படுத்தலாம், பிறர் வீட்டைக் கொளுத்தவும் பயன்படுத்தலாம். கத்தியை மாம்பழம் அறுக்கவும் பயன்படுத்தலாம், ஒருவரைக் கொல்லவும் பயன்படுத்தலாம். அதுபோலவே அணுவாற்றலை அணுக்குண்டு செய்யவும் பயன்படுத்தலாம், அவனியைச் சுற்றும் கப்பலை ஓட்டவும் பயன்படுத்தலாம். எனவே குற்றம் அணுவாற்றலிடத்து அல்ல; அதனைத் தீமைக்குப் பயன்படுத்துவோரிடத்துதான் அமைந்துகிடக்கிறது.

அறிவியல் அறிஞர்களை எடுத்துக்கொண்டால், அவர்களில் பெரும்பாலோர், அணுவாற்றலை நல்வழியில் பயன்படுத்த வேண்டும் என்றுதான் எண்ணுகின்றனர். ஆனால் ஆட்சியாளர்களில் தீய நோக்கம் படைத்தோர்தான் அதனை அணுக்குண்டு செய்தல் போன்ற தீய வழியில் பயன்படுத்தவேண்டும் என்று எண்ணுகின்றனர். அணுக்குண்டு, நீர் வளிக்குண்டு போன்ற அழிவுக் கருவிகளை அறிவியல் அறிஞர்கள் தானே கண்டுபிடிக்கிறார்கள் என்றால், அவர்கள் ஆட்சியாளரின் கட்டளைக்கும் வற்புறுத்தலுக்கும் அஞ்சி, அவைகளைக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாகிறார்களே ஒழிய, அவர்களாக விரும்பி அவற்றைக் கண்டுபிடிக்கவில்லை. அணுவாற்றலை மக்களுக்கு நலம்பயக்கும் துறைகளில் பயன் படுத்தவேண்டும் என்றுதான் எல்லா அறிவியல் அறிஞர்களும் மனமாரக் கருதுவார்கள். தீயநோக்கம் படைத்த

ஆட்சியாளர்களின் மனப்போக்கு நல்ல முறையில் மாற்றப்பட்டால், பிறகு அணுவாற்றலைப்பற்றிப் பொது மக்களிடத்தே அச்சந் தோன்றுது; ஆவல் பெருக்கம் ஏற்படும். எனவே உலகோரால் வெறுத்தொதுக்கப்பட வேண்டியவர்கள் தீய அரசியல்வாதிகளே யல்லாமல், அணுவாற்றல் அல்ல!

காலங்களைக் கற்கருவிக்காலம், செப்புக்கருவிக்காலம், இரும்புக் கருவிக்காலம், நீராவிக் காலம், மின்னுற்றல்காலம் என்று மனிதனுக்குப் பயன்படும் பொருள்களைக் கொண்டு காலங்களைப் பகுத்துக் கூறுவர் அறிவுடையோர். கடைசிக்காலமாகிய மின்னுற்றல் காலம் மறையத்தொடங்கி, இப்பொழுது அணுவாற்றல் காலம் தோன்றத்தொடங்கி விட்டது என்னலாம்.

அணுவாற்றலை அடக்கி ஆளாவிட்டால், அடங்காத் தீயைப் போல், அது உலகுக்குப் பெருங்கேடாய் முடியும் என்பதும், அதனைக் கட்டுப்படுத்திவிட்டாலோ, மனிதன் தேடும் உலகியல் நலன்களெல்லாம் ஒருங்கே கிடைக்கவும் கூடும் என்பதும் போற்றத்தக்க வகையில் இன்றைய உலகோரால் உணரப்பட்டு வருகின்றன.

தீ, நீராவி, நெய்யாவி (பெட்ரோல்), நிலக்கரி, மின்னுற்றல் முதலியவற்றைக் கண்டுபிடித்த போதெல்லாம் உலகப் பொருளாதாரம் எவ்வளவோ மாறுதல் அடைந்திருக்கிறது. இவையெல்லாம் பொறியாற்றல் அளிப்பதில் பெரும் புரட்சி செய்தவை. ஆனல் அணுவாற்றல் இவற்றையெல்லாம் மிஞ்சிவிடும் என்பது திண்ணம். அணுவாற்றற் புரட்சி மிக்க மாறுதல் செய்யக்கூடியதாகும். அது வெறும் பொறியாற்றற் புரட்சி மட்டும் அல்ல. அணுவாற்றல் புரட்சியால் ஆலைத் தொழிலும், போக்குவரத்தும், செய்திப்போக்குவரத்தும், உழவுத்தொழிலும், மருத்துவமும், சமூகப்பழக்க வழக்கங்களும், உயிர்நூலும், அரசியலும், பொருளாதாரமும் ஆகிய எல்லாமுமே மிகப்பெரிய நல்ல மாறுதல்களுக்கு உள்ளாகும். இன்றுள்ள நிலைமையை மாற்றும் புரட்சியே, அணுவாற்றலாய் உருவெடுத்து வந்திருக்கிறது!

அணுவாற்றல் தொழில், இப்பொழுதே உலகின் பலபகுதிகளில் பயன்பட்டு வருகிறது. இன்று அமெரிக்காவிலும், கனடாவிலும் சுமார் 1000-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் தம் அன்றுட வேலைகளுக்கு அணுவாற்றலைப் பயன்படுத்திவருகின்றன. தாங்கள் செய்யும்பொருள்களின் கனிப்பகுதிகளைச் (உலோகப் பகுதிகளை) சரிபார்க்கவும், காகிதச்கு ஏற்றப்படும் வழவழப்பும், இரும்புக்குப் பூசப்படும் துத்தநாகப்பூச்சும் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்கவும் அணுவாற்றற் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன.

உற்பத்தி செய்யும் பொருள்களைக் குறைந்த செலவில் திற

மையாகச் சரிபார்க்க அணுவாற்றல் உதவுகிறது; இதனால் உற்பத்தி விரைவு கூடும்; உற்பத்திச் செலவு குறையும்.

கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் பொருளைக் காட்டும் அணுவாற்றல் பொருளும் தொழிலுலகில் மேல்மேலும் பயன்பட்டு வருகிறது. அணுக்கதிரியக்கமுள்ள ஒரு அணுவாற்றல் பொருளின் மூலம் ஒரே குழாயில் விடப்படும் இருவகை எண்ணெய்களைத் தனித்தனியே பிரித்து அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

பிசிட்டன் தேய்வை ஆராய்ந்து அறிதல், ரப்பர்—தாள்—கனித்தகடுகள் ஆகிய இவற்றின் கனத்தை அளத்தல், வார்ப்புப் பிழைகளைப் படம்பிடித்தறிதல், சாயம்—வண்ணம்—படிகம்—இரசாயன உப்பு முதலியவற்றின் கலப்படத்தை அறிதல் ஆகிய வேலைகளுக்குக் கதிரியக்கமுள்ள அணுவாற்றற் பொருள்களால் விரைவானவையும், மலிவானவையும், மிக்க திறமையானவையும் ஆன வழிதுறைகள் தோன்றியுள்ளன.

பயிர் வளர்ச்சி, மண்வளம் இவற்றைப் பற்றிய முக்கிய உண்மைகளைப் புலப்படுத்தும் ஆராய்ச்சியும் அணுவாற்றலின் உதவியால் நடந்துகொண்டிருக்கிறது.

அணுக்கதிரியக்கமுள்ள அணுவாற்றற் பொருள்களைக் கொண்டு நோய்களை எளிதாகவும், விரைவாகவும், நன்றாகவும் போக்கும் முறைகளை மருத்துவத்துறையில் கண்டு பிடித்துவருகின்றனர்.

அணுவிலிருந்து பொறியாற்றலை உற்பத்தி செய்து, அதனைக் கொண்டு பொறிகளை இயக்குவதற்கான வழிவகைகளைக் காணும் முயற்சியில் பலநாடுகள் முனைந்திருக்கின்றன. பிரிட்டனில் நிலக்கரிச் சுரங்கங்களின் வளம்குன்றுகிறபடியால் நிலக்கரி விலை ஏறிக் கொண்டே போகிறது. பிரிட்டிசுக்காரர்கள் அணுவாற்றலைப்பொறியாற்றலாகமாற்றுவதிலே மிக்க முயற்சி எடுத்துவருகின்றனர். நிலக்கரியால் கிடைக்கும் மின்னாற்றலை, அணுவாற்றலின் மூலம் கிடைக்கும்படிச் செய்து விட்டால், செலவும் குறையும், நிலக்கரிப் பற்றாக்குறையால் தவிப்பும் ஏற்படாது என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஐரோப்பாவில் பொறியாற்றல் தட்டுப்பாடு ஏற்படும் என்று நன்றாகத் தெரிகிறது. ஆகவே, அணுவாற்றல் ஐரோப்பாவுக்கு ஒரு பெரும் கருவூலமாகும். கடந்த 2000 ஆண்டுகளில் உலகில் எவ்வளவு ஆற்றல் பயன்பட்டதோ, அதைப்போல் 37 மடங்கு ஆற்றல், அடுத்த 100 ஆண்டுகளில் செலவாகும் என்று ஒருவர் மதிப்பிட்டிருக்கிறார். 12 ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து அணுவை அமைதிவேலைகளில் செலுத்தும் வழிதுறைகளை ஆராய வேண்டி சுவிட்சர்லாந்தில் செனிவாவுக்கு அருகே அணு உடைப்பன்

பொறியொன்றை அமைத்துவருகின்றன. இதைப்போல் பெரிய அணு உடைப்பான் உலகத்தில் வேறில்லை.

அணுவிலிருந்து மின்னுற்றல் எடுத்து விலைக்கு வழங்கும் திட்டம் அமெரிக்காவிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறது. அங்கே அணுவாற்றல் கமிசன் அத்தகைய தொழிற்சாலையை முதன் முதலாக அமைத்துவருகிறது.

அணு மின்னுற்றல், மற்றவகையில் மிகமிகத்திறமையாக உற்பத்தி செய்யப்படும் மின்னுற்றலைக்காட்டிலும் விலை மலிவாகக் கிடைக்கும்படி விரைவில் உற்பத்தியாகத்தொடங்கும் என்று சொல்ல இன்று நிபுணர்கள் தயங்குகிறார்கள். ஆனாலும் இன்று அமெரிக்காவில் மின்னுற்றல் உற்பத்தி செய்யலாம் என்பதை அறியாதார் ஒருவருமில்லை.

அணுவாற்றல் பொருள்களிலிருந்து கிடைக்கக்கூடிய சக்தி நிலக்கரி, எண்ணெ, வாயு இவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய சக்தியைவிட 20 மடங்கு அதிகம். நம்முடைய மக்கள் தொகைப் பெருக்கத்தைக்காட்டிலும் மிக வேகமாகப் பெருகுகிறது ஆற்றல் செலவாகும் வேகம். இன்றுள்ள இயற்கையானஎரிபொருள்களால் இனி ஏற்படும் தேவைகள் எல்லாவற்றையும் ஈடுசெய்ய முடியாது என்று எண்ணவேண்டியதாகிறது.

அணுவாற்றலின் மின்னுற்றலுக்கு இன்னும் ஒருவசதியுண்டு. அணுவாற்றல் பொருள்களில் ஆற்றல் மிகச் செறிந்திருக்கிறது. ஒரு ராத்தல் நிலக்கரியிலிருந்து ஒரு யூனிட் மின்னுற்றல் எடுக்கலாம். ஒரு ராத்தல் தசை கொடுக்கும் ஆற்றலைக்காட்டிலும் இது சுமார் 2000 மடங்கு பெரிது. ஆனால் ஒரு ராத்தல் யுரேனியத்திலிருந்து 235-லிருந்து 25,00,000 ராத்தல் நிலக்கரிக்குச் சமமான ஆற்றல் எடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இதில் நூற்றுக்கு ஒரு பங்கு கிடைத்தாலும் நிலக்கரி ஆற்றலைவிட அணுவாற்றல் 25,000 மடங்கு அதிகமாகும்.

'நாட்டிலஸ்' 'கடல் ஓநாய்' என இரு நீர் மூழ்கிக் கப்பல்கள் இன்று அணுவாற்றலால்மணிக்கு 20 கடல் மைல் வேகத்துக்கும் அதிகமாக இயங்குகின்றது. சில ராத்தல் யுரேனியத்தால் அவை கடலுக்கு அடியிலேயே ஆயிரக் கணக்கான மைல்கள் செல்லும்.

இனி அணுவாற்றலால் இயங்கும் கப்பல்களும், விமானங்களும், ரயில்வண்டிகளும் வரும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரச்னையுண்டு என்றாலும், அவை வரும் நாள் அதிக தூரத்தில் இல்லை. அணுசக்தியால் பொறிகள் இயங்கும். நம்முடைய நகரங்களில் மின்விளக்குகள் எரியும். அணுவாற்றலால் உணவு சமைப்போம், நோய்கள் குணமாகும். அத்தகைய காலம் விரைவில் வருகிறது என்று தயங்காமல் உரைக்கலாம்.

சிக்கன முறையில் கடல்நீரைச் சுத்தமாக்கி உழவுக்கும் தொழிலுக்கும் உகந்தவாறு செய்ய வேண்டும். மனிதர் மலம், நீர் முதலியவற்றையும் தொழிற்சாலைக் கழிவுகளையும் உடனுக்குடன் பொசுக்கவேண்டும். இவையிரண்டும் நாகரிகத்தின் இரு பெரும் பிரச்னைகள். இவற்றை அணுசக்தி தீர்த்துவிடும். அது ஒன்றே தீர்க்கவல்லதுமாகும்.

உலகத்தின் இயற்கை வளத்தைத் திறந்து அள்ளுவதற்கு அணுவாற்றல் திறவுகோலாகும். அது மட்டுமல்ல. உலகின் பிணிகளையும், தீமைகளையும் ஒளித்து வைத்திருக்கும் பெட்டி போலத் தோன்றினும் அதனைத்திறந்து விட்டால், அவையெல்லாம் மறைந்துபோய்விடும். அணுவாற்றல் பற்றிய தொழில் நுட்பம் ஏற்கெனவே விரைவில் வளர்ந்துவருகிறது. இந்தப் புதிய காலத்தின் பொருளாதாரத்தைப்பற்றி இலேசாக அறியத்தொடங்கியுள்ளோம். உலகத்தையே அழிக்கக்கூடிய இந்தஅணுவாற்றலை அடக்கியாளும் குறைவற்ற பொறுப்புணர்ச்சி அமைந்த அமைதிதான் வேண்டும். ★

—"மன்றம்"

—❋—

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"

❋

94–95, புதுத்தெரு, மண்ணடி
சென்னை–1.

❋

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

Form of Certificate of Income.
வருமான வரி
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

❋

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

## ஏழை மாணவர்களுக்குச் சலுகை

### 'நற்சான்று' வழங்க மேலும் பலருக்கு அதிகாரம்

ஏழை மாணவர்களுக்குக் கல்விச் சலுகை அளிப்பது சம்பந்தமாக, மாணவர்களின் பெற்றோர், அல்லது பாதுகாப்பாளரின் நிதி நிலைமை குறித்து நன்ருகத் தெரிந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அவர்களது வருட வருமான அத்தாட்சிப் பத்திரம் வழங்கலாமென சென்னை சர்க்கார் அதிகாரம் வழங்கியிருக்கிறது.

சென்னை மாநிலத்தைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில சட்டசபை, மேல்சபை உறுப்பினர்கள், நகரமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக உறுப்பினர்கள், எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் ஆகியோரும், சர்க்கார் உத்தரவுப்படி இனிமேல் மேற்கண்ட அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதற்குரிய அதிகாரம் பெறுகின்றனர்.

சர்க்கார் குறிப்பிட்டுள்ள நமூனைப்படி, அந்த அத்தாட்சிப் பத்திரங்களில் 'கர்ணம்' அல்லது கிராம அதிகாரியின் கையொப்பம் தேவையில்லை.

ஆனல் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் மேற்படி நபர்கள், 'எனக்கு நன்ருகத் தெரிந்தவரையில் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரியானவை' என்று கையெழுத்திட்டு வழங்கவேண்டும்.

இந்த உத்தரவுகள் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப் படுமென்றும், ஆனல் இது 1955—56-ம் கல்வி ஆண்டில் மட்டும்தான் அமுலிலிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆசிரியர்களின் ஊதியம்

அடுத்த 5 ஆண்டு திட்டத்தின் போது எல்லா வகை ஆசிரியர்களுக்கும் அதிகச் சம்பளம் கிடைக்கும். பயிற்சிபெருத ஆரம்ப ஆசிரியரின் அடிப்படைச் சம்பளம் ரூ. 50 ஆக இருக்கும். 1080 கோடி ரூபாய் செலவிட கல்வி இலாகா தயாரித்துள்ள திட்டப்படி 75 சத விகித சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்விக்கும், 30 சத விகிதத்தினருக்கு நடுத்தரக் கல்விக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. மொத்தம் ஆரம்பப் பள்ளிகளை 120000 ஆக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற மெட்ரிகுலேஷன் தேருத வாத்தியாருக்கு ரூ. 60 அடிப்படை சம்பளமும், மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தவருக்கு ரூ. 75 அடிப்படை சம்பளமும் அளிக்க வகை செய்யப்படும்.

நடுத்தரப் பள்ளிகளில் பட்டம் பெருத பயிற்சி பெற்ற வாத்தியார்களுக்கு ரூ. 100ல் தொடங்கி ரூ. 200 வரை சம்பளம் உயரும். பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்கு ரூ. 150 - 300. ஹெட்மாஸ்டருக்கு ரூ. 230–500 சம்பள திட்டம் இருக்கும்.

# சென்னை சர்க்காரின் 2-வது ஐந்தாண்டுத் திட்டம்

## மாணவர்களுக்கு இலவசப் பகல் உணவு: ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவதற்கென சென்னை சர்க்கார் ரூ. 400 கோடி செலவில் திட்டங்கள் தயாரித்துள்ளது.

அத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு ரூ. 30 கோடி ;

சிறிய கிராமத் தொழில்களுக்கு ரூ. 40 கோடி ;

கல்விக்கு ரூ. 45 கோடி.

இதர இனங்களில், விவசாயம், வனம், பால் பண்ணை, மீன் இயல் ஆகியவற்றிற்கு ரூ. 36 கோடி; நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றிற்கு ரூ. 33 கோடி ; கூட்டுறவிற்கு ரூ. 8 கோடி; பட்டுத் தொழில், தொழில் நுணுக்கக் கல்விக்கு ரூ. 2 கோடி; கைத்தறிக்கு ரூ. 9 கோடி; கிராம அபிவிருத்தி, உள்நாட்டுப் படகுப் போக்குவரத்துக்கு ரூ. 20 கோடி ; மருத்துவம், பொது சுகாதாரத்திற்கு ரூ. 22 கோடி ; தண்ணீர் வினியோகத்திற்கு ரூ. 23 கோடி; குடியிருப்பு வசதிக்கு ரூ. 6 கோடி; நகர அமைப்புக்கு ரூ. 9 கோடி ; தாழ்த்தப்பட்டோர், மலைவகுப்பினர் ஆகியோர் முன்னேற்றத்திற்கு ரூ. 5 கோடி; சமுதாய அபிவிருத்திக்கு ரூ. 22 கோடி; தல அபிவிருத்திக்கு ரூ. 4 கோடி; தல நிறுவனங்களுக்கும் சென்னை நகர சபைக்கும் கடன் ரூ. 10 கோடி; பெண்கள் நலம், இளம் குற்றவாளிகளின் பள்ளிகள் விளம்பரம், மற்ற இனங்களுக்கு ரூ. 2 கோடி.

'பெரிய தொழில்கள்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதில் ரூ. 10 கோடி செலவில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையும், ரூ. 7 கோடி செலவில் ஒரு சோடா உப்பு உற்பத்திச்சாலை, காகித ஆலை, பீங்கான் சாமான்கள் உற்பத்திச்சாலை ஆகியவைகளும் அடங்கியிருக்கின்றன.

நெய்வேலியில் ஒரு இரசாயன உர (அலுமினியம் சல்பேட்) உற்பத்திச்சாலை ஏற்படுத்துவதற்கான யோசனையும் அத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம் !

பெரும்பாலும் காகித ஆலை நீலகிரி அல்லது மலபாரிலும், பீங்கான் சாமான் உற்பத்தித்

தொழிற்சாலை நெய்வேலித் திட்டப் பகுதியிலும், அலுமினியம் தொழிற்சாலை சேலத்திற்கு அருகிலும் நிறுவப்படலாமென உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

எந்தத் தொழிற்சாலையும் தனிப்பட்டவர் துறைக்கும் விடப்படும் என்றும், பொதுவாக எந்தெந்த தொழிற்சாலைகளை சர்க்கார் மேற்கொள்ளும் என்று தெரியாவிட்டாலும், பெரும்பான்மையான சர்க்கரை, சிமெண்ட் உற்பத்திச்சாலைகள் தனியார் நிறுவனங்களிடமே விடப்படுமென்பது நிச்சயம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. தனிநபர் துறைகட்கு ரூ. 20 கோடி வரையிலும் நிதி உதவி கிடைக்கலாம் என்று தெரியவருகிறது.

இத்திட்டத்தில், கல்வித்துறையைப் பொறுத்தவரையில், மாணவர்களுக்கு இலவசப் பகல் உணவு கிடைக்கவும், ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் தரப்படவும் வழி செய்யப்பட்டுள்ளதாம்! ஆனால், கல்வித்துறையில் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தற்போதைய தொகை, இது குறித்து அமைச்சர்கள் கூட்டத்திற்கு முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்த தொகையை விட குறைவு என்று சொல்லப்படுகிறது. ★

---

## கருத்துக் கதிர்

தொண்டினும் சிறந்ததொன்று இல்லை. தொண்டே எனது வாழ்க்கை; எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயம்; எல்லாம்—எல்லாம். விளைவு என்ன ஆயினும் ஆக. என் கடன் பணி செய்து கிடப்பதே.

—திரு. வி. க.

வாழ்க்கை ஒரு விசித்திரமான போர். இந்தக் கடுமையான போரில் மனிதன், சமூகத்தோடும் தன்னிடம் அன்பு செலுத்தும் உறவினர்களோடும் தன்னோடும்கூடப் போராட வேண்டியிருக்கிறது.

—காண்டேகர்.

எழுந்திரு எழுந்திரு உடனே பணிசெய்.
எதையும் தாங்க இதயம் உண்டு.
வெற்றிகள் பெற்றால், மேலும் பெற்றிட
விசைந்திடு விசைந்திடு. வெற்றிகள் உறுதி.

—கரி லாங்பெல்லோ

---

Edited, Printed and Published by P. Veeraraghavan
at the 'Venkatesan Press'
94/95 New St. Mannady, Madras. 1.

CONNEMARA PUBLIC LIBRARY 6 - AUG 1956 MADRAS

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 4 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 8 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 9 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 10 0 | 25 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிக்கு 1—2—0 அனுப்பவும்.

## கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

| | | | |
|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | |
| நான்காம் வகுப்பு | 0 5 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 5 0 | 59 | 19–5–'54 |

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–5–0 அனுப்பவும்.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc. L. T.)

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 18 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T)

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 8 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்களை மாதிரி பிரதிகளாக வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.


## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

| | புத்தகத்தின் விலை | கெஜட பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 8 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 14 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–15–0 அனுப்பவும்.

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 10 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–11–0 அனுப்பவும்.

## தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| 4, 5–வது வகுப்புகளுக்கு | 0 5 0 | 8 | 4–5–'55 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–2–0 அனுப்பவும்.

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 13 | 19–5–'54 |

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 12 | 19–5–'55 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 1–1–0 அனுப்பவும்.

**Mother India English Reader Primer - I** 0–5–0

மாதிரிப் பிரதிகளுக்கு 0–2–0 அனுப்பவும்.


Printed at the Venkatesan Press, Madras—1.